கோகுலம்

GOKULAM

ஏப்ரல் '87 ரூ. 2.





வில்லியம் ஷேக்ஸ்பியர்

தோற்றம் : 23-4-1564 மறைவு : 23-4-1616



உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்

கோகுலம்

1987 ஏப்ரல் மாத இதழ்
மலர் 5 · இதழ் 3
தனிப்பிரதி ரூ. 2/—
ஆண்டுச் சந்தா ரூ. 24/—
கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா



புகைப்படம்: எம். நடராஜன்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

தமிழ்ப் புத்தாண்டு விரைவில் பிறக்கவிருக்கிறது. இப்போதே உங்கள் அனைவருக்கும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்தத் தமிழ் ஆண்டின் பெயர் 'அட்சய' என்பது பலருக்குத் தெரிந்திருக்கும். பிறக்கப் போகும் தமிழ் ஆண்டின் பெயர் என்ன என்று தெரியுமா?

'பிரபவ'

தமிழ் ஆண்டுகள் மொத்தம் அறுபது என்பது தெரிந்ததே. ஆயினும், எத்தனை பேருக்கு இந்த அறுபது ஆண்டுகளின் பெயர்களையும் வரிசையாகச் சொல்லத் தெரியும்?.

ஆங்கில ஆண்டு, மாதம், தேதிகளையே நாம் தொடர்ந்து பார்த்து வருவதால், அந்த அடிப்படையை வைத்தே நாம் எல்லாம் செய்கிறோம். தினசரி தேதி கிழிக்கும் காலண்டர்களில் மட்டுமே ஆங்கில ஆண்டு, மாதம், தேதி ஆகியவற்றுடன் தமிழ் ஆண்டு, மாதம், தேதிகளைக் காணமுடிகிறது. திருமண அழைப்பிதழ்களிலும் இவற்றைக் காண்கிறோம்.


உலகிலுள்ள எத்தனையோ செய்திகளை நாம் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறோம். நமது முன்னோர்கள் பயன்படுத்தி வந்த தமிழ் ஆண்டுகளின் பெயர்களையும், மாதங்களையும், தேதிகளையும் மறந்துவிடலாமா? கூடாது.

கோகுலத்துக்கு அனுப்பப்படும் கதை, கவிதை, கட்டுரைகளைப் பரிசீலனை செய்து நல்லனவற்றைத் தேர்ந்தெடுக்கிறோம். அப்படித் தேர்ந்தெடுக்கப் பெறும் எல்லாவற்றையுமே வெளியிடத்தான் முயலுகிறோம். ஆயினும், மாத இதழாக இருப்பதால், சிலவற்றைத்தான் வெளியிட முடிகிறது. அவற்றை வெளியிடுவதற்கு முன்பு அவற்றை எழுதியவர்களுக்குக் கடிதம் எழுதிப் புகைப்படம் அனுப்பும்படி கேட்கிறோம்.

சிலர் விஷயங்களை எழுதி அனுப்பும்போதே புகைப்படங்களையும் கூடவே அனுப்பிவிடுகின்றனர். அப்படி அனுப்பத் தேவையில்லை. நாங்கள் கேட்ட பிறகு அனுப்பினால் போதும்.

— அழ. வள்ளியப்பா


இந்த இதழ் எழுத்தாளர்கள்



மணவை இதயராஜ்



உமா குமார்



மாலை என். ஆறுமுகம்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்



இரா. கிருஷ்ணமூர்த்தி




மு. இந்திரா ஆதித்தன்



இரா. புவனேஸ்வரி


பிருந்தாவனக் கவிஞர்கள்



வி. ரமேஷ்



கே. வெங்கடேசன்



வே. இராமசாமி

மின்மினிக் கதைகள்



கஞ்சனின் நெஞ்சம்

ஓர் ஊரில் ஒரு கஞ்சன் இருந்தான். இப்படி அப்படிக் கஞ்சன் இல்லை. மகா கஞ்சன். சாப்பிடும் பொழுது காக்காயைப் பார்த்துவிட்டால் கையை நன்ருக நாக்கால் நக்கிவிட்டு, பிறகு எழுந்து சென்றுதான் ஓட்டுவான்.

ஒருநாள் அவனுடைய பையன் அம்மாவிடம் பத்துக் காசு வாங்கிக் கொண்டு கடைக்குப் போனுன். வழியில் தெரியாத்தனமாக அந்தப் பத்துக் காசை விழுங்கிவிட்டான். பிறகு அழுது கொண்டே வந்து அம்மாவிடம் சொன்னுன்.

அவள் துடித்துப் போனுள். குழந்தையின் உயிருக்கே ஆபத்து என்று சொல்லி அழுதாள்.

அவளுடைய வற்புறுத்தல் தாளாமல், கஞ்சன் டாக்டரை வரவழைத் தான். அவர் குழந்தைக்கு மருந்து கொடுத்து அந்தப் பத்துக் காசு வெளியே வருமாறு செய்துவிட்டார். அதற்குக் கட்டணமாகப் பத்து ரூபாய் வாங்கிக் கொண்டு போய்விட்டார்.

அந்தத் தாய், குழந்தைக்கு ஆபத்தில்லாமல் போனது பற்றி ஆனந்த மடைந்தாள். ஆனுல் கஞ்சன் மனவாட்டத்துடன் உட்கார்ந்திருந்தான். அப் பொழுது அவனைப் பார்த்த ஒருவர், ''ஏன் சோகமாய் இருக்கிருய்?'' என்று கேட்டார்.

''என் பையன் பத்துக் காசைத்தான் விழுங்கினுன். இந்த டாக்டர் பத்து ரூபாயை விழுங்கிவிட்டாரே! என்னுல் அந்த அதிர்ச்சியைத்தான் தாங்க முடியவில்லை....'' என்று அழுதான் கஞ்சன்.

ராஜா கொடுத்த பூசணிக்காய்


ராஜாவும் மந்திரியும் ஒருநாள் மாறுவேடத்தில் நகர் சோதனைக்குப் புறப்பட்டார்கள்.

ஒரு வீட்டில் மனைவி தன்னுடைய வறுமையையும் குழந்தைகளின் பரிதாப நிலையையும் எடுத்துரைத்து கணவனிடம் புலம்பிக் கொண்டிருந்தாள். அதற்குக் கணவன் "ராஜா கண் பார்ப்பார், பொறுத்திரு!" என்று பதில் சொன்னான்.

இன்னொரு வீட்டிலும் மனைவி இப்படிக் கணவனிடம் அழுது புலம்பினாள். அதற்குக் கணவன், "கடவுள் கண் பார்ப்பார், பொறுத்திரு!" என்று பதில் சொன்னான்.

இந்த இரண்டையும் கேட்ட ராஜா மந்திரியைத் திரும்பிப் பார்த்து, "இவர்களில் யார் சொல்வது சரி?" என்று கேட்டார்! 'ராஜா கண் பார்ப்பார்' என்று சொன்னவனைவிட, 'கடவுள் கண் பார்ப்பார்' என்று சொன்னவனே சரி. அவனே பலனடைவான்...." என்றார் மந்திரி. ராஜா அதைச் சோதித்துப் பார்க்க விரும்பினார்.

அரண்மனைக்குத் திரும்பியதும் ஒரு பூசணிக்காயைக் கொண்டு வரச் சொல்லி அதில் துவாரம் போட்டு, உள்ளேயிருந்த விதைகளை அகற்றிவிட்டு, அதற்குப் பதிலாகப் பொற்காசுகளை நிரப்பி மூடினார். இது யாருக்கும் தெரியாது. பிறகு, 'ராஜா கண் பார்ப்பார்' என்று சொன்னவனை வரவழைத்து, அவனுக்கு அந்தப் பூசணிக்காயை அன்பளிப்பாகக் கொடுத்தனுப்பினார்.



அன்றிரவு ராஜாவும் மந்திரியும் மாறு வேடத்தில் நகர் சோதனைக்குப் புறப்பட்டார்கள். 'ராஜா கண் பார்ப்பார்' என்று சொன்னவன் வீட்டில் என்ன நடக்கிறது என்று மறைந்திருந்து கேட்டார்கள்.

கணவன் வெறுப்போடு மனைவியிடம் சொன்னான்: "நான் இவ்வளவு நாள் 'ராஜா கண் பார்ப்பார்' என்று காத்திருந்தேன். ராஜா என்னைக் கூப்பிட்டனுப்பி ஒரு பூசணிக்காயைக் கொடுத்தார். இந்த ராஜாவுக்கு வந்த புத்தியைப் பார்த்தாயா? கேவலம் ஒரு பூசணிக்காய்! வழியில் அதை நான் ஒரு கடைக்காரனிடம் விற்றுவிட்டேன். இனிமேல் ராஜாவை நம்பிப் பிரயோசனம் இல்லை...." என்றான். அதைக் கேட்ட ராஜா அதிர்ச்சியும் ஏமாற்றமும் அடைந்தார்.

அதன்பிறகு ராஜாவும் மந்திரியும், 'கடவுள் கண் பார்ப்பார்' என்று சொன்னவன் வீட்டிற்குப் போய் மறைந்திருந்து கேட்டார்கள். 'கடவுள் கண்

பார்ப்பார்' என்று நான் சொன்னது உண்மையாகிவிட்டது. கடவுள் கண் பார்த்துவிட்டார். இன்றைக்குக் கடையில் நான் ஒரு பூசணிக்காய் வாங்கினேன். அதை அறுத்த பொழுது பூசணிக்காய் நிறைய பொற்காசு இருந்தது. கடவுள் அருளால் நம்முடைய வறுமை இன்றோடு ஒழிந்தது'' என்று கணவன் மகிழ்ச்சியுடன் மனைவியிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

மாங்காய்த் திருடன்

ஒரு வீட்டுத் தோட்டத்திலிருந்து மாங்காய் திருட்டுப் போவதாகப் புகார் வந்தது. சம்பந்தப்பட்ட போலீஸ் நிலையத்தின் இன்ஸ்பெக்டர் இரண்டு கான்ஸ்டேபிள்களை அங்கே காவலுக்குப் போட்டார்.

இரண்டு கான்ஸ்டேபிள்களும் யாருக்கும் தெரியாமல் அன்று காலையிலிருந்து மாங்காய்த் திருடனைப் பிடிப்பதற்காகப் பதுங்கியிருந்தார்கள். காலை போய் மாலை வந்தது. ஒருவரும் மாங்காய் திருடிக் கொண்டு போகவில்லை. மாலை மங்கித் தேய்ந்து இரவு படர்ந்தது. அப்பொழுதும் ஒன்றும் நடக்கவில்லை.

''என்ன அண்ணே, மாங்காய்த் திருடனை காணோம்?'' என்று கேட்டார் ஒரு கான்ஸ்டேபிள்.

''தம்பி, நாம் வந்திருப்பதை யாரோ உளவாளி சொல்லியிருப்பானோ? பாதகமில்லை. பொழுது விடியும் மட்டும் இருந்து பார்த்து விடுவோம், எவனாவது இந்த வீட்டிலிருந்து மாங்காய் கடத்திக் கொண்டு போகிறானா என்று பார்ப்போம்...'' என்று அவனுக்குப் பதில் சொன்னார் மற்ற கான்ஸ்டேபிள்.

திடீரென்று ஒரு காட்சி. ஒரு பெரிய கூடையைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு ஓர் உருவம் சுற்றும்முற்றும் பார்த்தபடி அந்த வீட்டிலிருந்து



நகர்ந்து வந்தது. இரண்டு கான்ஸ்டேபிள்களும் பதுங்கிச் சென்று அந்த உருவத்தின் மீது பாய்ந்து பிடித்துக் கொண்டார்கள். ''மாட்டிக் கொண்டாயா? மாங்காய்த் திருடன்தானே நீ?''

''நான் மாங்காய்த் திருடன் இல்லை! மாங்காய்த் திருடன் இல்லை!'' என்று அவன் பரிதாபமாகக் கதறினான்.

''அதைத்தான் பார்க்கலாம்!'' என்று கான்ஸ்டேபிள்கள் அந்தக் கூடையை மூடியிருந்த துணியை எடுத்துவிட்டுப் பார்த்தார்கள். ஒரே ஏமாற்றம்! அந்தக் கூடையில் ஒரு மாங்காய் கூட இல்லை. ஒரே வெள்ளிப் பாத்திரங்களாக இருந்தன.

''மாங்காய்த் திருடனைப் பிடிக்கும்படி எங்களுக்கு உத்தரவு.

நல்லவேளை, உன் கூடையில் மாங்காய் இல்லை. தப்பித்துக் கொண்டாய். மாங்காய் மட்டும் இருந்திருந்தால் உன்னை இந்நேரம் உள்ளே தள்ளியிருப்போம்'' என்று கான்ஸ்டேபிள்கள் அந்த ஆளைப் போக விட்டு விட்டார்கள்.

அடுத்த நாள், அந்த வீட்டிலிருந்து வெள்ளிப் பாத்திரங்கள் களவு போய் விட்டதாகப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் புகார் வந்தது.

— மு. முத்துக்காளத்தியின் 'குழந்தைகள் விரும்பும் குட்டிக் கதைகள்' என்ற புத்தகத்திலிருந்து.
கிடைக்குமிடம்: பாரி நிலையம், சென்னை — 108.

கொஞ்சம் சிரியுங்கள்

திருடனுக்கு மரியாதை!



''திருடனுக்குக் கூட நாம் மரியாதை கொடுத்தால் ஓடியே போய்விடுவான்.''

''அப்படியா!''

''ஆமாண்டா. நேத்து எங்க வீட்டிலே நான் மட்டும் தனியாக இருந்த போது ஒரு திருடன் மெதுவா உள்ளே வந்தான். உடனே நான், 'திருடர், திருடர்' என்று குரல் கொடுத்தேன். ஓடியே போயிட்டான்.''

— டி. எல். ரெட்டி.


வால் பறவை



''வால் முளைச்ச பறவை எது தெரியுமா?''

''வௌவ்வால்!''

— கடலூரர் கன்னியப்பன்.




ஒட்டுவதற்கு

''டாக்டர்! நான் எதைச் சாப்பிட்டாலும் ஒடம்புல ஒட்டவே மாட்டேன் என்கிறது, டாக்டர்!''

''கவலைப்படாதீங்க! இந்த மருந்தில் கோந்து கலந்து கொடுத்து இருக்கேன்!''

— கடலூரர் கன்னியப்பன்.



உல்லாச உலகம் உமக்கே சொந்தம்

பெரியவர்கள் விளையாடுவதற்கும், பொழுது போக்குவதற்கும் நிறைய இடங்கள் உள்ளன. ஆனால், குழந்தைகள் அந்த மாதிரி விளையாடுவதற்கும், பொழுது போக்குவதற்கும் ஏதாவதொரு தனி இடம் இருக்கிறதா?


இருக்கிறது. அதுதான், 'அன்னை இந்திராகாந்தி குழந்தைகள் உல்லாச உலகம்.' இது நிரந்தரமானது; எப்போது வேண்டுமானாலும் போய்ப் பார்க்கலாம். அங்கேயே நாள் முழுவதும் இருந்து, விளையாடி மகிழ்ச்சியுடன் பொழுதைக் கழிக்கலாம்.


அப்படியா? இந்த உல்லாச உலகம் எங்கே இருக்கிறது?

சென்னைத் தீவுத் திடலில், அகில இந்தியச் சுற்றுலா தொழில் பொருட்காட்சி நடக்கும். அதே இடத்தில்தான் இது உள்ளது. வழக்கம் போல சுற்றுலாப் பொருட்காட்சி நடந்து முடிந்த பிறகும் கூட, இந்தச் சிறுவர் உல்லாச உலகம் ஆண்டு முழுவதும் அப்படியே இருக்கும்.

இங்கே என்னென்ன இருக்கின்றன?

40 அடி நீளமும் 20 அடி உயரமும் உள்ள புலி, 30 அடி நீளமும் 20 அடி உயரமும் உள்ள யானை, 15 அடி நீளமும் 30 அடி உயரமும் உள்ள ஒட்டகச் சிவிங்கி, 20 அடி நீளமும் 20 அடி உயரமும் உள்ள மான், 40 அடி நீளமும் 20 அடி உயரமும் உள்ள அன்னப் பறவை.... மலைக்காதீர்கள். இவை எல்லாம் மிகப் பெரிய





அளவில் அமைக்கப்பட்ட பொம்மைகள்தாம்!

ஓர் ஏக்கர் பரபரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்த அழகிய உலகத்தில், குழந்தைகள் ஆடிப் பாடி விளையாட ஐந்து லட்ச ரூபாய் மதிப்புள்ள 20 வகையான விளையாட்டுச் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. பலவகையான சறுக்கு மரங்கள், ராட்டினம், ஊஞ்சல், செயற்கைக் கோள், கடிகாரம் மற்றும் ஏ, பி, சி வடிவிலான விளையாட்டுச் சாதனங்கள் முதலியன இங்கே உள்ளன. உடல் ஊனமுற்ற குழந்தைகள் பயன்படுத்தும் விளையாட்டுச் சாதனங்களும் இங்கே அமைக்கப்பட்டுள்ளது சிறப்பு அம்சமாகும்.

விளையாட்டுச் சாதனங்கள் மட்டுந்தானா? கண்ணுக்கு விருந்தூட்டும் காட்சிகளும் இங்கே நிறைய உண்டு.

தந்திரக் காட்சிகள் உங்களை வியப்பில் ஆழ்த்தும். பொய்க்கால் குதிரையாட்டம், இளைஞர்கள் ஆடும் நடனங்கள், கராத்தே, கரக ஆட்டம், சிலம்பாட்டம், காவடியாட்டம் ஆகியவை உங்களைக் குதூகலிக்கச் செய்யும்.

இங்கே, இசைக்கேற்ப ஆடுவது இளைஞர்கள் மட்டுமல்ல; நீரூற்றும் கூட! ஆம்; 108 கண்கள் உள்ள வண்ண நீரூற்று உங்கள் எண்ணத்தைக் கவரும்!

தீயவை பேசாதே — தீயவை பார்க்





காதே — தீயவை கேளாதே என்ற கருத்தை விளக்கும் காந்தியடிகளின் மூன்று குரங்குகள் பொம்மையின் தத்துவம் ஒளி விளக்கின் மூலம் விளக்கப்படுகிறது.

"மிக நன்ருக வளர்க்கப்படும் குழந்தைகளின் கைகளிலேயே இந்தியாவின் முன்னேற்றம் இருக்கிறது" என்ற பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் வாசகமும் —

"இன்றைய குழந்தைகள் எதிர்கால இந்தியாவின் தூண்கள்" என்னும் திருமதி இந்திரா.காந்தி அவர்களின் வாசகமும், "நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி, இந்த நாடே இருக்குது தம்பி" என்னும் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாசகமும் —

அவர்களது மிகப் பெரிய கட்—அவுட் படங்களின் கீழே பொறிக்கப்பட்டிருப்பது கருத்தைக் கவருவதாக உள்ளது.


இந்துக்களின் திருக்கோயில், கிறிஸ்தவர்களின் தேவாலயம், முஸ்லிம்களின் மசூதி ஆகியவை, ஒளி விளக்குகளின் மூலம் மாறி மாறிக் காட்சியளிப்பது ஒருமைப்பாட்டை உணர்த்துவதாகும்.

பொம்மை யானையைப் பார்த்த உங்களுக்கு, நிஜ யானை மீது சவாரி செய்ய வேண்டும் என்ற ஆசை வருவது இயல்புதானே? அதோ, ஒரு யானை வண்ணத் துணியைப் போர்த்திக் கொண்டு தயாராக நிற்கிறதே! அங்கே ஒரு குதிரை கூட உங்களை ஏற்றிச் செல்லக் காத்திருக்கிறதே!

யானை, குதிரைச் சவாரி செய்தாகி விட்டது. ரயிலில் போக வேண்டாமா? உங்களுக்காகவே 'அறிஞர் அண்ணா சிறுவர் ரயில்' இங்கே ஓடிக் கொண்டிருக்கிறது. அதற்காக நிரந்தரமான பிளாட்பாரம்கூடக் கட்டப்பட்டிருக்கிறது. ஒரே சமயத்தில் 108 பேர் செல்லக் கூடிய இந்த டீசல் ரயில், 2000 அடி சுற்றளவில் ஓடும். இந்த அழகிய குட்டி ரயில், மிகப் பெரிய ஐயனார் கோயில் குதிரையின் நான்கு கால்களுக்கு இடையில் நுழைந்து வருவதும், ராட்சச அன்னப் பறவையின் வயிற்றுக்குள் புகுந்து வருவதும் மகிழ்ச்சியாக இருக்கும். இந்தப் பிரம்மாண்டமான அன்னப் பறவையின் கழுத்துப் பகுதி, இப்படியும் அப்படியும் திரும்பும்போது உயிருள்ளது போலவே தோன்றும்.

பெரியவர்கள், தங்கள் குழந்தைகளை இங்கே அழைத்து வரலாம். தாங்கள் கொண்டு வரும் கட்டுச் சோற்றை உண்டு, இளைப்பாறி, குழந்தைகள் ஆடித் திரிவதைக் கண்டு மகிழலாம்.





சிற்றுண்டி கொண்டு வராதவர்கள், அருகே உள்ள 'ஓட்டல் தமிழ்நாட்டில்' தரமான சுவையான சிற்றுண்டியைச் சாப்பிடலாம்.

அன்னை இந்திரா காந்தி சிறுவர் உலகத்தில் நுழைய, கட்டணம் எவ்வளவு தெரியுமா? ஒரே ஒரு ரூபாய் தான்!

கூட்டமாக வரும் பள்ளி மாணவர்களுக்குச் சலுகைக் கட்டணம் உண்டு. அவர்களை அழைத்து வரும் ஆசிரியர்கள் இலவசமாக அனுமதிக்கப்படுவர். உடல் ஊனமுற்ற குழந்தைகள், அனாதை இல்லம் மற்றும் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு அனுமதி இலவசம்.

'இதுபோன்ற உல்லாச உலகம் வேறு எந்த மாநிலத்திலாவது உள்ளதா?' எனச் சுற்றுலாப் பொருட்காட்சியின் தனி அலுவலர் திரு. எஸ். துரைராஜ் அவர்களைக் கேட்ட போது அவர் கூறினார்:

''புதுடில்லியில் பிரகதி மைதானத்தில் குழந்தைகளுக்கான உல்லாச உலகம் ஒன்று உள்ளது. அதற்கு 'அப்பு கார்' என்று பெயர். அப்பு என்றால் யானை. கார் என்றால் வீடு. 'யானை வீடு' என்று இதற்குப் பொருள். அது பெரிய அளவில் அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழகச் சுற்றுலாத் துறை மூலம் ஒரு குழு போய் அந்த இடத்தைப் பார்த்துவிட்டு வந்துள்ளது. அதைப் போல இங்குள்ள உல்லாச உலகத்தையும் விரிவுபடுத்த எண்ணியுள்ளோம்.

''யானை, குதிரைச் சவாரி போல, ஒட்டகச் சவாரிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இங்கே விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, வெற்றி பெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கவும் திட்டமிட்டுள்ளோம். மேலும் குழந்தைகள் மனத்தைக் கவரத் தக்க வகையில் என்னென்ன வசதிகள் செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் படிப்படியாகச் செய்ய எண்ணியுள்ளோம்.''

உடற்பயிற்சி ஆசிரியராகப் பணியாற்றி, படிப்படியாக முன்னேறி, தனி அதிகாரியாகியுள்ள எஸ். துரைராஜ் அவர்களுக்கு அரும்புகளின் மனம் நன்கு தெரிந்திருக்கிறது!

வண்ண மலர்களைப் போல வந்து விளையாடும் குழந்தைகளைப் பார்க்கும் போது, மகாகவி பாரதியாரின் வாசகமே நினைவுக்கு வருகிறது:

'எல்லாரும் ஓர் இனம்;
எல்லாரும் ஓர் நிறை;
எல்லாரும் இந்நாட்டு மன்னர்!'

— பொ. மறைமலை



கண்ணா, தமிழ்ப் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்! இந்தா கோகுலம்!
ரொம்ப தாங்ஸ்! கொண்டாங்க!
இந்தகோபிகள் ரொம்பமோசம்! பௌடர்பாலைக் காய்ச்சிவெண்ணை எடுத்து வச்சிடறா! வெண்ணையில் கொஞ்சங்கூட டேஸ்டே இல்லே!
கோகுலத்தில்
கண்ணா! நம் சபாவில் இந்த வருஷம் உன் புல்லாங்குழல்கச்சேரி வைக்கணும் எந்தத் தேதி சவுகரியப்படும?
டேய்! கண்ணன் வாயைத்திறந்தா; டீ.வி.யில் பார்க்கற மாதிரி எல்லாமே பார்க்கலாம்!





சிரிப்பொலி!!
தஞ்சை மாலா.
கண்ணா, இந்தமாதிரி விஷமம் பண்ணி படுத்தி வெச்சா, நர்சரிஸ்கூல்லே கொண்டு சேர்த்துடுவேன்!
ஏய்! கண்ணனுக்கு சகடாசுர வதம்; ஞாபகத்துக்கு வந்துடுத்து! போலிருக்கு!
கண்ணனை ஆட்டத்தில் சேர்த்துக் கொண்டால்! மாயா ஜாலம் பண்ணியே விக்கெட்டுகளை தட்டிக் கொண்டு போயிடுவான் ஜாக்ரதை!!!
கண்ணா, வெண்ணை திருட வரல்லியா?
கோதலம் படிக்கணும்! நான் வரல்லே!

(வி)சித்திரச் செய்திகள்

மிக நீளமான கார்!

உலகிலேயே மிகவும் நீளமான கார் அமெரிக்காவில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்கு 10 சக்கரங்கள், காரிலேயே நீச்சல் குளமும் உண்டு. தவிர, டீ. வி., ஃப்ரிட்ஜ், அடுப்பு, மீன் தொட்டிகள் முதலியவையும் இருக்கின்றன.






சிப்பின் மதிப்பு 6 லட்சம்!

சென்ற ஆண்டு, பிலிப்பைன்ஸ் நாட்டு ஜனாதிபதி மார்க்கோஸ், பதவி இழந்து ஓடிய போது அவருடன் எடுத்துச் சென்ற ஒரு சிப்பின் மதிப்பு மட்டும் ரூ. 6 லட்சம்! தங்கத்தில் வைரக்கற்கள் பதித்துச் செய்யப்பட்ட சிப்பு அது!

தண்ணீரால் ஓடும் கார்!

கார்னிஸ் என்னும் ரஷ்ய நிபுணர், தண்ணீரை எரிபொருளாகக் கொண்டு, ஓடக் கூடிய காரை உருவாக்கியிருக்கிறார். அந்தக் கார் சோதனை ஓட்டமாக 450 மைல் தூரம் ஓடியது. தண்ணீரில் உள்ள 2 மடங்கு ஹைடிரஜனையும் 1 மடங்கு ஆக்ஸிஜனையும் கொண்டு அவர் காரை ஓட வைத்திருக்கிறார்.






மிக நீளமான பாலம்

சவூதி அரேபியாவையும் பஹ்ரேனையும் இணைக்கும் உலகிலேயே நீளமான பாலத்தைச் சமீபத்தில் திறந்து வைத்தார்கள். பாலத்தின் நீளம் சுமார் 16 மைல்கள். கட்டி முடிக்க நான்கு ஆண்டுகள் ஆயின. செலவு 900 மில்லியன் டாலர் ஆயிற்றாம்.

ஓவியரின் சாதனை

நியூயார்க்கைச் சேர்ந்த மாரிஸ் கேட்ஸ் என்னும் 64 வயது ஓவியர்தான், உலகிலேயே மிக வேகமாக ஓவியம் தீட்டுகிறவர் என்று 'கின்னஸ்' சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஓர் இயற்கைக் காட்சி ஓவியத்தை இரண்டே நிமிடங்களில் தீட்டிவிடுகிறாராம் அவர். 1985 மார்ச் 5 ஆம் தேதி வரை அவர் வரைந்துள்ள ஓவியங்களின் எண்ணிக்கை 1,53,629.






அதிசய மிருகம் யேதி

யேதி என்பது மனித வடிவில் உள்ள மிருகம் என்றும், அது இமாலயப் பகுதியில் இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. அதன் பாதச் சுவடுகளைத்தான் பார்த்திருக்கிறார்கள். ஆனால், இப்போது முஷ்டாக் அகமதுகான் என்னும் 16 வயதுப் பையன் அந்த ராட்சச உருவத்துடன் பயங்கரமாகச் சண்டையிட்டு, அதன் உடலிலிருந்து ஒரு பிடி உரோமத்தையும் பிடுங்கி வந்திருக்கிறான். அந்த உரோமத்தை வாஷிங்டன் பல்கலைக்கழகத்திற்கு ஆராய்ச்சிக்காக அனுப்பியிருக்கிறார்கள்.

கண் ஜாடையால் புத்தகம்!

ஹருயம புதா என்னும் ஜப்பான் நாட்டுப் பெண்மணி 55 வயதில், கைகால்கள் செயலிழந்து பேச்சும் இழந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள். அவளுக்கு ஒரு புத்தகம் எழுத வேண்டும் என்று ஆசை. ஓர் உதவியாளரை வைத்துக் கொண்டு, கண் இமைகளை அசைத்து, கண் ஜாடை மூலமாக 280 பக்கங்களில் ஒரு புத்தகம் எழுதச் செய்தாள். இதற்கு இரண்டு ஆண்டுகள் ஆயின.





வரும் காரணம்?

"முன்பெல்லாம் பீச்சுப் பக்கமா வரமாட்டியே! இப்போ நாள் தவறாமல் பீச்சுக்கு வந்திடறியே!"

"ஆமாண்டா. கண்டலிலேசத்து இருக்கிற சமாசாரம் எனக்கு இப்பத்தான் தெரியும்!"

— டி. எல். ரெட்டி.



ஷேக்ஸ்பியர்

உலகம் போற்றுகின்ற நாடக ஆசிரியராகவும் கவிஞராகவும் விளங்கும் இவர், லண்டன் நகரிலிருந்து 160 கிலோமீட்டர் தூரத்தில் ஏவன் ஆற்றங் கரையிலுள்ள ஸ்ட்ராட்போர்டு (Stratford-on-Avon) என்ற சிறிய ஊரில் பிறந்தார்.


இவருடைய தந்தையான ஜான் ஷேக்ஸ்பியர் கையுறைகள் தயாரித்து விற்று வந்தார்.

12—வது வயதில் பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, தந்தையாருக்கு உதவியாக வேலை பார்த்துவந்தார். இவர்சொந்தமுயற்சியில் பல நூல்களைக் கற்று, ஒரு பள்ளியில் சில காலம் ஆசிரியராகவும் வேலை பார்த்தார்.

23—ஆம் வயதில் லண்டன் சென்று அங்கு நாடகங்களில் சிறு சிறு வேடங்களில் நடித்தார். பிறகு, இவரே சில நாடகங்களைக் கவிதையாக எழுதினார்.

ஒரு நாடகக் குழுவில் பங்குதாரராகச் சேர்ந்தார். நாளடைவில் அக் குழுவின் முழு உரிமையாளரானார். இவர் அப்போது பல நாடகங்களை எழுதினார். அரச குடும்பத்தினர் அந் நாடகங்களைக் கண்டு களித்தனர். இவருடைய நாடகங்கள் புத்தகங்களாக வெளிவந்தன. மொத்தம் 37 நாடகங்களை எழுதியிருக்கிறார். இவரது நாடகங்கள் உலகிலுள்ள பல மொழிகளிலும் வெளி வந்திருக்கின்றன.

இவர் பிறந்த தேதி 23, மாதம் ஏப்ரல். அதே தேதியில், அதே மாதத்தில் இவர் காலமானார்.



வ.வெ.சு. ஐயர்

திருச்சிமாவட்டத்திலுள்ள வரகனேரியில் பிறந்தார். இவர் தமது 12—வதுவயதில்மெட்ரிகுலேஷன்தேர்வில் மாகாணத்திலேயே முதல்வராக வெற்றி பெற்றார்.

இவர் சட்டப் படிப்புப் படித்து வக்கீல் தொழிலில் ஈடுபட்டார். லண்டன் சென்று அங்கு மேல் படிப்பு படித்து பாரிஸ்டர் பட்டம் பெற்றார்.

அங்கு இருந்தபோது, நம் தேசம் விடுதலையைப் பெற, தீவிரமாக ஈடுபட்டிருந்த புரட்சி வீரராகிய சவர்க்காருடன் சேர்ந்தார். பிரிட்டிஷ் ஒற்றர்கள் இவரைக் கைது செய்ய முயன்றார்கள். இவர் அவர்களிடம் அகப்படாமல் பிரான்சு நாட்டிற்குத் தப்பிச் சென்றார். அங்கு பற்பல வேடங்களில் சில காலம் இருந்தபின் புதுச்சேரிக்கு வந்து சேர்ந்தார்.

நாட்டின் விடுதலைக்காகப் பல புரட்சியை நடத்திய இவர், ஆங்கிலத்தில் திருக்குறளையும், குறுந்தொகையையும் மொழி பெயர்த்தார். கம்பன் கவிதையை ஆராய்ச்சி செய்து ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதினார். 'மங்கையர்க்கரசியின் காதல்' முதலிய கதைகளை வெளியிட்டார். 'தேசபக்தன்', 'பாலபாரதி' பத்திரிகைகளை நடத்தினார்.

சேரமாதேவி என்ற ஊரில் குருகுலம் ஒன்றை நடத்தி வந்தார். அந்தக் குருகுல மாணவர்களுடன் ஒரு நாள் சென்றபோது பாபநாசம் கல்யாண தீர்த்தத்தில் இவருடைய மகள் சுபத்திரை விழுந்துவிட்டாள். அவளைக் காப்பாற்ற முயன்றபோது, இவரும் அருவியில்தவறிவிழுந்து காலமானார்.

என் குழந்தைப் பருவம்




நாடகச் செம்மல்
எஸ்.வி.சகஸ்ரநாமம்

(முன் இதழ் தொடர்ச்சி)

"சரி, என் பெற்றோர்களிடம் அனுமதிக் கடிதம் வாங்கி வருகிறேன்" என்று அவர்களிடம் சொல்லிவிட்டு, வெளியே வந்து சிறிது ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தேன்.

வீட்டில் போய் தகப்பனாரிடம் படிப்பை விட்டு விட்டு யாருக்கும் தெரியாமல் வந்துவிட்டேன் என்று சொன்னாலே, அவர் முன் கோபத்தில் என்ன செய்வாரென்று சொல்ல முடியாது. நானாகவே கடையில் புதிய வெள்ளை பேப்பர் வாங்கி என் அப்பாவின் விலாசமும் எழுதி "என் மகன் படிப்பதைவிட, நாடகத்தில் நடிப்பதில் பிரியமாக இருப்பதால், உங்கள் குழுவில் அவனை நடிகனாகச் சேர்த்துக் கொள்வதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் கிடையாது. நீங்கள் அவனை உங்கள் குழுவில் சேர்த்துக் கொண்டு, நடிகனாக்குங்கள். இது எனது வேண்டுகோள்" என்று எழுதி, 'இப்படிக்கு — ஆர். வெங்கடரமணய்யர், நீர்மணியக்காரர், சிங்காநல்லூர்' என்று எழுதித் தயாரித்து மானேஜர் காமேஸ்வரய்யர் அவர்களிடம் அடுத்த நாள் காலையில் கொண்டு போய்க் கொடுத்தேன். மானேஜர் வாசித்துப் பார்த்துவிட்டு என்னை ஒரு பார்வை பார்த்து ஏளனச் சிரிப்புடன் கேட்டார்.



"இதை உன் தகப்பனார் எழுதிக் கொடுத்தாரா? கையெழுத்து அவருடையதுதானே?" என்று விசாரித்தார். நான், 'ஆமாம்' என்று சிறிதும் சந்தேகத்திற்கு இடம் கொடுக்காமல் உறுதியாகக் கூறினேன். மானேஜர், "சரி, நீ இங்கேயே இருக்கலாம்" என்று சொல்லி விட்டார்.

நானும் அவர்களை ஏமாற்றி விட்டதாகக் கருதி, மனத்தில் சந்தோஷத்துடன் கம்பெனி அகத்துக்குள் போனேன். அங்கு எல்லோருடனும் கலகலப்பாகப் பேசிப் பகல் பொழுதைக் கழித்ததையும், ஒரே பந்தியில் கூட்டமாக உணவருந்தியதையும் நினைத்து நான் ஏதோ ஒரு பெரிய



காரியத்தைச் சாதித்து விட்டதாக எண்ணியிருந்தேன். ஆனால் மாலை 5 மணிக்கு எனது தகப்பனாரும் அவருடன் ஒரு நண்பரும் குதிரை வண்டியிலிருந்து கீழே இறங்கி வருவதைப் பார்த்ததும், என் நெஞ்சு படபடக்க ஆரம்பித்தது. பின்புறமாக ஓடி, ஒளிந்து கொள்ள இடம் தேடினேன்.

''புதுசா காலையில் வந்தானே ஒரு பையன், அவன் எங்கே? எங்கே?'' என்று தேட ஆரம்பித்தார்கள். கடைசியாக சமையல்காரர் மாதவன் நாயர் என்பவர் பின் பகுதியில் ஒளிந்திருந்த என்னைப் பிடித்துக் கொண்டுவந்து விட்டார்.

என் தகப்பனார் முதலில் நான் பொய்க் கையெழுத்திட்டு ஏமாற்றியதற்கு மிகக் கடுமையாகப் பேசினார். அப்போது மானேஜர், ''பையன் நாடகத்தில் சேர வேண்டுமென்ற எண்ணத்தால் தவறு செய்துவிட்டான். சரி, இப்போது உங்கள் பையனைக் குழுவில் சேர்க்க விருப்பமா! அப்படியானால் 3 வருஷ காண்ட்ராக்ட் எழுதி அதிலே நீங்கள் கையெழுத்துப் போட்டுக் கொடுக்க வேண்டும்!'' என்று கூறிக் கம்பெனியின் நிபந்தனைகளையெல்லாம் தெரிவித்தார்.

கடைசியாக என் தகப்பனார் என்னைப் பார்த்து, ''பத்தாவது வரை படித்து முடித்துவிட்டுச் சேரேண்டா!'' என்றார். நான் எனக்கு படிப்பில் கவனம் செல்லவில்லை. நாடகத்தில் நடிப்பதற்குத்தான் இஷ்டம்'' என்ற என் எண்ணத்தை உறுதியாகச் சொன்னதும், ''சரி, உன்னிஷ்டம் போல் செய்'' என்று கம்பெனி அக்ரிமெண்டில் கையெழுத்திட்டுவிட்டு, என்னைக் கடைக்கு அழைத்துப் போய்ச் சில துணிகள் வாங்கிக் கொடுத்துக் கம்பெனியில் விட்டுச் சென்றார்.

அந்தக் கம்பெனியின் பெயர் அன்று, 'மதுரை ஸ்ரீ பாலஷண்முகானந்த சபா,' பின்னால் அதுவே T.K.S. குழு என்ற பேரால் நாடகங்கள் பலவற்றை நடத்தி, தமிழகத்தில் இன்றும் அதன் பெயர் நிலைத்து நிற்கும்படி நல்ல பெயரோடு விளங்கி வருகிறது. இந்தக் குழுவில்தான் தமிழகத்தின் தலைசிறந்த நடிகரான கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் இருந்தார். அவர் எல்லோருடனும் சகோதர பாவத்தோடுபழகிவந்தார். என்னிடம் அவர் தனிப் பாசமும் பற்றும் கொண்டு, என் முன்னேற்றத்துக்குச் சில உதவிகளையும் செய்து வந்தார்.

முறைப்படி 'குருகுலவாசம்' என்று சொல்லக் கூடிய அளவில் பயிற்சி முறையும் நல்ல பழக்க வழக்கங்களும் எங்களுக்கு ஏற்படும்படியாக வளர்த்தார்கள். சிறுசிறு வேடங்கள் முதலில் எனக்குக் கிடைத்தன. 'அபிமன்யு சுந்தரி' என்ற நாடகம் சங்கரதாஸ் சுவாமிகள் அவர்களால், T. K. ஷண்முகம் கதாநாயகனாக நடிப்பதற்கென்றே ஒரே இரவில் எழுதப்பட்டது. அடித்தல் திருத்தல் இல்லாமல் பாடல்கள், விருத்தங்கள், பாத்திரங்களின் உரையாடல்கள் முழுவதையும் அவர் எழுதி முடித்த திறமையைப்பற்றியெல்லாம் ஷண்முகம் அவர்களே என்



னிடம் நேரிடையாகச் சொல்லியிருக்கிறார். ஷண்முகம் அவர்களின் குரு பக்திக்கு உதாரணம் சொல்ல வேண்டுமானால், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கு ஒரு விவேகானந்தர் ஏற்பட்டது போன்றது, என்று பல சம்பவங்களின் மூலம் பின்னால் நான் தெரிந்து கொண்டேன். சங்கரதாஸ் சுவாமிகளால் எழுதப்பட்ட 'அபிமன்யு சுந்தரி' நாடகத்தில் முதலில் வரமளிக்கும் 'சூரிய பகவான்' வேடத்தில் நடித்தேன். அந்தக் குழுவின் மூலம் பல பேரறிஞர்களின் பேச்சுக்களைக் கேட்கும் வாய்ப்பு கிடைத்தது. பல கற்றறிந்த நல்ல நாடக ஆசிரியர்களான எம். கந்தசாமி முதலியார், பம்மல் சம்பந்த முதலியார், போன்றவர்கள் எழுதித் தயாரித்து இயக்கிய நாடகங்கள் பலவற்றில் சிறந்த பாத்திரங்களை ஏற்று பொது மக்களின் நன்மதிப்பைப் பெற்றேன்.

மூன்று முறை எட்டையபுரம் காசி மஹாராஜா, அவரது தமையனார், அவரது தந்தையார் ஆகியோரிடம் நான் பரிசுகளைப் பெற்றதோடு, நடிப்புக் கலைஞர்கள் வாழ்நாள் முழுவதும் பெருமையுடனும் புகழுடனும் வாழ்வதற்கு வேண்டிய நல்ல உபதேசங்களையும் எங்களுக்குச் சொன்னார்கள். ''எந்தக் காலத்திலும் குடிப் பழக்கத்துக்கு அடிமையாகி விடாதீர்கள்'' என்று கூறி பல கலைஞர்களை உதாரணங் காட்டி, எங்கள் வாழ்வில் வளம் பெற்று வாழ ஆசியும் வழங்கினார்கள். எனக்கு அப்போது வயது 15 தான். எனது 'நாடகக் கலை குருநாதர்' என்று நான் பெருமையோடு சொல்லிக் கொள்வது திரு. எம். கந்தசாமி முதலியார் அவர்களைத்தான். இவர் திரு. எம். கே. ராதா அவர்களின் தந்தையார். திரு ஏ. ஆர். ரங்கராஜு அவர்களது ராஜாம்பாள், ராஜேந்திரன், சந்திரகாந்தா, மோஹனசுந்தரம், ஆனந்தகிருஷ்ணன் போன்றவைகளை மேடைக்கேற்றபடி அவர் நாடகமாக உருவாக்கி, பல நடிகர்களுக்குப் பயிற்சியளித்து முன்னேற்ற வாழ்வைப் பெற உதவியவர். இவரும் இவரது மகன் திரு எம். கே. ராதா அவர்களும் நான் இருந்த டி. கே. எஸ். குழுவில் பல ஆண்டுகள் பணியாற்றிப் புகழ் பெற்றவர்கள்.



ஆக, நான் இன்று புகழுடன் வாழ்வதற்கு எனக்கு அஸ்திவாரமாக இருந்தது நாடகக் கலை என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், நான் இந்த நிலைக்கு வளர உதவி செய்து வந்த அறிஞர் பெருமக்களுக்கும், எனது நாடகக் கலையில் என்னோடு இணைந்து நடித்து வந்த பல கலைஞர்களுக்கும் என்றும் கடமைப்பட்டவன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக ரசிகப் பெருமக்களின் ஆதரவு, அப்போதைக்கப்போது மழைக்குக் குடையாகவும் பசி நேரத்துக்கு உணவாகவும் உதவி வந்துள்ளதால், அவர்களுக்கு என் நெஞ்சகத்துள் நிறைவு பெற்ற நன்றியையும் வணக்கத்தையும் கூறிக் கொள்கின்றேன்.



ரெயில் எதிலே ஓடும்?

''அப்பா ரெயில் எதுலே ஓடும்?''


''நீராவியிலேயும் ஓடும், மின்சாரத்தாலேயும் ஓடும்!''


''பார்த்தீங்களா, பக்கத்து வீட்டு பாபு ரெயில் தண்டவாளத்துலதான் ஓடும்னு பொய் சொல்றான்!''

— கரடிகுளம் ஜெயபாரதிப்ரியா.


உதவிக்கு...உதவி.

படக்கதை :- S.K.ராமானுஜம். (ரானு :-)





குருவியின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டது.
மாலை நேரங்களில் குரங்குக்குட்டிகளுக்கு, விளையாட உதவும்.
வழக்கம்போல, குட்டியானை..... உலாவிக்கொண்டு வரும்பொழுது.. திடீரென்று பள்ளத்தில் விழுந்தது
ஐய்யோ! என்னைக் காப்பாற்றுங்கள்!
யானையின் குரலைக் கேட்டு குருவி, குரங்குகள், விறகு வெட்டி நொண்டிக்-குரங்கு ஆகிய எல்லோரும்... வந்து விட்டனர்.
விறகு வெட்டி... மரங்களை வெட்டிக் கொண்டு வந்தான்.
குரங்குக்குட்டிகள்.... பெரிய, பெரிய கற்களைக் கொண்டு வந்தன.
குருவியும், நொண்டிக் குரங்கும் கூட, சிறு, சிறு கற்களைக் கொண்டு வந்தன.
எல்லோரும் சேர்ந்து.... மரங்களாலும், கற்களாலும் அப்பள்ளத்தை நிரப்பினர்.
பிறகு யானை அப்பள்ளத்திலிருந்து வெளியே வந்தது.
தன்னை, காப்பாற்ற... உதவிய எல்லோருக்கும் யானை நன்றி கூறியது.



'அப்பா' என்றானா? 'அம்மா' என்றானா?

குழந்தைக் கவிஞர்

உயர மான மரத்திலே
உள்ள கிளையின் நுனியிலே
வயலில் வேலை செய்திடும்
மண்டுக் குப்பன் ஏறினான்.

கிளையின் நுனியில் இருந்தவன்
கீழே உள்ள பகுதியை
வளைந்து, நிமிர்ந்து வெட்டினான்,
வாளி னாலே வேகமாய்.

விண்ணில் இருந்த பார்வதி
வெட்டு கின்ற குப்பனைக்
கண்டு பரம சிவனிடம்
கலக்கத் தோடு கூறினாள்:

"அந்தோ! அங்கே பாருங்கள்,
அறியாச் சிறுவன் செய்வதை!
இன்னும் சிறிது நேரத்தில்
என்ன நேரும், தெரிந்ததே.

கிளையின் நுனியில் இருப்பவன்
கீழே விழுந்து சாவதா?
விழுந்து சாகும் முன்னரே
விரைந்து காப்போம்" என்றனள்.

"இப்போ தவனும் மரத்திலே
இருந்து கீழே விழுகையில்,
'அப்பா' என்றால் நானுமே,
'அம்மா' என்றால் நீயுமே

சென்று அவனைத் தாங்குவோம்"
என்றார், உடனே சிவபிரான்.
"நன்று., உங்கள் சொற்படி
நடப்போம்" என்றாள் பார்வதி.

பையன் இருந்த கிளையுமே
படப டென்று முறியவே
'ஐயோ!' என்று வீழ்ந்தனன்.
யாரும் உதவ வில்லையே!



ராமானுஜம்

* கணித மேதை ராமானுஜத்திற்கு, அவருடைய தாயார் வைத்த செல்லப் பெயர் 'சின்னச்சாமி.'

* மூன்றும் படிவத்தில் (8 ஆம் வகுப்பில்) படிக்கும் போதே, இவர் எண் கணிதம், ஜியோமிதி, திரிகோணமிதி ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டிருந்தார்.

* இவர் உயர்நிலைப் பள்ளியில் படித்த போது, பி. ஏ. வகுப்பில் படித்த இரண்டு மாணவர்கள் இவர்கள் வீட்டில் தங்கிப் படித்து வந்தார்கள். தங்க இடமும், உணவும் அளித்ததால், அவர்கள் ஒவ்வொருவரும் மாதம் பத்து ரூபாய் வீதம் கொடுத்து வந்தார்கள். அவர்களுக்குக் கணிதத்தில் ஏற்படும் சந்தேகங்களை இவர் உடனுக்குடன் தீர்த்து வைப்பார். இவருக்காக அவர்கள் கல்லூரி நூலகத்திலிருந்த பெரிய பெரிய கணித நூல்களையெல்லாம் கொண்டு வந்து கொடுப்பார்கள்.

* மூன்று மணி நேரம் எழுத வேண்டிய கணக்குப் பரீட்சையை இவர் அரை மணி நேரத்தில் எழுதி முடித்து விடுவார்! நூற்றுக்கு நூறு மார்க்கும் பெற்று விடுவார்!

* இவருக்கு ஆங்கிலமும், தமிழுமே தெரியும். ஆனாலும், பிரெஞ்சு,

ஜெர்மன், மொழிப் புத்தகங்களிலுள்ள கணக்குகளுக்கும் கூட மிக எளிதாக விடை கண்டுபிடித்து விடுவார். 'கணக்கு என் நண்பன். ஆகையால் மொழி எனக்கு ஒரு பிரச்னையாகவே தோன்றவில்லை' என்பார்.

* இவர் எப்போதும் தம்முடனே ஒரு கனத்த நோட்டுப் புத்தகம் வைத்திருப்பார். இவராகவே ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்த பல புதிய உண்மைகளைக் குறித்து வைப்பார். அந்த நோட்டுப் புத்தகத்தில் உள்ள குறிப்புக்களைப் படித்துப் பார்த்தவர்கள் மிகவும் வியப்படைவார்கள்; மனம் திறந்து இவரைப் பாராட்டுவார்கள்.

* கணிதத்திலே இவர் மனம் எப்போதும் ஈடுபட்டிருந்ததால், மற்றப் பாடங்களில் இவர் அதிகமாக அக்கறை செலுத்தவில்லை. அதனால், கணிதத்தில் இவர் நூற்றுக்கு நூறு எடுத்திருந்தாலும், மற்றப் பாடங்களில் போதிய மதிப்பெண்கள் பெறாததால் எப். ஏ. தேர்வில் தோல்வி அடைந்தார். மூன்று முறை முயன்றும் எப். ஏ. யில் தேறாததால், கல்லூரிப் படிப்பை இவர் தொடரவில்லை.

* 21 வது வயதில் திருமணமானது. அக்கவுண்டண்ட் ஜெனரல் அலுவலகத்தில் மாதம் ரூ. 20/— சம்பளத்தில் சேர்ந்தார். பிறகு சென்னை போர்ட் டிரஸ்டில் கணக்கராக மாதம் ரூ. 30/— பெற்றுப் பணியாற்றினார்.

* முதல் முதலாக இவர் கணிதம் பற்றி எழுதிய கட்டுரை, இந்தியக் கணிதக் கழகப் பத்திரிகையில் 1911 ல் வெளிவந்தது. பிறகு, பல கட்டுரைகளை எழுதி அக்காலக் கணித மேதைகளின் கருத்தைக் கவர்ந்தார்.

* கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகப் பேராசிரியரான ஹார்டி என்பவர் இவரது கணிதத் திறமையை உணர்ந்து, இவரை இங்கிலாந்துக்கு வருமாறு அழைத்தார். அந்த அழைப்பை இவர் முதலில் ஏற்றுக்கொள்ளவில்லை. பலர் வற்புறுத்திய பிறகு நாமக்கல்லில் உள்ள தம்முடைய தாத்தாவின் குலதெய்வமான நாமகிரி தேவியிடம் உத்தரவு பெறச் சென்றார்.

* மிகுந்த தெய்வ பக்தியுள்ள இவர், நாமகிரித் தாயின் சன்னதிக்குச் சென்று அங்கு மூன்று நாள் தங்கியிருந்தார். மூன்றும் நாள் இரவு, இவரது கனவிலே தோன்றிய நாமகிரி தேவி இங்கிலாந்து செல்ல இவருக்கு உத்தரவு கொடுத்தார்:

* இவருடைய திறமையை நன்கு வளர்த்து, இவரது கணித அறிவை உலகம் உணரச் செய்தது கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்.

* 1918 இல் இங்கிலாந்திலுள்ள ராயல் சொஸைடி இவரை ஓர் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்துச் சிறப்புச் செய்தது. இப்பெருமையைப் பெற்ற முதல் இந்தியர் இவரே. அப்போது இவருக்கு வயது 31.

* இங்கிலாந்தில் இருந்தபோது இவர் காச நோயால் மிகவும் துன்பப்பட்டார். அப்போதும், இவரது கணித ஆர்வம் குறையவில்லை. அக்காலத்தில் காச நோயைக் குணப்படுத்த மருந்துகள் கண்டுபிடிக்கப்படாததால் நோய் முற்றியது. எனவே லண்டனிலிருந்து இவர் இந்தியா திரும்பினார்.

* கைரேகை பார்த்துப் பலன் சொல்லவும் இவருக்குத் தெரியும். 'நான் 35 வயதுக்குள் இறந்து விடுவேன்' என்று கூறுவாராம்.

* 32 வது வயதிலே இவர் மறைந்துவிட்டார். இவருடைய மனைவி ஜானகி அம்மாள் தற்போது சென்னையிலே வசித்து வருகிறார். அவருக்கு வயது 88.

ரஷ்ய நாட்டுக் கதை



—தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி

கூரிய பார்வையும் நுண்ணிய மதியும்

ரஷ்ய நாட்டில் உஸ்பெக் என்னும் பகுதி. அங்குள்ள கிராமத்தில் ஒரு முதியவர் இருந்தார். அவர் ஏழை. அவருக்கு மூன்று பிள்ளைகள். ஒருநாள் அந்த அப்பா தம் பிள்ளைகளை அருகில் அழைத்தார்.

"அருமைப் பிள்ளைகளே! எனக்கு வயதாகிவிட்டது. உங்களுக்குத் தருவதற்கு என்னிடம் ஆடு, மாடு எதுவும் இல்லை. பணம், காசும் இல்லை. ஒன்று மட்டும் சொல்வேன். நினைவு கூருங்கள். உங்கள் கண்களையும், காதுகளையும் திறந்து வைத்துக் கொள்ளுங்கள். கூர்ந்து நோக்குங்கள். கூர்ந்து கேளுங்கள். அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். அறிவே உயர்ந்த செல்வம்," என்று சொன்னார். அன்று முதல் பிள்ளைகளின் அறிவுத் தாகம் வளர்ந்தது. எப்பொருள் எத்தன்மைத்தாயினும் நன்கு சிந்தித்து முடிவெடுக்கும் சக்தியை அவர்கள் பெற்றனர்.

சிறிது நாட்களில் அப்பா இறந்து போனார். பிள்ளைகள் மூவரும் ஒன்று கூடி ஆலோசித்தனர். தங்கள் சொந்த ஊரை விட்டுப் பட்டணத்திற்குப் போய் ஏதாவது வேலை செய்து பிழைக்கலாம் என்று தீர்மானித்தனர்.

பட்டணத்திற்குப் போகும் நெடுஞ் சாலையில் அவர்கள் மூவரும் நீண்ட நேரம் நடந்தனர். ஓய்ந்து போய் ஒரு மரநிழலில் ஒதுங்கினர்.

மூத்த பிள்ளை தரையைக் கவனித்தான். "கொஞ்ச நேரத்திற்கு முன்னால் இந்தச் சாலையின் வழியாக ஓர் ஒட்டகம் போயிருக்கிறது," என்று சொன்னான்.

இரண்டாவது பிள்ளை சுற்றிலும் நோக்கினான். சிறிது தூரம் நடந்தான். பிறகு, "அந்த ஒட்டகத்திற்கு ஒரு கண் பார்வை இல்லை" என்றான்.

மூன்றாவது பிள்ளை மேலும் ஆய்வு செய்தான். "அந்த ஒட்டகத்தின் மேல் ஒரு பெண்ணும், ஒரு குழந்தையும் சவாரி செய்திருக்கின்றனர்," என்று கூறினான்.

"ஆமாம், ஆமாம், நீ சொல்வது சரிதான்," என்று மற்ற இருவரும் ஆமோதித்தனர்.

சகோதரர்கள் தொடர்ந்து நடந்



தனர். நகரத்தை நெருங்கினர்.

அப்போது எதிர்ப்புறத்திலிருந்து அவர்களை நோக்கிக் குதிரை மேல் ஏறிக் கொண்டு ஒருவன் வந்தான்.

"ஓ, வீரரே! உங்களிடமிருந்து ஏதாவது காணாமல் போய் விட்டதா? அதைத் தேடுகிறீர்களா?" என்று முதல் பிள்ளை கேட்டான்.

வீரன் ஆச்சரியத்தோடு குதிரையிலிருந்து இறங்கினான்; "ஆமாம், ஆமாம்" என்றான்.

"உங்களிடமிருந்து காணாமல் போனது... ஓர் ஒட்டகமா?"

"ஆமாம். ஒட்டகம்தான்."

"அந்த ஒட்டகத்திற்கு இடது கண் பார்வை இல்லையே?" இரண்டாவது பிள்ளை கேட்டான்.

"இல்லை."

"அந்த ஒட்டகத்தின் மேல் ஒரு பெண்ணும், ஒரு குழந்தையும் சவாரி செய்தார்களா?" மூன்றாவது பிள்ளை கேட்டான்.

குதிரை வீரனுக்கு மூவர் மீதும் சந்தேகம் உண்டாகியது. அவர்களை உற்று நோக்கினான்.

"நீங்கள்தான் என் ஒட்டகத்தைத் திருடியிருக்கிறீர்கள். அதை எங்கோ மறைவாக வைத்திருக்கிறீர்கள்? என் ஒட்டகம்எங்கே? உண்மையைச்சொல்லுங்கள்!" குதிரை வீரன் அதட்டினான்.

"ஏனய்யா அவசரப்படுகிறீர்கள்? உங்கள் ஒட்டகத்தை நாங்கள் பார்த்தது கூடக் கிடையாது," என்று பிள்ளைகள் நிதானமாகக் கூறினர்.

"ஓகோ! அப்படியா? அப்படியானால், என் ஒட்டகத்தைப் பற்றிய விவரங்களையெல்லாம் எப்படிச் சரியாகத் தெரிந்து கொண்டீர்கள்?"

"சுற்றுப்புறங்களை உற்று நோக்கவும், கிடைத்த விவரங்களை வைத்துக் கொண்டு சரியான முடிவுக்கு வரவும் நாங்கள் அறிவோம். விரைந்து செல்லுங்கள். இதே சாலையில் நேராகச் செல்லுங்கள். உங்களுடைய ஒட்டகத்தைப் பார்க்கலாம்" என்று சகோதரர்கள் பதிலளித்தனர்.

"நான் போக மாட்டேன். ஒட்டகம் உங்களிடம்தான் இருக்கிறது. தாமதிக்காமல் கொடுத்து விடுங்கள்," என்று குதிரை வீரன் மிரட்டினான்.

"உங்கள் ஒட்டகத்தை நாங்கள் ஒரு தரம் கூடப் பார்த்தது கிடையாது. எத்தனை தரம் அதைச் சொல்லுவது?" என்று பிள்ளைகள் சாதித்தனர்.

வீரன் அவர்களுடைய பேச்சைக் கேட்கவில்லை. சரேலென வாளை உருவி அவர்களைப் பயமுறுத்தினான். "எங்கள் அரசரான பாதுஷாவின் அரண்மனைக்கு வாருங்கள்," என்று சொல்லி அவர்களை வாள் முனையில் நடத்திச்சென்றான். மூவரையும்காவல்காரர்களிடம் ஒப்படைத்துவிட்டு அவன் அரண்மனையின் உள்ளே நுழைந்தான்.

வீரன் பாதுஷாவுக்கு வணக்கம் செய்தான். "அரசே, என் மந்தைகளை நான் மலைக்கு ஓட்டிப் போய்க் கொண்டிருந்தேன். என் மனைவியும், குழந்தையும் ஓர் ஒட்டகத்தில் ஏறி என்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தனர். எனக்குச் சற்றுப் பின்னால் வந்த அவர்கள் வழிதவறிப் போய்விட்டனர். நான் அவர்களைத் தேடிப் போனேன். அப்போது இந்தச் சகோதரர்களைச் சந்தித்தேன். இவர்கள்தான் என் ஒட்டகத்தைத் திருடியுள்ளனர் என்று நம்புகிறேன். இவர்கள் என் மனைவியையும், குழந்தையையும் கொன்றிருப்பார்களோ என்று கூட அஞ்சுகிறேன்!" என்று வீரன் முறையிட்டான்.

"ஏன் அப்படி எண்ணுகிறாய்?" பாதுஷா கேட்டார்.

"நான் அவர்களிடம் எதுவுமே சொல்லவில்லை, அப்படியிருக்க, அவர்கள் சாலையில் ஓர் ஒட்டகம் போனதாகவும், அதற்கு ஒரு கண் பார்வை இல்லை என்றும், அதன்மேல் ஒரு பெண்ணும், குழந்தையும் சவாரி செய்ததாகவும் என்னிடம் சொன்னார்கள்."

பாதுஷா யோசனை செய்தார். "ம்ம்ம்... நீ சொல்வது சரிதான். அவர்கள்தான் ஒட்டகத்தைத் திருடியிருக்க வேண்டும்!" என்று கூறிவிட்டு, "யாரங்கே! அந்தத் திருடர்களை அழைத்து வா!" என்று உத்தரவிட்டார்.

சகோதரர்கள் மூவரும் பாதுஷாவின் முன்பு அழைத்துவரப்பட்டனர். "திருடர்களே! இந்தவீரனுடையஒட்டகம் எங்கே? அதை என்ன செய்தீர்கள்?" என்று பாதுஷா உறுமினார்.

"அரசே! நாங்கள் திருடர்களும் இல்லை, இவருடைய ஒட்டகத்தைப் பார்த்ததும் இல்லை," என்று அவர்கள் பதிலளித்தனர்.

"உங்களிடம்எதுவும்சொல்வதற்கு முன்னாலேயே நீங்கள் அந்த ஒட்டகத்தைப் பற்றி வர்ணித்தீர்களாம். இப்போது திருடவில்லை என்கிறீர்கள். என்ன துணிச்சல் உங்களுக்கு?" பாதுஷா கூச்சலிட்டார்.

"அரசே! ஒட்டகத்தைப் பற்றிய





அடுத்த இதழில்...

புகழ் பெற்ற எழுத்தாளர் லக்ஷ்மி எழுதிய

என் குழந்தைப் பருவம்

விவரங்களை நாங்கள் சரியாகச் சொன்னதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. எதையும் முழுக் கவனத்தோடு நோக்கவும், பிறகு அதைப் பற்றி ஆழமாகச் சிந்திக்கவும் நாங்கள் பழகியிருக்கிறோம். அதனால்தான், அந்த ஒட்டகத்தைப் பார்க்காமலேயே அதைப் பற்றி எங்களால் சொல்ல முடிந்தது,'' என்றான் முதல் பிள்ளை.

''கண்ணால் காணாதை ஒரு பொருளைப் பற்றி அவ்வளவு நன்றாக அறிய முடியுமா என்ன?'' என்று சொல்லிப் பாதுஷா சிரித்தார்.

''முடியும் அரசே!''

''சரி! நீங்கள் சொல்வது உண்மைதானா என்று பார்க்க வேண்டும். இப்போது உங்களுக்கு ஒரு சோதனை வைக்கிறேன்,'' என்று சொன்னார். தம் மந்திரியைக் கூப்பிட்டு அவருடைய காதுகளில் ரகசியமாகச் சில வார்த்தைகளைக் கூறினார். உடனே மந்திரி வெளியேறினார்.

சிறிது நேரம் கழித்து மந்திரி அரசசபைக்குத் திரும்பி வந்தார். அவருக்குப் பின்னால் இரண்டு பணியாளர்கள் பெரிய பெட்டி ஒன்றைக் கைவண்டியில் வைத்துத் தள்ளிக் கொண்டு வந்தனர். அவர்கள் பெட்டியைத் தூக்கிச் சபையின் வாசலிலேயே ஓர் ஓரத்தில் வைத்துவிட்டுப்போயினர். பெட்டி மூடப்பட்டுத் தாளிடப்பட்டிருந்தது. பெட்டி எந்தத் திசையிலிருந்து வந்தது, பணியாளர்கள் அதை எப்படித் தூக்கினார்கள், எப்படித் தரையில் வைத்தார்கள் முதலிய விஷயங்களை எல்லாம் மூன்று சகோதரர்களும் முழுமையாகக் கவனித்தனர்.

''திருடர்களே! அந்தப் பெட்டியின் உள்ளே என்ன இருக்கிறது? சொல்லுங்கள்!'' பாதுஷா கேட்டார்.

''அரசே! நாங்கள் திருடர்கள் அல்ல என்று ஏற்கெனவே சொன்னேன். இப்போது உங்கள் கேள்விக்குப் பதில் அளிக்கிறேன் — பெட்டியின் உள்ளே ஒரு சிறிய உருண்டையான பொருள் இருக்கிறது,'' என்றான் மூத்தவன்.

''ஒரு மாதுளை,'' என்றான் இரண்டாவது பிள்ளை.

''ஆம், பழுக்காத மாதுளை,'' என்று சொன்னான் கடைசிப் பிள்ளை.

பாதுஷா ஆணையிட்டார். பெட்டி சபையின் நடுவில் வைக்கப்பட்டுத் திறக்கப்பட்டது. பாதுஷா அதன் அருகில் சென்று உள்ளே இருந்த பழுக்காத மாதுளையை வெளியே எடுத்தார். அதைச் சபையோருக்குக் காட்டினார். எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். பிறகு, அவர் அந்தக் குதிரை வீரனை நோக்கி, ''ஓ, வீரனே, இவர்கள் திருடர்கள் 'அல்லர் என்று மெய்ப்பித்து விட்டனர். காணாமல் போன உன் ஒட்டகத்தை நீயே தேடிப் பார்,'' என்று கூறி அனுப்பினார்.

பாதுஷா அந்தப் பிள்ளைகளைப் பார்த்து, ''அந்த வீரன் ஒட்டகத்தை இழந்து விட்டான் என்பதும், ஒட்டகத்தைப் பற்றிய விவரங்களும் உங்களுக்கு எப்படித் தெரிந்தன?'' என்று கேட்டார்.

''அரசே! மண் சாலையில் பதிந்திருந்த சுவடுகளைக் கண்டோம். ஆகவே, ஒரு பெரிய ஒட்டகம் போயிருக்க வேண்டும் என்று அறிந்தோம். அப்போது அந்தக் குதிரை வீரர்

திரும்பித் திரும்பிப் பார்த்தவாறே போவதைக் கண்டோம். அவர் எதைத் தேடிப் போகிறார் என்பதை உடனே ஊகித்தோம்,'' என்று மூத்தவன் சொன்னான்.

''ஒட்டகத்திற்கு ஒரு கண் இல்லை என்று எப்படி அறிந்தீர்கள்?'' — பாதுஷா கேட்டார்.

''பாதையின் வலப்பக்கத்தில் இருந்த புற்கள் மட்டும் மேயப்பட்டிருந்தன. இடப்பக்கத்தில் இருந்த புற்கள் நன்றாக ஓங்கி வளர்ந்திருந்தன. அதிலிருந்து அந்த ஒட்டகத்திற்கு இடது கண் பார்வை இல்லை என்று அறிந்தோம்'' இரண்டாவது பிள்ளை பதிலளித்தான்.


''பேஷ், பேஷ்! அந்த ஒட்டகத்தின் மேல் ஒரு பெண்ணும், குழந்தையும் சவாரி செய்தார்கள் என்று எப்படித் தெரிந்தது?''

''சாலையின் ஓரிடத்தில் ஒட்டகம் மண்டியிட்டு அமர்ந்த தடங்கள் தெரிந்தன. அருகிலேயே பெண்ணின் காலணி பதிந்த சுவடுகளும், சின்னச் சின்ன சுவடுகளும் தெரிந்தன. ஆகவே, ஒரு பெண்ணும், குழந்தையும் ஒட்டகத்தின் முதுகில் சவாரி செய்திருக்க வேண்டும் என அறிந்தோம்,'' என்று மூன்றாவது பிள்ளை மொழிந்தான்.

''ஒட்டகத்தைப் பற்றிச் சரியாகத்தான் ஊகித்திருக்கிறீர்கள். ஆனால், இந்தப் பெட்டியின் உள்ளே பழுக்காத மாதுளை இருக்கிறதென்று எப்படிக் கண்டுபிடித்தீர்கள்? ஆச்சரியமாக இருக்கிறதே?'' என்று பாதுஷா கேட்டார்.

''அரசே! உங்களுடைய பணியாட்கள் பெட்டியைத் தூக்கி வந்த முறையிலிருந்தே அதில் கனமான பொருள் எதுவுமில்லை என்று தெரிந்தது. அவர்கள் அதைத் தரையில் வைத்த போது, ஏதோ ஒன்று உள்ளே கடகடவென்று ஓடிய சப்தம் கேட்டது. ஆகவே, உருண்டையான ஒரு பொருள் உள்ளே இருப்பதைத் தெரிந்து கொண்டேன்,'' என்றான் மூத்தவன்.

''அரசே! அரண்மனை வாசலில் மாதுளை மரங்களைக் கண்டேன். தோட்டத்திலும் நிறைய மாதுளை மரங்கள்



இருப்பதைக் கண்டேன். பணியாளர்கள் பெட்டியைத் தோட்டத்தின் வழியாகத்தான் எடுத்து வந்தனர். ஆகவே, அதன் உள்ளே இருந்த உருண்டையான பொருள் மாதுளையாகத்தான் இருக்க வேண்டுமென ஊகித்தேன்,'' என்றான் இரண்டாம் பிள்ளை.

''சரியாகச் சொன்னீர்கள்'' என்று பாதுஷா மகிழ்ந்தார். பிறகு, மூன்றாவது பிள்ளையைப் பார்த்தபோது, ''மாதுளை பழுக்கவில்லை என்று எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டார்.

''அரசே, வருஷத்தின் இந்தப் பருவத்தில் மாதுளைகள் காயாகத்தானே இருக்க முடியும்! அதோ பாருங்கள்!'' என்று சொல்லி ஜன்னல் வழியாகத் தெரிந்த அரண்மனைத் தோட்டத்தைச் சுட்டிக் காட்டினான்.


பாதுஷாவும், மற்றவர்களும் அந்தத் திசையில் நோக்கினர். தோட்டத்தில் இருந்த மாதுளைகள் எல்லாம் காயாகவே இருந்தன. பாதுஷா அந்த இளைஞர்களின் கூரிய பார்வையையும், நுண்ணிய மதியையும் மனமாரப் பாராட்டினார். பல விலை உயர்ந்த பரிசுகளைக் கொடுத்தார். அவர்களுக்கு அரண்மனையிலேயே நல்ல வேலைகளையும் அளித்தார்.

15 லட்சம் பேர் பயன்படுத்துகிறார்கள்!

இந்தப் பக்கம் ஒரு சிங்கம்; அந்தப் பக்கம் ஒரு சிங்கம்! சிலைகளாக இருக்கும் அவை கம்பீரமாகப் பிடரி உயர்த்திக் காவல் காக்கும் இந்தக் கட்டடம் நியூயார்க்கிலுள்ள பொது நூலகம்! இப்போது இது, தனது 75 வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறது.

விலைமதிப்பற்ற, பலதரப்பட்ட நூல்களைக் கொண்ட புத்தகக் களஞ்சியம் இது; இங்கு பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள பழம் பெரும் குறிப்பேடுகளையும், சுவடிகளையும் யார் வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்; நியூயார்க் நகரில் உள்ள இந்த நூலகத்திற்கு ஆண்டுதோறும் 15 லட்சம் வாசகர்கள் வந்து போகிறார்கள்.





எங்கள் வீட்டு எலிகள் எதற்கும் அஞ்சாப் புலிகள்!

—புலவர் தணிகை உலகநாதன்

அன்று முழுநிலா நாள். அந்த நிலவொளியில் எங்கள் வீட்டு நிலா முற்றத்தில் சிறுவர் சிறுமியர் ஆடிப் பாடிப் பெரியவர்களை மகிழ்வித்துக் கொண்டிருந்தார்கள்.

நிகழ்ச்சியின் போது பெரியவர்கள் குழந்தைகளுக்குக் கதை சொல்வது வழக்கம். கூட்டத்தோடு கூட்டமாக எங்கள் வீட்டில் வளரும் பொன்னன், பொன்னி என்னும் பூனைகளும் விழாவில் கலந்து கொள்வதுண்டு. பூனைகள் இரண்டும் வழக்கம் போல் என் மடியில்வந்து உட்கார்ந்துகொண்டன. அதைப் பார்த்த ஒரு சிறுமி ஆத்திரத்துடன், பூனைகளை அடிக்கப் போனாள். நான், 'நில், அடிக்காதே' என்று தடுத்தேன். அதற்குள் பூனைகள் இரண்டும் 'மி—யா—வ்' என்று குரல் கொடுத்தன. அந்தக் குரலில்தான் எத்தனை இனிமை!

'பூனைகள் திருடும் குணம் உடையவை. அடிக்காமல் என்ன செய்வது?' என்றாள், அந்தச் சிறுமி.

"இந்தப் பூனைகள் நான் வளர்க்கும் பூனைகள். இவை திருடுவதில்லை. மேலும் உன்னைப் பார்த்து, 'மா—மி' என்று எவ்வளவு அன்பாக அழைக்கின்றன!' என்றேன்.

"சரிதான். நான் அந்தப் பூனைகளுக்கு மாமியா?"

"பின்னே என்ன, 'மியாவ் மியாவ்' என்றால் 'மாமி மாமி' என்றுதான் அர்த்தம்!"

— இப்படி அந்தச் சிறுமியோடு உரையாடிய புலவர் தணிகை உலகநாதன் அவர்கள் மேலும் கூறுகையில் —

"பூனையைப் போல பசுவும் 'அம்மா அம்மா' என்று தமிழ் பேசுகிறது. ஆடு கூட 'அப்பா அப்பா' என்பதை 'பே பே' என்று கத்துகிறது. காக்கையும் 'அக்கா அக்கா' என்பதைச் சுருக்கி 'கா கா' என்கிறது. நாயும், 'திருடாமல் பொய் பேசாமல் வாழ்க! வாழ்க!' என்பதை 'வாழ், வாழ்' என்கிறது. இப்படிப் பசு, ஆடு, பூனை, நாய், காக்கை இவையெல்லாம் தமிழ் பேசுவதைக் கேட்டுத்தான் குதிரை 'ஹீ ஹீ ஹீ' என்று சிரிக்கிறது" என்று சொன்னதும் கூடியிருந்த சிறுவர் சிறுமியர் கொல்லென்று சிரித்தார்கள்" என்கிறார்.

இந்த நிகழ்ச்சி கவிஞர் மனத்தில் அப்படியே படிந்துவிட்டது. அது கற்பனையாக ஊற்றெடுத்தது; கவிதையாக மலர்ந்தது. அந்தக் கவிதை இதுதான்:

'அம்மா அம்மா' என்று பசுதான்
அழகு தமிழில் அழைக்குது
சும்மா அதற்குப் புல்லைப் போடு
சுகமாய் அதனைத் தின்னுமே!

'அப்பா அப்பா' என்ப தைத்தான்
ஆடு 'பேபே' என்னுமே.
தப்பா மல்நீ தழையைப் போடு
தாவி வந்தே உண்ணுமே!

மாமி என்னும் சொல்லை மாற்றி
'மி—யா—வ்' என்னும் பூனையே.
ஆமாம். அதற்கும் பாலை ஊற்ற
ஆசை யாகக் குடிக்குமே!

'அக்கா அக்கா' என்ப தைத்தான்
'கா—கா' என்னும் காக்கையே.
தக்க தருமம் அதற்கும் சோறு
தந்தால் உன்னை வாழ்த்துமே!

'வாழ் வாழ்' என்று நாளும் நம்மை
வாழ்த்தும் நல்ல நாயுமே.
தாழ்வில் லாத நண்பன் ரொட்டி
தந்தால் நன்றி காட்டுமே!

ஆகா! இந்த உயிர்கள் எல்லாம்
அழகு தமிழில் அழைப்பதால்,
'ஹீ—ஹீ' என்றே குதிரை யுந்தான்.
இன்ப மாகச் சிரிக்குதே!

சென்னையில் கவிஞர் முதன் முதலில் குடியிருந்த வீடு ஒரு பழைய வீடு. 'குருவிக் குடில்' என்பதற்குப் பதிலாக அதை 'எலிக்குடில்' என்றே சொல்லலாம் என்கிறார் கவிஞர். எலிகளின் தொல்லை பொறுக்க முடியவில்லையாம். தின்பண்டங்களைத் திருடித் தின்றது மட்டுமல்ல; துணிமணிகளையும் அவை கடித்துத் தொல்லை கொடுத்தனவாம். குண்டெலிகளும், சுண்டெலிகளும் பட்டப் பகலிலும் திரிந்து அட்டகாசங்கள் செய்ததை நகைச்சுவையுடன் கூறுகிறார் கவிஞர் —

எங்கள் வீட்டு எலிகள் —அவை
எவர்க்கும் அஞ்சாப் புலிகள் (எங்கள்)

வீட்டுச் சுவர்களில் கூடும்.
வேண்டிய ஓட்டைகள் போடும்.
கூட்டமாய்ச் சேர்ந்தவை ஆடும்.
கூரைஎல் லாம்பிரித் தோடும்.
(எங்கள்)

பானைகள் பலவும் உடைக்கும்.
பண்டங்கள் யாவும் கடிக்கும்.
பூனைவந் தாலும் எதிர்க்கும்.
பொத்தெனத் தலைமேல் குதிக்கும்.
(எங்கள்)

அட்டகா சங்கள் புரியும்.
பட்டப்ப கலிலும் திரியும்.
கட்டடங் களையும் அழிக்கும்.
பட்டுப் புடைவையைக் கிழிக்கும்.
(எங்கள்)

இந்தப் பாட்டுக்குப் பிறகு கவிஞர் குடிபுகுந்தது, புதிய வீட்டுக்கு!

பேட்டி: பி. வி. கிரி.

சொந்தமாக எழுதுங்கள்!



பிருந்தாவனக் கவியரங்கத்தில் அல்லது கதையரங்கத்தில் தங்கள் பெயர் வெளிவர வேண்டுமென்ற அளவுக்கு மீறிய ஆசை சிலருக்கு. அவர்களில் ஒரு சிலர் வேறு ஒருவர் எழுதிய பாடல், அல்லது கதையை 'காப்பி' யடித்து எங்களுக்கு அனுப்பி விடுகிறார்கள். இதில் என்ன வேடிக்கை என்றால், 'கோகுலம்' கௌரவ ஆசிரியர் எழுதிய புத்தகங்களில் உள்ள பாடல்களைக்கூட சிலர் எழுதி அனுப்பிவிடுகிறார்கள்! கூடுமானவரை அவற்றைக் கண்டுபிடித்து ஒதுக்கிவிடுகிறோம். ஆனாலும், தமிழில் இதுவரை வெளிவந்திருக்கும் எல்லாவற்றையும் நாங்கள் தெரிந்து கொண்டிருக்க முடியுமா? அதனால், சில சமயங்களிலே நாங்கள் ஏமாந்து போய் அவற்றை வெளியிட்டுவிடுகிறோம். உடனே பல சிறுவர் சிறுமியர் அப்படிக் காப்பியடிக்கப்பட்ட விஷயங்களைக் கண்டுபிடித்து எங்களுக்குக் கடிதங்கள் அனுப்புகிறார்கள். அந்தக் கடிதங்களை கோகுலத்தில் வெளியிட்டால், காப்பி அடித்து எழுதியவர்களின் பெயர் கெட்டுவிடுவதோடு, அவர்கள் பிறகு சொந்தமாக எதை எழுதினாலும், நாங்கள் வெளியிட முடியாத நிலை ஏற்படும்; படிப்பவர்களுக்கும் அவர்கள் மேல் நம்பிக்கை ஏற்படாது. ஆகையால், காப்பி அடித்து எழுதுவது மிகவும் தவறு என்பதை அவர்கள் உணர வேண்டும்.

இனி, நமக்கு எழுதி அனுப்புகிறவர்களை, கூடவே கீழ்க்கண்ட உறுதிமொழியையும் அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

'மேலே நான் எழுதியுள்ள கதை/கவிதை/கட்டுரை/நகைச்சுவை நான் சொந்தமாக எழுதியதே'.


பிருந்தாவனம் பகுதிக்குத் துணுக்கு அனுப்புகிறவர்களும் சொந்தமாக எழுதுவது நல்லது. அல்லது அந்த விஷயத்துக்கு எது ஆதாரம் என்பதைக் குறிப்பிடுங்கள்.

எதை எழுதினாலும், பெயருக்குப் பக்கத்திலே உறுப்பினர் எண்ணையும் முழு முகவரியையும் மறக்காமல் குறிப்பிடுங்கள்.

— ஆசிரியர்



பழமொழிப் புதிர்



மேலே இரண்டு படங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒரு பழமொழியைக் குறிக்கின்றது. பழமொழிகள் எவை என்று கண்டுபிடிக்க முடிகிறதா?

விடை 35 ஆம் பக்கம்

பிருந்தாவனக்



நல்ல நாடகம்

இரா. கிருஷ்ண மூர்த்தி (12435)

ஒரு கிராமத்தில் முரளியும், கணேசனும் வசித்து வந்தனர். இருவரும் ஒரே வகுப்பில் படித்து வந்தனர். முரளி மிகவும் சுறுசுறுப்பானவன். நன்றாகப் படிப்பவன். கணேசனோ அவனுக்கு நேர்மாறானவன். திருட்டுப் புத்தி உடையவன்.

ஒரு நாள் மாலையில் முரளியும், கணேசனும் சேர்ந்து காய்கறிகள் வாங்கச் சந்தைக்குப் புறப்பட்டனர். கணேசன் தனக்குள், 'இன்று ஏதாவது நம் கைக்கு வந்து தீர வேண்டும்' என்று தீர்மானித்தான். இருவரும் நடந்து செல்லும்போது கணேசன் வேறொரு பக்கமாகப் போய் விட்டான். முரளி, 'என்னுடன் வந்த கணேசனைக் காணவில்லையே!' என்று திரும்பிப் பார்த்தான். அங்கும் இங்கும் தேடிப் பார்த்தும் காணவில்லை. 'சரி, நாமே காய்கறி வாங்கிக் கொண்டு வீட்டிற்குப் போகலாம்' என எண்ணினான்.

சந்தையிலே ஒரு மாட்டு வண்டியில் இருந்து பெரியவர் ஒருவர் இறங்கினார். அந்தப் பெரியவர் பக்கத்துக் கிராமத்தில் இருந்து அடிக்கடி சந்தைக்கு வந்து காய்கறிகள் வாங்கிக் கொண்டு போவார். அவர், தம் கைக் கடிகாரத்தைச் சுருக்குப் பையில் போட்டார். ஏனென்றால், கடிகாரத்தின் பட்டை அறுந்து போயிருந்தது. அதை உற்றுப் பார்த்தான் கணேசன். அந்தச் சந்தையின் கடைசியில் ஒரு தண்ணீர்க் குழாயில் தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. பெரியவர் தண்ணீர் குடிக்கப் போனார். கணேசன் அவர் பின்னாலேயே சென்றான். தண்ணீர்க் குழாயின் அருகில் சென்றதும் சுருக்குப் பையை ஒரு பெரிய கல் மேல் வைத்துவிட்டுப் போய்த் தண்ணீர் குடித்தார் பெரியவர்., கணேசன் நைசாகச் சென்று அவர் பார்க்காத போது சுருக்குப் பையை எடுத்துக் கொண்டு நழுவி விட்டான்!

பெரியவர் தண்ணீர் குடித்துவிட்டுத் திரும்பினார். தம் சுருக்குப் பையைக் காணவில்லை என்றதும் திகைத்தார்.

முரளி காய்கறியை வாங்கிக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினான்.

ஓரிடத்தில் கூட்டமாகச் சிலர் நின்று கொண்டிருந்தார்கள். என்ன என்று முரளி போய்ப் பார்த்தான்.

அங்கு தம் கடிகாரத்தைப் பறி கொடுத்த ஒரு பெரியவர், நடந்ததை விவரமாகக் கூறிக் கொண்டிருந்தார். பெரியவர் சொன்னது முரளியின் காதில் விழுந்தது.

மறுநாள். பள்ளியில் கணேசன் கையில் ஓர் அழகிய கடிகாரம் இருந்தது. அது புதுக் கடிகாரம் அல்ல.

'இவனுக்கு எப்படித் திடீரென வாட்ச் கிடைத்தது. ஒருவேளை நேற்றுப் பார்த்த அந்தப் பெரியவரின் வாட்சாக இருக்குமோ?' என்று நினைத்தான் முரளி.

முரளி கணேசனிடம், "இது உன் புது வாட்சா?" என்று கேட்டான்.

அதற்கு கணேசன் ஒன்றுமே பேசவில்லை. முரளி புரிந்து கொண்டான். 'இது பெரியவருடைய வாட்ச்தான்' என்று எண்ணினான். 'நேற்று இவன் சந்தையிலே பெரியவ

கதையரங்கம்

ருடைய கடிகாரத்தைத் திருடியிருக்கிறான். இந்தத் திருட்டுப் புத்தியைப் போக்க வேண்டும்' என்று முரளி தனக்குள் திட்டம் போட்டான்.

அடுத்த நாள் காலையில், கணேசனின் மாமா இராமச்சந்திரன் அவனுக்கு ஒரு பேனா வாங்கித் தந்தார். அதை அவன் வாங்கிக் கொண்டு பள்ளியில் போய்த் தன் வகுப்பு மாணவர்களுக்குக் காண்பித்தான். முரளியும் அதைப் பார்த்தான்.

''இது யாருடையது?'' — என்று முரளி கேட்டான்.

''இது என்னுடையது தான். என் மாமா எனக்கு வாங்கித் தந்தார். இதன் விலை என்ன தெரியுமா? முப்பது ரூபாய்!'' — என்று பெருமிதத்துடன் முரளியிடம் கணேசன் சொன்னான்.

முரளி, 'இதுதான் சமயம்' என்று தன்னுடன் படிக்கும் குமார் என்பவனை அழைத்து, ரகசியமாக அவன் காதில் ஏதோ கூறினான். அவனும் 'சரி' என்று தலையை ஆட்டினான்.

குமார் கணேசனிடம், ''இந்தப் பேனா எப்படியிருக்கென்று பார்க்கிறேன்; கொடு'' என்றான்.

உடனே, கணேசன் தன் பெருமிதத்தைக் காட்ட, பேனாவைக் குமாரிடம் கொடுத்தான். குமார் அதை எடுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தான்.

கணேசன் தடுமாறினான். குமார் பேனாவை எடுத்துக் கொண்டு போவதைப் பார்த்த முரளி அவனைத் தொடர்ந்து ஓடினான். கணேசனும் அவர்களைப் பின் தொடர்ந்தான்.

''டேய் குமார், இது நியாயமா? உடனே கணேசனிடம் கொடுக்கிறாயா? முதுகில் இரண்டு போடட்டுமா?'' என்று மிரட்டினான். பேனாவை முரளியிடம் கொடுத்தான் குமார்.

கணேசன் முரளியிடம், ''என் பேனாவைக் கொடு'' — என்றான்.

முரளி, ''கணேசா, நான் உன் பேனாவைக் கொடுக்கக் கூடாது. உன் மாமா சம்பாதிச்ச பணத்திலே உனக்கு ஒரு பேனாவை ஆசையாய்க் கொடுத்திருக்காரு. ஆனால்,. நீ அன்றைக்குச் சந்தையிலே ஒரு பெரியவரோட வாட்சைச் சுருக்குப் பையோடே திருடிட்டியே! உன் பேனா உனக்குச் சொந்தம். ஆனால் அந்த வாட்ச் பெரியவருக்குச் சொந்தம். உன் முப்பது ரூபாய்ப் பேனாவை குமார் கொடுக்காமல் போனால் நீ எப்படித் தடுமாறியிருப்பே! அதே மாதிரிதானே, தம் வாட்சைப் பறிகொடுத்த பெரியவரும் வருத்தப்பட்டிருப்பாரு. பெரியவர் பக்கத்துக் கிராமத்தில்தான் இருக்காராம். நீயே அந்தப் பெரியவரிடம் அதைக் கொடுத்து விடு'' — என்றான் முரளி.

கணேசன் அழுதான். தான் செய்த தவறை எண்ணிப் பார்த்தான். ''என்னை மன்னித்துவிடு'' என்று முரளியிடம் கணேசன் கூறினான். ''உன்னைத் திருத்தவே நானும் குமாரும் நாடகம் போட்டோம். குமார் எந்தக் காலத்திலும் யார் பொருளையும் திருடியதில்லை'' என்றான் முரளி.

''நீ என்னைத் திருத்தி விட்டாய். இனி, நான் எப்பொழுதும் திருடமாட்டேன். பெரியவரின் வாட்சை அவரிடம் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கிறேன்'' என்று அழும் குரலில் முரளியிடம் கூறிவிட்டு, கடிகாரத்துடன் பெரியவரின் வீட்டை நோக்கிப் புறப்பட்டான், கணேசன்.


பழமொழிப் புதிர் விடை

புதிர் — 9

பாம்பென்றால் படையும் நடுங்கும்.

புதிர் — 10

ஆற்றிலே கொட்டினாலும் அளந்து கொட்டு.



பேராசைக்காரன்

இந்திரா ஆதித்தன் (7008)

கதிர்வேல் என்றொரு வியாபாரி இருந்தான். அவன் நடைபாதை ஓரத்தில் சிறிய காய்கறிக் கடை வைத்து வியாபாரம் செய்து வந்தான். அவன் ஒரு பேராசைக்காரன்.

ஒருநாள் அவனுடைய கடையில் ஒரு பெரியவர் சில காய்கள் வாங்கினார். ஐம்பது காசு கொடுப்பதற்குப் பதிலாக ஒரு ரூபாய் கொடுத்துவிட்டு, மீதி சில்லறையை வாங்குவதற்கு மறந்து சென்று விட்டார். கதிர்வேல் 'நமக்கு ஐம்பது காசு லாபம்தானே!' என்று பேசாமல் இருந்துவிட்டான்.

மறுநாளும், முதல் நாள் வந்த பெரியவரே வந்து கதிர்வேலிடம் சில காய்கறிகளை வாங்கினார். அவற்றின் விலை ஒரு ரூபாய் என்றதும், அவர் ஒரு ரூபாய் நாணயத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

அவர் ஒரு ஞாபக மறதியுள்ளவர் என்பதை அறிந்த கதிர்வேலனுக்கு ஒரு யோசனை தோன்றியது. அவன் வேகமாக அந்தப் பெரியவரிடம் ஓடினான். அவரிடம் ஓர் ஐம்பது காசு நாணயத்தைக் காட்டி, "ஐயா, நீங்கள் ஒரு ரூபாய்க்குப் பதிலாக ஐம்பது காசுதான் கொடுத்தீர்கள்" என்றான்.

"அடடே, மறதியாகக் கொடுத்துவிட்டேன் போலிருக்கிறதே!" என்று கூறி, மற்றும் ஓர் ஐம்பது காசு நாணயத்தை அவனிடம் தந்தார். அவனும் மகிழ்ச்சியுடன் திரும்பி வந்தான்.

அவன் தன் கடையை அடைந்ததும் தன் தலையில் அடித்துக் கொண்டு 'ஓ'வென அழுதான். 'ஐம்பது காசுக்கு ஆசைப்பட்டதால் அனைத்தும் பாழாகி விட்டதே!' என்று கதறினான். வீதியில் சென்று கொண்டிருந்த மாடு ஒன்று அவன் கடையை மிதித்து, நாசமாக்கிக் காய்கறிகளைத் தின்றுவிட்டிருந்தது!



ஆத்திரத்தின் விளைவு?

இரா. புவனேஸ்வரி (5731)

ராமன் என்ற ஓர் இளைஞன் ஒரு நாள் காலையில் கணபதி சோதிடரிடம் சோதிடம் பார்க்கச் சென்றான். சோதிடரிடம் சோதிடத்தில் உள்ளபடி உண்மையை மறைக்காமல் சொல்லும்படி வேண்டினான்.

சோதிடரும் வழக்கம் போல் ராமனுடைய ஜாதகத்தைப் பார்த்துப் பல விவரங்களைச் சொன்னார். பிறகு, ஏதோ சொல்ல நினைத்த அவர், கொஞ்சம் தயங்கினார்.

"என்ன தயங்குகிறீர்? எதுவாக இருந்தாலும் சொல்லிவிடும். உண்மையை மறைக்கக் கூடாது," என்று சொன்னான் இளைஞன்.

சோதிடர், "இவ்வளவு நேரம் நல்லதாகச் சொன்னேன். ஆனால், இன்னும் இரண்டு மாதங்களில் அதாவது டிசம்பர் 31 ஆம் தேதி மாலை ஆறு மணிக்குள் நீங்கள் எப்படியும் ஓர் இரண்டு மணி நேரமாவது போலீஸ் காவலில் இருப்பீர்கள்" என்றார்.

அதைக் கேட்ட ராமன், "என்ன! நான் திருடனா? கொள்ளைக்காரனா? கொலைகாரனா? எப்படி இதுபோலச் சொல்லலாம்?" என்று சோதிடர்பால்

ஆத்திரம் அடைந்தான். இதனால் பயந்த சோதிடர், "நீங்கள்தான் உண்மையை மறைக்காமல் சொல்ல வேண்டும் என்று கூறியதால் சொன்னேன். ஜாதகத்தில் உள்ளதைத்தானே சொன்னேன்? நானாக எதுவும் கூறவில்லை" என்று சமாதானப்படுத்த முயன்றார். முடியவில்லை. சோதிடரைத் திட்டிக் கொண்டே வெளியேறினான், ராமன்.

நாட்கள் நகர்ந்தன. ஆனாலும் சோதிடர் பெயரில் ராமனுக்கு இருந்த ஆத்திரம் தணியவில்லை. அவர் சொன்ன கடைசி நாளான டிசம்பர் 31 ஆம் தேதி மாலை 4 மணிக்கு ராமன் சோதிடரைத் தற்செயலாகக் கடை வீதியில் சந்தித்தான். "ஏ சோதிடரே, ஜாதகம் சொல்லுகிறதென்று பொய் தானே சொன்னாய்? இதோ இன்னும் இரண்டு மணி நேரத்தில் நீ சொன்ன தவணை முடியப் போகிறது. பொய் சொல்லி என் மனசிலே குழப்பம் உண்டாக்கிய உன்னைச் சும்மா விடக் கூடாது" என்று சொல்லி அவரது கன்னத்தில் ஓங்கி அறைந்தான். அடி பொறுக்க முடியாமல் அவர் "ஐயோ!" என்று அலறினார். உடனே கூட்டம் கூடிவிட்டது. அந்த வழியாகப் போன போலீஸ்காரர் ஒருவரும் அங்கு வந்து விட்டார்., நடந்ததை அறிந்ததும், ராமனைப் பிடித்துக் கொண்டு அருகில் இருந்த போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார். சப் — இன்ஸ்பெக்டரிடம் விஷயத்தைச் சொன்னார்.

"சரி, ஓடிவிடாமல் இவனைக் காவலில் வை. சோதிடரிடம் ஒரு ரிப்போர்ட் வாங்கு. தெருவில் கலாட்டா செய்த இவனைச் சும்மா விடக் கூடாது." என்றார் சப் — இன்ஸ்பெக்டர்.

அடிபட்ட சோதிடர், வீட்டுக்குச் சென்று கவலையுடன் படுத்துவிட்டார். போலீஸ்காரர் அவரைத் தேடி வந்து, ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார். ஆனால், அவர் சப் — இன்ஸ்பெக்டரிடம் 'ரிப்போர்ட்' கொடுக்கவில்லை. "பாவம், தெரியாமல் செய்துவிட்டான். இனிமேல் இப்படிச் செய்ய மாட்டான்" என்றார். அடிபட்டவரே இவ்வாறு சொல்லும் போது சப் — இன்ஸ்பெக்டர் என்ன செய்வார்? ராமனை எச்சரித்து வெளியில் அனுப்பினார்.



புதிய புத்தகங்கள்







தேன் கூடு

வரிக்கு வரி சிரிப்பூட்டும் எட்டுக் கதைகள் கொண்டது இப்புத்தகம். ஏற்கெனவே வழங்கி வந்த கதைகள் தான் என்றாலும், இக்கதைகளைச் சேகரித்து எழுதிய வ. தேனப்பன், சொல்லுகிற—முறையிலே பல புதுமைகளைப் புகுத்தியிருக்கிறார். 'கம்ப்யூட்டர் யுகத்திலும் கிராமியக் கதைகள் தொடர்ந்து வெற்றிக் கொடி நாட்டும் என்பது என் நம்பிக்கை' என்கிறார் அவர். அவரது நம்பிக்கை வீண் போகவில்லை.

பக்கங்கள்: 84; விலை ரூ. 6.50.

வெளியிட்டோர்: தேன் வள்ளியம்மை பதிப்பகம், தேவகோட்டை.

இந்திரா காந்தி கதை

நம் நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டு பல துன்பங்களை அடைந்தது நேரு குடும்பம். ஒருமுறை, அவர்களது இல்லமான ஆனந்தபவனத்திலிருந்த சில பொருள்களை போலீஸ்காரர்கள் ஜப்தி செய்து எடுத்துக் கொண்டு போன போது, நான்கு வயதான இந்திரா வழியை மறித்துக் கொண்டு, "ஏன் இதையெல்லாம் தூக்கிச் செல்கிறீர்கள்?" என்று துணிச்சலாய்க் கேட்டு, அவர்களை நன்றாக வைதாள்.

"இந்து, உன்னைப் போல பாரத நாட்டுப் பெண்கள் ஒவ்வொருவருக்கும் வீரம் வந்துவிட்டால், நாடு சுலபமாக விடுதலை அடைந்துவிடும்" என்று தாய் கமலா நேரு சொல்லிப் பூரித்துப் போனாராம்.

— இம்மாதிரிப் பல சுவையான நிகழ்ச்சிகளை இப்புத்தகத்தில் கூறுகிறார் ரமணீயன்.

பக்கங்கள்: 64; விலை ரூ. 6/—

வெளியிட்டோர்: பாரதி பதிப்பகம், சென்னை — 17.

புதிர்க் கணக்குகள்

வணிகன் ஒருவன் ஒரு பொருளை விலைக்கு வாங்கினான். அதன் விலை திடீரென்று 20 சதவிகிதம் உயர்ந்தது. வணிகன் பெருமகிழ்ச்சி அடைந்தான். அவன் அந்தப் பொருளை விற்பதற்குள் அதன் விலை திடீரென 20 சதவிகிதம் சரிந்தது. இந்த நிலையில் வணிகன் அந்தப்பொருளை விற்கிறான். அதனால், அவனுக்கு இலாபமா? இழப்பா?

பேராசிரியர் எ. சோதி இப்புத்தகத்தில் கொடுத்துள்ள 60 புதிர்க் கணக்குகளில் இது ஒன்று.

பக்கங்கள்: 88, விலை ரூ. 7.50.

வெளியிட்டோர்: நன்மொழிப் பதிப்பகம், புதுச்சேரி.

குழந்தைக் கவிஞரின் கதைப் பாடல்கள்

ஆங்கிலத்தில் குழந்தைகளுக்கான கதைப் பாடல்கள் (Story Poems) ஏராளமாக இருக்கின்றன. அவை போல, தமிழிலும் இல்லையே என்ற குறையை ஓரளவாவது தீர்த்து வைக்கிறது குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் இந்த நூல். இவரது மலரும் உள்ளம் — இரு தொகுதிகளிலும் இடம் பெற்றுள்ள 50 கதைப் பாடல்கள் இத் தொகுப்பில் உள்ளன. வரலாற்றுப் பாடல்கள், வாழ்க்கை நிகழ்ச்சிப்

பாடல்கள், வியப்பூட்டும் பாடல்கள், வினா — விடைப் பாடல்கள், சிரிப்பூட்டும் பாடல்கள், சிந்திக்க வைக்கும் பாடல்கள் — எனப் பலவகை.
பக்கங்கள்: 128, விலை ரூ. 10/—
கிடைக்குமிடம்: பாரி நிலையம், சென்னை — 108.

டாம் சாயர்

உலகப் புகழ்பெற்ற அமெரிக்க எழுத்தாளர்களில் ஒருவரான மார்க்டுவெயின் எழுதிய 'டாம் சாயர்' (The Adventures of Tom Sawyer) என்ற கதையை மிக எளிய நடையில், சுவையாகத் தந்திருக்கிறார் ஈ. ச. விசுவநாதன்.

டாம் என்ற சிறுவன் தன் நண்பர்களுடன் சேர்ந்து, வீட்டின் சுற்றுச் சுவருக்கு வர்ணம் பூசுவது, துணிச்சலாகப் படகில் பயணம் செய்து தீவை அடைவது, கொலைகாரனைக் கண்டு பிடித்துப் போலீஸில் ஒப்படைப்பது, அவன் ஒளித்து வைத்திருந்த புதையலைத் தேடிப் பிடித்து எடுப்பது போன்ற பல சாகசச் செயல்களைச் செய்கிறான். படிக்கப் படிக்க மேலும் படிக்க வேண்டுமென்ற ஆவலைத் தூண்டும் நூல்.
பக்கங்கள்: 76, விலை ரூ. 5.50.
வெளியிட்டோர்: தமிழ்ப் புத்தகாலயம், சென்னை — 5.

காக்கை தந்த வைரமாலை

இப்புத்தகத்தில், பறவை, மிருகக் கதைகள், ராஜா — ராணிக் கதைகள், சமூகக் கதைகள் என 15 கதைகள் உள்ளன. "குழந்தை இலக்கியத்தைப் பொறுத்த வரை, கருத்துக்களைக் குழந்தைகளுக்கு வாழைப் பழத்தை உரித்துக்கொடுப்பதுபோல்கொடுக்க வேண்டும்" என்று தமது முன்னுரையில் கூறும் திருச்சி பாரதன், "தெளிவான சிந்தனை — அழகான நடை, உயர்வான நோக்கம் கொண்டு இந் நூலை சிற்பி சோமு அளித்திருக்கிறார்" என்று பாராட்டியிருப்பது முற்றிலும் உண்மையே.
பக்கங்கள்: 94, விலை ரூ. 7.50.
வெளியிட்டோர்: சரவணா பிரசுரம், புதுக்கோட்டை.

பஞ்சகல்யாணி

நாடோடி வாசிக்கும் பிடிலின் இனிய இசையைக் கேட்டு, அந்தப் பிடிலை எப்படியாவது பெறவேண்டும் என்றுசைத்தான் நினைக்கிறது. நாடோடிக்குத் தங்கத்தைக் கொடுத்துப் பிடிலைப் பெறுகிறது.

நாடோடி தங்கம் கிடைத்ததே என்று ஆரம்பத்தில் மகிழ்ந்தாலும் பிடில் இல்லாததால் நிம்மதி இல்லாமல் தவிக்கிறான். பிடிலைப் பெற்றசைத்தானுக்கோ அதில் இனிய இசையை எழுப்ப முடியவில்லையே என்ற ஆத்திரத்தில் பிடிலை எடுத்துச் சென்று நாடோடியிடம்எறிந்துவிட்டுமறைந்து விடுகிறது.

நாடோடி தன் அருமை பிடிலுடனும், தங்கத்துடனும் நிம்மதி அடைகிறான்.

இதுபோல் சுவையான 11 கதைகளை இப்புத்தகத்தில் தந்திருக்கிறார் பி. எஸ். மணி. 'சிறுவர் சிறுமியருக்கு மணி அளிக்கும் மணியான பரிசு' என்று இப்புத்தகத்தை, பாண்டிச்சேரி பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் கே. வேங்கடசுப்பிரமணியம், தமது அணிந்துரையில் பாராட்டியிருக்கிறார்.
பக்கங்கள்: 104, விலை ரூ. 7.25.
கிடைக்குமிடம்: பாரதி பதிப்பகம், சென்னை — 17.









உறுப்பினர் வரைந்த ஓவியங்கள்



இ. சுஜாதா (8659)

எம். எஸ். சுரேஷ் (7005)



ஆர். காமாட்சி (2149)






என். செந்தில்குமார் (131)



இனி அர்ச்சுனன் ஆற்றலைக் கண்டு மகிழுங்கள்!
நெருப்பு, காற்று, மழை முதலியவை உண்டாகும்படி அம்பெய்தான் அர்ஜுனன்!
சுழன்று கொண்டிருக்கும் இரும்புப் பன்றி வடிவத்தின் வாயில் ஐந்து பாணங்களைச் செலுத்தினான்.
பொறாமையால் வெந்து கொண்டிருந்தான் துரியோதனன். அப்போது...
அர்ச்சுனா! கர்வம் கொள்ளாதே எனக்கு நிகராக மாட்டாய் நீ!
கர்ணா! நீ இங்கு வந்தது என் பாக்கியம்!
அர்ச்சுனன் அஞ்சவில்லை...
அறைகூவலை ஏற்கிறான்!
நிறுத்து!


மற்றொரு குருவான கிருபாச்சாரியார் ஆட்சேபித்தார்...
கர்ணா! அர்ச்சுனன் அரச குலத்தில் பிறந்தவன். அவனோடு யுத்தம் செய்ய உனக்கு என்ன தகுதி? நீ தேரோட்டி மகன்தானே!
துரியோதனன் பதைத்து எழுந்தான்...
ஆச்சாரியரே! ஒரு மாவீரன் அரசனுக்குச் சமமானவனே! அது போதாது என்றால் இப்போதே கர்ணனை அங்க நாட்டின் மன்னனாக்குகிறேன்!
கர்ணனைத் தங்க சிம்மாசனத்தில் அமர்த்தி அபிஷேகம் செய்து...
வாழ்க! வாழ்க!
...முடிசூட்டினான் துரியோதனன்.
நண்பா, உன் அன்பை என்றும் மறவேன்!
உனக்கு முடி சூட்டியதில் நான் பெருமைப் படுகிறேன்!
அப்போது அதிரதன் அந்த இடத்துக்கு வர...
அப்பா! ஆசி வழங்குங்கள்.
உன்னை மகனாகப் பெற்றது என் பாக்கியம்!




கங்கை நதியில் ஒரு சிறு பெட்டி மிதந்து சென்றது.
அதோ பார்! சூரிய கிரணங்களே அந்தப் பெட்டியை அன்போடு தள்ளிக் கொண்டு வருவது போலிருக்கிறது!
தேரோட்டி மகன் கர்ணன்
திருதராஷ்டிர மன்னரின் தேர்ப்பாகனாகிய அதிரதனும் அவன் மனைவி ராதையும் பெட்டியைக் கரைசேர்த்தார்கள்...
பெட்டியைத் திறக்க...
அட!
என்ன அழகான பெட்டி...!
உள்ளே என்ன இருக்கும்?
கதை ஆனந்தி படம் வினு
நம் குழந்தை இல்லாக் குறையைப் போக்க ஈசன் அருளிய செல்வன்!
குழந்தையை அன்போடு வளர்த்தார்கள்...
கவசமும் குண்டலங்களும் அணிந்து பிறந்திருக்கும் தெய்வீகக் குழந்தை...
கர்ணன் என்று அழைப்போ


கர்ணன் வாலிபப் பருவத்தை அடைந்தான். திருதராஷ்டிரனுடைய குமாரன் துரியோதனனின் நட்பைப் பெற்றான்.
பஞ்ச பாண்டவர்களும் கௌரவர்களும் துரோணாச்சாரியாரிடம் எல்லா வித்தைகளும் பயின்றார்கள். கர்ணன் துரியோதனனுடன் விளையாடியே சகலமும் கற்று அவர்களுக்கு நிகரானான்.
நாம் உயிர் நண்பர்களாக விளங்குவோம்!
பலே கர்ணா! பிரமாதமாக வாள் வீசுகிறாயே!
பயிற்சி தொடர்ந்தது...
கர்ணா! பீமனை ஜெயிக்க வேண்டும்! அது ஒன்று தான் என் குறிக்கோள்.
அர்ஜுனனை வெல்ல வேண்டும். அது தான் என் லட்சியம்!
நூறு அர்ஜுனர்கள் உனக்கு நிகராக மாட்டார்கள்!
துரோணர் தலைமையில் அரச குமாரர்களின் திறமைகளைக் காட்டும் அரங்கேற்று விழா...
பீமனும் துரியோதனனும் தங்கள் திறமைகளைக் காட்டுவார்கள்...
விளையாட்டு நிஜமான யுத்தமாகவே மாறிவிட்டது!
போதும் நிறுத்துங்கள்!




பீமன் பரிகசித்தான்...
தேரோட்டி மகனே! காகம் மயில் தோகையைச் செருகிக் கொண்டது போல் கிரீடம் அணிந்தால் அரசனாகி விடுவாயா? வில்லை எறிந்துவிட்டுச் சவுக்கைக் கையில் எடு!
துரியோதனன், கர்ணன் சார்பில் பேசினான்....
பெருந்தீனிக்காரனே! பலம், குலத்தை விடச் சிறப்புடையது. கர்ணன் உலகை ஆளும் ஆற்றல் உடையவன்!
கர்ணன் மனம் அமைதி அடையவில்லை...
பீமா! இன்றில்லா விட்டாலும் என்றாவது நீங்கள் என்னுடன் யுத்தம் செய்ய நேரிடும். அப்போது இன்று ஏற்பட்ட அவமானத்துக்குப் பழி வாங்குவேன்!
பாண்டவர்களைவிடப் பலசாலியாக வேண்டும் என்பதே கர்ணனின் லட்சியமாயிற்று...
தேர்ப்பாகனின் மகனுக்கு எந்த குருவும் பிரும்மாஸ்திரம் கற்றுத்தர மாட்டார்கள்... ஆனாலும் பரசுராமரிடம் போய்....
தனது திட்டப்படி பிராமணனாக வேடம் தரித்துப் பரசுராமரை அடைந்தான் கர்ணன்.
க்ஷத்திரியர்களை அழிப்பதே என் லட்சிய தெரியுமல்லவா? நீ பிராமணனா இருந்தாலும் பலசாலியா இருக்கிற உன் நீ ஏற்




பரசுராமர் எல்லா அஸ்திரங்களையும் செலுத்தக் கர்ணனுக்குக் கற்றுத் தந்தார்.
கடைசியாக பிரும்மாஸ்த்திரத்தையும் கற்பிக்க வேணும்...
அப்படியே ஆகட்டும்!
பிரும்மாஸ்த்திரம் செலுத்துவதிலும் தேர்ச்சி பெற்றான் கர்ணன். ஒரு நாள்...
களைப்பாக இருக்கிறது; சற்று இளைப்பாறினால் தேவலாம்.
குருவே! மரநிழலில் வஸ்திரம் விரிக்கிறேன். என்மடியில் தலைவைத்துப் படுத்துக் கொள்ளுங்கள்.
பரசுராமர் சயனிக்க, ஒரு வண்டு கர்ணன் துடையில் அமர்ந்து கடித்துக் குடைய ஆரம்பித்தது...
குருவின் நித்திரையைக் கலைக்க மாட்டேன். வேதனையைப் பொறுத்துக் கொள்வேன்!
பரசுராமர் விழித்து எழுந்தபோது...
தென்ன இப்படி உன் டையில் ரத்தம் பெருகுகிறது?
கர்ணன் நடந்ததைக் கூறவும்...
நீ என்னை ஏமாற்றி விட்டாய்! அந்தணனால் வலி தாங்க முடியாது! நீ பிராமணன் அல்ல, க்ஷத்திரியன்!


எனக்கு உன் கவசமும் குண்டலங்களும் தான் வேண்டும்!
துணுக்குற்றான் கர்ணன். ஆனாலும் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றினான். இந்திரன் மனமுருகி...
கர்ணனே! கொடையில் உனக்கு ஈடு இணை யாருமில்லை. உலகம் உள்ளளவும் உன் புகழ் நிலைக்கும்!
இந்திரன் சுயரூபத்தில் தோன்றி...
உனக்கு வேண்டிய வரம் கேள்!
சக்தி ஆயுதத்தை அருளி ஆசி வழங்குங்கள்.
பெற்றுக் கொள்! ஆனால் ஒரே ஒரு முறைதான் நீ இதைப் பிரயோகிக்க முடியும். பிறகு என்னிடம் வந்து சேர்ந்து விடும்!
ராஜ்ய ஆசையாலும் பொறாமையாலும் பாண்டவர்களைக் கண்டு அஞ்சிய துரியோதனன், அவர்களைச் சூழ்ச்சியால் அழிக்கக் கருதி அரக்கு மாளிகையில் தங்க வைத்தான். இரவில் மாளிகை பற்றி எரியச் செ தான். ஆனாலும் பாண்டவர்கள் சாமர்த்தியமாகத் தப்பி, தாயார் குந்தியுடன் பிராமண பிரும்மச் சாரிகளாக வேடமணிந்து வாழ்ந்து வந்தார்கள்.


கர்ணன் உண்மையை ஒப்புக்கொண்டான்...
குருவே என்னை மன்னியுங்கள். நான் அதிரதன் புதல்வன். இன்று அங்கதேசத்தின் மன்னன். பிரும்மாஸ்திரம் கற்கும் ஆசையால்...
பரசுராமர் சபித்துவிட்டார்...
அர்ஜுனனின் தெய்வத் தந்தையான இந்திரன் கவலையுற்றான்...
கர்ணன் மாவீரன். அவனால் அர்ஜுனனுக்கு ஆபத்து ஏற்படும். அவன் வலிமையைக் குறைத்து விட வேண்டும்...
கர்ணா! கபடமாக என்னிடம் அஸ்திரங்களைப் பயின்றாய்... அதனால் அவசியமான நேரத்தில் அவற்றைச் செலுத்தும் மந்திரங்கள் உனக்கு மறந்து போகும்!
அன்றிரவு கர்ணன் கனவில் சூரியன் தோன்றி...
நீ பிறக்கும் போதே அணிந்திருந்த கவச குண்டலங்களை யார் யாசித்தாலும் கொடுத்து விடாதே! அவை இன்றி அர்ஜுனனை நீ வெல்ல முடியாது!
தினமும் அதிகாலையில் சூரிய நமஸ்காரம் செய்துவிட்டு தானம் வழங்குவான் கர்ணன். அன்று ஒரு முதியவர் தோன்றி...
நீ கொடை வள்ளலாமே! எதைக்கேட்டா தருவாயோ


இதனால் துரியோதனனுக்கும் கர்ணனுக்கும் பாண்டவர்களிடம் பொறாமையும் பகையும் அதிகரித்தது...
கர்ணா! பாண்டவர்கள் புதிய தலைநகர் அமைத்துப் பெருமையோடு ஆள்கிறார்கள்! என்னால் பொறுக்க முடியவில்லையே!
அப்போது சகுனி சூழ்ச்சி சொன்னான்...
சூதாட்டத்துக்கு அழைப்பு அனுப்பு; அவர்களை நான் வென்று காட்டுகிறேன்!
அழைப்பைத் தவிர்க்க முடியாமல் வந்த தருமன், நாடு, நகரம், செல்வம், தம்பிமார்கள், அனைவரையும் இழந்து, கடைசியில் தன்னையும் இழந்து, பிறகு திரௌபதியைப் பணயம் வைத்தான்.
வென்றேன்!
திரௌபதி எங்கள் அடிமை!
அடிமைப்பட்டுப் போன பாண்டவர்களையும் திரௌபதியையும் துரியோதனனும், கர்ணனும் பலவாறு அவமதித்தார்கள்.
பீமனும் சபதம் செய்தான்:
துரியோதனனையும் துச்சாதனனையும் போரில் நான் கொல்வேன்! கர்ணனை அர்ச்சுனன் வெல்வான்! சகுனியைச் சகாதேவன் கொல்வான்!


நிபந்தனைப்படி பாண்டவர்கள் பன்னிரண்டு வருஷம் வனவாசம் இருந்தனர். ஓராண்டு மறைந்து வாழ்ந்தனர். கிருஷ்ணர் தூது சென்றார்.
துரியோதனா! பந்தய நிபந்தனை முடிந்தது. பாண்டவர்களுக்கு ஐந்து கிராமங்களாவது கொடு!
ஊசி முனை நிலமும் தரமாட்டேன்!
பாண்டவருக்கும் கௌரவருக்கும் யுத்தம் நடப்பது நிச்சயம் என்ற நிலையில், குந்திதேவி கவலையுடன் கர்ணனிடம் சென்று...
மகனே!
என்ன சொன்னீர்கள்!
குந்திதேவி உண்மையைக் கூறினாள்....
"அப்போது நான் சிறு பெண். துர்வாசர் எனக்கு மந்திரம் உபதேசித்தார்...
"... அந்த மந்திரத்தை ஜபம் செய்தால் குழந்தை பிறக்கும் என்று தெரிந்தும் விளையாட்டாக மந்திரத்தைச் சொல்லி சூரிய பகவானைப் பிரார்த்தித்தேன்..."
... கவச குண்டலங்களுடன் நீ பிறந்தாய். பயந்து போன நான் யாருமறியாமல் பெட்டியில் உன்னை வைத்து ஆற்றில் மிதக்க விட்டேன் ......




பாஞ்சால நாட்டு இளவரசி திரௌபதி, பேரழகி. அவள் தந்தை துருபதன் அவளுக்குச் சுயம் வரம் ஏற்பாடு செய்தான்...
சுயம் வரத்துக்கு எல்லா தேச அரசர்களும் வந்து கூடினார்கள்......
திரௌபதியை அடைய என்ன போட்டா போட்டி!
அவள் அழகும் அறிவும் ஒன்றோடொன்று போட்டி போடுவதால் தான்.
அரசவை - மன்னன் துருபதன் ஒரு போட்டியை அறிவித்தான்!
மேலே சுழலும் மீன் இலக்கைக் கீழே நீரில் அதன் பிரதி பலிப்பைப் பார்த்தவாறு அடித்து வீழ்த்த வேண்டும்!
துரியோதனன், கர்ணன் உள்பட பலமன்னர்கள் முயன்று தோல்வி கண்டனர்...
யாரால்தான் இதைச் சாதிக்க முடியும்?
திரௌபதிக்குத் திருமணமே நடக்காது!
அப்போது ஓர் அந்தணன் வந்தான்.....
நானும் முயன்று பார்க்கிறேன்.
இலக்கு அடிபட்டு விழுந்தது!
ஆகா அற்புதம்!
நீ பிராமணனாலும் நான் வாக்களித்தபடி திரௌபதியை உனக்கே தருவேன்.



பிராமணனாக வந்து தன் மகளை அடைந்தது அர்ச்சுனனே என்பதை ஒற்றர்மூலம் அறிந்த துருபதன், பாண்டவர்களைத் தன் அரண்மனைக்கே தருவித்துக் கொண்டான்...
வருக! வருக!
தருமர் பேசினார்:
நாங்கள் கஷ்டத்தில் இருந்தபோது லாப நஷ்டங்களையும் இன்ப துன்பங்களையும் சமமாகப் பங்கிட்டுக் கொள்வதாகச் சபதம் எடுத்தோம். அதனால் திரௌபதியை ஐவருமே மனைவியாக அடைகிறோம்.
அப்படியே ஆகட்டும்.
துரியோதனனுக்குச் செய்தி எட்டியது.
கர்ணா! பாண்டவர்கள் அரக்கு மாளிகையிலிருந்து தப்பி உயிரோடு இருக்கிறார்கள்! பாஞ்சால மன்னனின் மகளை மணந்து, முன்னிலும் பலசாலிகளாக இருக்கிறார்கள்! என் நெஞ்சு கொதிக்கிறது!
கர்ணன் அறிவுரை:
துரியோதனா! சூழ்ச்சிகளைத் தொடராதே! படையெடுத்துப் போவோம்! வீரத்துடன் போரிட்டு வெல்வோம்!
ஆனால் துரியோதனன் தந்தை திருதராஷ்டிரன் வேறு விதமாக முடிவு செய்தார்.
பாதி ராஜ்யத்தைப் பாண்டவர்களுக்குத் தந்து விடுவோம்; அமைதியாக வாழ்வோம்.


குந்திதேவியின் அறிவுரை...
மகனே! பாண்டவர்களுடன் சேர்ந்து கொள்! ஐந்து தம்பிகள் புடை சூழ மாமன்னனாக விளங்கலாம்!
தாயே! என்னைத் தேரோட்டி மகன் என்று கேவலமாகப் பேசினார்கள்...
...நான் தேரோட்டி அதிரதனின் வளர்ப்பு மகன் மட்டுமல்ல; ஏழு குதிரைகள் பூட்டிய தேரைச் செலுத்துகிற சூரியதேவனின் மகன்! தாயே! என் மனம் பூரிக்கிறது.... ஆனால்...
...நான் துரியோதனனுக்குக் கடமைப்பட்டவன். அர்ச்சுனனைக் கொல்வதாகச் சபதம் செய்திருக்கிறேன். நன்றி கொன்றவனாக மாட்டேன்!
தாயே! ஒரு வாக்குறுதி தருகிறேன். தங்களுக்கு எப்போதும் ஐந்து புதல்வர்கள் இருப்பார்கள். நாளை அர்ச்சுனனே இறப்பது உறுதி. ஆனால் அர்ச்சுனனைத் தவிர உங்கள் பிள்ளைகளில் வேறு யாரையும் கொல்ல மாட்டேன்.
பாரதப் போர் தொடங்கியது... நகுலன் கர்ணனிடம் தோற்று ஓடினான்!
நகுலா! பிழைத்துப் போ! ஓடிப்போ! ஹஹ் ஹ ஹா!



பீமனின் மகனான கடோத்கஜன் அபாரமாக யுத்தம் செய்தான்.
கௌரவர்களே! பயப்படாதீர்கள்! ஓடாதீர்கள்! கடோத்கஜனை வெல்வது என் பொறுப்பு!
கர்ணன் பொறுப்பேற்று கடோத்கஜனை எதிர்க்க...
கடோத்கஜா! தேரையும் பாகனையும் இழந்தாயே! இப்போது என்ன சொல்கிறாய்?
மாயம் அறிந்த கடோத்கஜன் மறைந்து போனான். இருள் சூழ்ந்தது. ஆகாயத்திலிருந்து கல்மாரி பெய்தது. ஆயுதங்களும் உதிர்ந்தன.
கர்ணா! காப்பாற்று!
கர்ணனுடைய குதிரைகளைக் கடோத்கஜன் கொன்றான்.
கர்ணா! கௌரவ சேனையை நீ காப்பது கிடக்கட்டும்; முதலில் உன்னைக் காத்துக் கொள்!
மாயமாய் மறைந்து, மறைந்து வெவ்வேறு இடங்களில் தோன்றிய கடோத்கஜனை வெல்ல ஒரே வழிதான் கர்ணனுக்குப் புலப்பட்டது.
பல ஆண்டுகளாக நான் பூஜித்து வரும் வைஜயந்தியே! கடோத்கஜனை வென்று வா!


இந்திரன் அருளியிருந்த சக்தி ஆயுதம் தாக்க, மலை போன்ற கடோத்கஜன் மார்பு பிளக்கப் பட்டு இறந்தான்.
மாவீரனே! உன்னைக் கொல்ல நேர்ந்ததற்காக வருந்துகிறேன்! வீர சொர்க்கம் அடைவாய்!
கண்ணன் சிரித்தான்! அர்ச்சுனன் வியந்தான்.
கண்ணா! ஏன் சிரிக்கிறீர்கள்?
பார்த்திபா! கர்ணன் சக்தி ஆயுதத்தை இழந்து விட்டானே! இந்திரன் அருளிய வரத்தின்படி அதை ஒரே ஒருமுறைதானே அவனால் பிரயோகிக்க முடியும்! அதனால் இனி அவனை நாம் வெல்வது உறுதி!
யுத்தத்தில் பீஷ்மர் அடிபட்டு விழ, துரோணர் உயிர் துறக்க, துரியோதனன்...
கர்ணா! இனி நீயே கௌரவ சேனாபதி!
பாண்டவர்களை வென்று உங்கள் மனத்தைக் குளிர் விப்பேன்!
யுத்தத்தின் பதினாறாம் நாள் கர்ணன் துரியோதனனிடம்...
அரசனே! அர்ச்சுனனுக்குக் கண்ணன் ரத சாரதியாக இருக்கிறார். அவருக்கு நிகரான ரத சாரதி எனக்குக் கிடைத்தால் நான் அர்ச்சுனனை வெல்வது உறுதி!
சல்லியனை அழைக்கிறேன்!


மந்தர நாட்டு மன்னன் சல்லியன் தேர்ப்பாகனாக அமர, கர்ணன் தருமரையும் வென்றான். அவர் அடிபட்டுத் திரும்ப...
இனி அர்ச்சுனனைத் தாக்குவேன்!
கர்ணனின் மகன் விருஷசேனனைக் கொன்றான் அர்ச்சுனன்...
கர்ண! அபிமன்யுவின் மரணத்துக்குப் பழி வாங்கினேன்!
துயரத்தில் கர்ணனுக்கு அஸ்திர மந்திரங்கள் மறந்து போயின. மேலும் அவன் தேர்ச் சக்கரம் பூமியில் புதையுண்டது...
அர்ச்சுன! பொறு! சக்கரத்தை நான் தூக்கும் போது என்னைத் தாக்குவது தர்மம் அல்ல!
கண்ணன் சிரித்தார்...
கர்ண! திரௌபதியைச் சபையில் இழுத்து ஆடை உருவி அவமதித்தீர்களே, அப்போது தர்மம் என்ன ஆயிற்று? அர்ச்சுன! இரக்கப்படாதே!
அர்ச்சுனன் எய்த அஞ்சலிகம் என்ற அஸ்திரம் கர்ணனை மாய்த்தது. மாவீரன், கொடைவள்ளல், பேரறிஞன், தவயோகி கர்ணன். ஆயினும் தகாத நட்பினால் வாழ்விழந்தான்.

என் குடும்பத்தில் என்ன குழப்பம்?

முணவை இதயராஜ்



ஒருமுறை பூஜ்ஜியம் முதல் ஒன்பது வரையுள்ள எண்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டத்தைக் கூட்டின. தங்களுக்குள்—'யார் பெரியவர்?'—என்ற சர்ச்சையே முதலில் தொடங்கியது. ஒவ்வொன்றும் 'நான்தான், பெரியவன்' 'நான்தான் பெரியவன்' எனக் கூறக் குழப்பம் ஆரம்பமாகியது.

9

ஒன்பது எழுந்து நின்று, ''உங்களில் நான்தான் பெரியவன்; அதற்குரிய தகுதியும் தன்மையும் எனக்கே இருக்கிறது. அதாவது இடமதிப்பாலும், என் சொந்த மதிப்பாலும், உங்கள் எல்லோரையும் விட அதிகத் தகுதி வாய்ந்தவன் நான்தான். நவதானியங்களின் நாயகன் நான். நவக்கிரகங்களில் வாழ்பவனும் நான்தான். இவ்வுலகத்திலே பொன்னுக்கும் பொருளுக்குமே முதலிடம். அந்த முறையில் நவரத்தினங்களின் அதிபதியே நான்தான். எல்லா வழிகளிலும் என்னை மிஞ்சிய தகுதி இங்கு யாருக்கும் கிடையாது. ஆகவே, நான்தான் பெரியவன்'' என்றது.

6

உடனே ஆறும் எண் எழுந்து மறுத்தது. ''வீண் ஜம்பம் காட்டாதே. எத்தனை தகுதிகள் இருந்தாலும் 'தான்' என்ற கர்வம் கூடாது. அது அத்தனை தகுதிகளையும் அழித்துவிடும். உன்னைப் போல நானும் தலைக்கனம் கொண்டு திரிந்தவன்தான். அதன் பயனாக என் நிலை மாறி, தலைகீழாக நிற்கிறேனே உனக்குப் புரியவில்லையா? நானும் கொஞ்சம் தன்னம்பிக்கையுடன் நிமிர்ந்து நின்றால் என் பழைய நிலையை அதாவது உன் நிலையை அடைய முடியும் என்பதை மறந்து விடாதே!''

8

எட்டு எழுந்து, ''அஷ்ட லட்சுமிகளே நான்தான். நவதானியமாகவும், நவமணியாகவும் ஒருவர் இருக்கலாம். ஆனால், தானிய லட்சுமியும் நானே! ஐசுவரிய லட்சுமியும் நானே. திக்குகள் அனைத்தும் எனக்கே சொந்தம். எட்டுத் திசையையும் கட்டி ஆள்பவன் நானே. எனவே உங்களில் பெரியவன் நானே!'' என்றது.

5

''எதை அடக்கி ஆண்டால் என்ன? கொஞ்சம் கூட அழகும் அம்சமும் இருக்க வேண்டாமா? முட்டைக் கண்கள் முதன்மை பெறுவது முறையாகாது; உங்கள் அனைவரிலும் அழகானவனும் நானே; அம்சமானவனும் நானே; பஞ்ச பூதங்களே என் பரம்பரைதான்; பகட்டுகள் காட்டாதீர்கள். அது பலிக்காது. பக்குவமாய்ச் சொல்லுகிறேன். உங்களில் பெரியவ

ளுகும் தகுதி எனக்கே இருக்கிறது'' என்று ஐந்தாம் எண் அரற்றிவிட்டு அமர்ந்தது.

3

''அழகு, அம்சம் என்று வைத்துக் கொண்டால் எனக்கென்ன குறைச்சல்? முக்காலத்திலும் உறைபவன் நான். பிரம்மா... மட்டும் என்ன, மும்மூர்த்திகளின் முறைமையே நான்தான். முத்தொழிலும் எனக்கே சொந்தம். கடவுளர்களே நாளுக இருக்கும்பொழுது கருத்தைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். நான்தான் உங்களில் பெரியவன்'' என்று மூன்று முணுமுணுத்து விட்டு அமர்ந்தது.

4

''கொக்கி எழுத்துக் கோணங்கிகளும், புத்தி வளைந்து போனவர்களும், அழகு என்றும், அம்சம் என்றும் பேசுவதைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது., நால் வகைப் படையின் நாயகன் நானே! நாட்டையும் வீட்டையும் ஆளும் பெண்களின் குணத்துக்கும் அதிபதி நானே. உலகைப் படைக்கும் பிரம்மனின் முகமும் நானே. நாலெழுத்துப் படித்தவர்களைக் கேளுங்கள், யார் பெரியவன் என்று? அவர்களும் என்னைத்தான் பெரியவன் என்று ஒப்புக் கொள்வார்கள்,'' — நறுக்கென்று சொல்லி அமர்ந்தது நான்கு.

7

ஏழு: — ''ஸ்வரங்களை ஏற்றுக் கொண்ட இசையுலகச் சக்கரவர்த்தி நானே. இசையால் இவ்வுலகை மயங்கவைக்க என்னால் முடியும். வான வில்லின் வண்ணங்களில் வாழ்பவன் நானே. வாரத்தின் நாட்கள் எனக்கு வாழ்த்துப் பாடுவதை நீங்கள் கேட்கவில்லையா? ஜென்மங்களுக்கெல்லாம் அதிபதி நான்தான். சிந்திக்கத் தொடங்குங்கள், நான்தான் உங்களில்பெரியவன்.''

2

''நீரென்றும், நிலமென்றும், உலகத்தின் உயிர்நாடியே நான்தான். ஆண், பெண் உயிரினமும் நான். நல்லது, கெட்டது, உறவு — பகை, வெற்றி — தோல்வி, நன்மை — தீமை என மக்களோடு மக்களாக இரண்டறக் கலந்து விட்டவன் நான். உண்டு — இல்லை என்று உரைப்பவனும் நான். இரவும் பகலுமாக இருப்பவன் நான். எனவே, உரிமையுடன் சொல்லுகிறேன். உங்கள் எல்லோரையும் விட நான்தான் பெரியவன்.'' — இரண்டு இறுமாப்புடன் பேசிவிட்டு அமர்ந்து கொண்டது.

1


''இரவு — பகல் என்றாலும் நாள் ஒன்றுதானே! ஆண், பெண் என்று

திருடனுக்கு மரியாதை!

''திருடனுக்குக்கூட நாம மரியாதை கொடுத்தால் ஓடி விடுகிறான்னு சொன்னியே எப்படிடா?''

''ஆமாண்டா, நேற்று எங்க அப்பா வெளியிலே போய் இருந்த போது திருடன் ஒருவன் வந்தான். நான் மரியாதையாக, 'திருடரே, திருடரே வாங்க வாங்க'ன்னு பலமாக் குரல் கொடுத்தேன். உடனே, வந்த வழியே திரும்பி விட்டானே!''

— டி. எல். ரெட்டி.





தேனி கோ.சி.ச. 2வது ஆண்டு விழா

தேனி கோகுலம் சிறுவர் சங்கத்தின் இரண்டாம் ஆண்டுத் தொடக்க விழாவிற்கு வடுகப்பட்டி நல்லாசிரியர் இரா. வைகுண்டம் தலைமை வகித்தார். சிறப்பு ஆலோசகர் டாக்டர் கவிஞர் உ. கண்ணப்பன் சங்க உறுப்பினர்களுக்குப் பல விஞ்ஞான அறிவுப் புதையல் நிகழ்ச்சிகளை நடத்தினார். அதிக மதிப்பெண் பெற்ற உறுப்பினர்களுக்கு நல்லாசிரியர் இரா. வைகுண்டம், தம் சொந்தச் செலவில் 'திருக்குறள்' நூல் பரிசளித்தார். விழா நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் சிறந்த முறையில் அமைப்பாளர்கள் தேனி முருகேசனும் கள்ளிப்பட்டி சேவகனும் செய்திருந்தார்கள்.

லும் குடும்பம் ஒன்றுதானே! உண்டு— இல்லை என்றாலும் கருத்து ஒன்றுதான். நன்மை — தீமை என்றாலும் வாழ்க்கை ஒன்றுதான். எனவே, வீண் பிதற்றல் தேவை இல்லை. ஆதி முதலும் நான்; ஆதவனும் நான்; அம்புலியும் நான்; ஒன்றில்லாமல் மற்றொன்று உயர்வாகுமா? நம்மவரில் முதன்மையானவன் நான்தான். பள்ளி செல்லும் பாலர்கள் கூட முதன் முதலில் என்னைத்தான் அடையாளம் தெரிந்து கொண்டு" எழுதத் தொடங்குகிறார்கள்.

மேலும் உங்களைப் போல் கோணல் புத்தியும் குறுக்கு மூளையும் எனக்குக் கிடையாது. நேராக நிற்பவன்; நேர்மையுடன் இருப்பேன். உங்கள் வளைவு, சுழிவுகள் எனக்கு வழக்கமில்லை. உங்களில் முதன்மையானவன் நான். முதன்மையானவன்தான் எல்லோரிலும் பெரியவன் என்பதை மறந்துவிடாதீர்கள்." ஒன்று கொஞ்சம் நீட்டி முழக்கிவிட்டு, வாதத்தில் ஜெயித்து விட்டதாக நினைத்துப் புன்முறுவலுடன் அமர்ந்தது.

0

அனைவரும் அவரவர் பங்குக்குப் பேசிவிட்டு அமர்ந்தனர். ஆனால் பூஜ்ஜியம் மட்டும் இன்னும் வாய் திறக்கவே இல்லை. 'அந்தக் குறையை நாம் ஏன் வைக்க வேண்டும்?' — என்று பூஜ்ஜியம் பேசுவதற்கு எழுந்து நின்றது. அதைக் கண்ட மற்ற எண்கள் அனைத்தும் 'கொல்' எனச் சிரித்தன.

உடனே பூஜ்ஜியம் "ஏன்...? ஏன்...? ஏன் சிரிக்கிறீர்கள்? 'நமக்கு என்று ஒரு தனி 'இடமதிப்பு' — இருக்கிறது. இல்லாதவன் எழுந்து பேசப் போகிறானே!' என்று எக்காளமாகச் சிரிக்கிறீர்களா? சிரிப்பதை விட்டுவிட்டுச் சிந்தியுங்கள்.

பூஜ்ஜியத்துக்குள் ஒரு ராஜ்ஜியத்தை அமைத்துக் கொண்டு ஆட்சி செய்பவன் நான். எனக்கென்று எந்த ஒரு 'தனி மதிப்பு'ம் இல்லை என்பதை


நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால், உங்கள் நிலை உயர நான் உங்களுடன் இணைந்தால்தான் முடியும். எனக்குத் தனி மதிப்பு இல்லையென்றாலும் உங்கள் மதிப்பை உயர்த்திக் காட்ட நான் உங்களுக்குத் தேவைப்பட்டாக வேண்டும். வீண் பெருமை அடித்துக் கொள்ளாதீர்கள். உங்கள் மதிப்பை உயர்த்தும் நான்தான் உண்மையிலேயே உங்களை விடப் பெரியவன்''

ஒவ்வோர் எண்ணின் அருகிலும் சென்று அதனதன் மதிப்பைப் பத்து, இருபது... முப்பது எனக் கூட்டிக் காட்டிய பூஜ்ஜியம் கடைசியில் ஒன்பது அருகில் சென்றதும் மீண்டும் ஒன்பதுக்குத் தலைக்கனம் வந்து விட்டது.

"பூஜ்ஜியத்தின் கூற்றுப்படியே, அது நம் அனைவரிடமும் சேர்ந்து நின்றாலும் எனக்குத்தான் மதிப்பு அதிகம். எனவே, நான்தான்......'' எனப் பழைய பல்லவியைப் பாடியது. உடனே, ஒன்றும் இரண்டும் சேர்ந்து பூஜ்ஜியத்துடன் இணைந்து நின்று தாம்தான் பெரியவை என்றன. அடுத்து மூன்றும் நான்கும், ஐந்தும் ஆறும், ஏழும்எட்டும் இப்படி இரண்டு இரண்டாகச் சேர்ந்து நின்று தாம் தான் பெரியவை என்றன. எல்லா எண்களும் மாறி மாறித் தங்கள் மதிப்புகளைக் கூட்டிக் காட்டுவதில் மும்முரமாக இருந்தன. ஆனால் எல்லாவற்றுக்குமே பூஜ்ஜியத்தின் உதவி தேவைப்பட்டதால் எல்லாமும் பூஜ்ஜியத்தை இழுத்து வளைக்க ஆரம்பித்தன. எனவே பெரிய சலசலப்பு ஏற்பட்டு... முற்றி... கைகலப்பாக மாறும் நிலையில், பூஜ்ஜியம் எழுந்து நின்றது.

1234567890

''தோழர்களே! நாம் எல்லோரும் ஒரு குடும்பம்; ஆம், என் குடும்பம். நமக்குள் உயர்வு தாழ்வுகள் கிடையாது. எல்லோரும் இங்கு மன்னர்களே. ஒற்றுமையே வெற்றிக்கு வழி. நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே. அதற்கு முதல் உதாரணமே நான்தான். என்னை நீங்கள் எல்லோரும் ஒதுக்கி வைத்தாலும், அல்லது உங்களைவிட்டு நான் ஒதுங்கிக் கொண்டாலும் என்னைத் தீண்டுவாரும் கிடையாது. சீண்டுவாரும் கிடையாது. மொத்தத்தில் எனக்கு எதுவுமேகிடையாது. எனவே, ஒருவரை ஒருவர் அணைத்து ஒற்றுமையுடன் உலா வருவோம். நமக்கு முடிவு என்பதே கிடையாது. ஆம்... மனித கண்டுபிடிப்புகளில் முடிவில்லாத ஒன்று உண்டு என்றால், அது நாம்தான்; நமது ஒற்றுமைதான்; எனவே ஒற்றுமையுடன் வாழுவோம்! வளருவோம்!!" என்று உரையை முடித்தது பூஜ்ஜியம்.



பிருந்தாவனம்

அவன் எழுதியது?

வகுப்பிலே ஆங்கிலப் பாடம் நடந்து கொண்டிருந்தது. "இன்று எல்லோருக்கும் Verb என்றால் என்ன என்று சொல்லிக் கொடுத்தேன். இப்போது நீங்கள் ஒவ்வொருவரும் ஐந்து Verb கள் எழுத வேண்டும். உடனே உங்கள் நோட்டில் எழுதிக் கொண்டு வந்து வையுங்கள்" என்றார் ஆசிரியர்.



குமார் மிக வேகமாக எழுதி ஆசிரியர் மேஜை மேல் முதலில் கொண்டு போய் வைத்தான். ஆசிரியர் அதைப் படித்துப் பார்த்ததும், அவரையும் அறியாமல் வாய் விட்டுச் சிரித்து விட்டார்.


உளுத்தம் பருப்பு
கடலைப் பருப்பு
பாதாம் பருப்பு
பாசிப் பருப்பு
துவரம் பருப்பு

பாவம், குமாருக்கு ஆசிரியர் சொன்னது சரியாகக் காதில் விழவில்லை போலிருக்கிறது. Verb என்பதைப் பருப்பு என்று நினைத்துவிட்டான்!

— ஏ. பிரபு (641), பரோடா.

பனைமரத் தாலுகா

'பனைமரத் தாலுகா' என்று திருச்செந்தூர் வட்டத்துக்கு ஒரு பெயர் உண்டு. காரணம், இங்கு ஏராளமான பனை மரங்களைக் காணலாம். பனை



ஓலையால் செய்த செருப்புகளை அணிந்து கொண்டு வயல் வெளியில் நடப்பவர்களையும் இங்கு காணலாம். மணற்பாங்கான பகுதிகளில் நடக்க இது வசதியாக இருக்கிறதாம்.

ஆதாரம்: சோமலெ எழுதிய 'திருநெல்வேலி மாவட்டம்'

— விஜி (397), மதுரை.

எந்தப் பாட்டு?



வெள்ளை நிறத்தொரு பூனை — எங்கள்
  வீட்டில் வளருது கண்டீர்;
பிள்ளைகள் பெற்றதப் பூனை — அவை
  பேருக் கொருநிற மாகும்.

இது பாரதியார் பாட்டு என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால், இது எந்தப் பாடலில் வருகிறது? பாடலின் பெயர் தெரியுமா?

'வெற்றி எட்டுத் திக்கும் எட்டக்
கொட்டு முரசே'

என்று ஆரம்பமாகும் 'முரசு' என்ற பாடலில் வருகிறது.

— பி.எல்.சாந்தி (5939), இராயவரம்.



இவர் யார்?

'இந்தியாவின் மாணிக்கம்; மகாராஷ்டிரத்தின் அணிகலன்' என்று பால கங்காதர திலகரால் பாராட்டப் பெற்றவர்; 'என் அரசியல் குரு' என்று மகாத்மா காந்தியால் போற்றப்பட்டவர். சென்னைப் பல்கலைக் கழகப் பூங்காவில் இவருடைய உருவச் சிலை இருக்கிறது.

இவர் யார்?

கோபாலகிருஷ்ண கோகலேதான்.

ஆர். ராஜா (1006), சென்னை—17.

நான் யார்?


1. இரட்டையர் நாங்கள்.
   நான் ஏறினால் அவன் இறங்குவான்;
   அவன் ஏறினால் நான் இறங்குவேன்!
   — நான் யார்?
2. எனக்குக் காலும் இல்லை; கையுமில்லை; ஆனால், ஆடிக் கொண்டேயிருப்பேன்!
   — நான் யார்?
3. சும்மா தொட மாட்டேன்;
   தொட்டால் விட மாட்டேன்!
   — நான் யார்?
4. எனக்குமூன்றுகண்கள் உண்டு;
   நான் சிவன் அல்ல;
   எனக்கு ஒரு குடுமி உண்டு;
   நான் வேதியரும் அல்ல;
   எனக்கு உடம்பு முழுவதும் உரோமம் உண்டு;
   நான் கரடியும் அல்ல;
   — பின் நான் யார்?



விடைகள்: 1. தராசுத்தட்டு, 2. பெண்டுலம், 3. மின்சாரம், 4. தேங்காய்.


— ஜி. அருண் (12,661), பாண்டிச்சேரி.

வெங்காயம்



பெரியவர் ஒருவரைப் பார்க்கச் சென்றால் எலுமிச்சம் பழத்தை அவரிடம் கொடுத்து ஆசி பெறுவது நம் நாட்டின் வழக்கம். நேபாளத்தில் வெங்காயத்தை இப்படிப் பயன்படுத்துகிறார்கள். அங்கே ஆலயத்தில் இறைவனுக்குப் படைப்பது வெங்காயமே.

— கே. நரசிம்மன் (7378), ஓசூர்.



கழுதைக்கு நினைவுச் சின்னம்

மத்தியக் கிழக்கில் இராணுவத்தைச் சேர்ந்த ஒரு கோவேறு கழுதைக்கு, அதன் தீரச் செயல்களுக்காக ஒரு நினைவுச் சின்னம் நிறுவியிருக்கிறார்கள். அந்தக் கோவேறு கழுதையிடம் உதை பட்டவர்கள்: 2 கர்னல்

கள், 4 மேஜர்கள், 24 லெப்டினன்டு கள், 42 சார்ஜெண்டுகள், 486 சிப் பாய்கள். இறுதியாக அது உதைத்தது ஒரு வெடிகுண்டு.

— கே. எஸ். கோபாலகிருஷ்ணன் (13,550), புல்வாய்க்கரை.

இடம் மாறிய எழுத்துக்கள்



1. தாகாசளின் — ஒரு புலவர்
2. சிபுகார்ஞ்ம் — ஓர் ஊர்
3. பதுல்காந் — ஒரு விளையாட்டு
4. ஞேறுக்கிண் — ஓர் அறிவியல் சாதனம்
5. சபதக்த்வம்ல—முன்னாள் முதல் வர்


விடை: 1. காளிதாசன், 2. காஞ்சி புரம், 3. கால்பந்து, 3. நுண்ணோக்கி, 5. பக்தவத்சலம்.

— டி. அருணாசலம் (10,280), சென்னை — 17.

எழுதியவர் யார்?

கீழே சில நூல்களின் பெயர்களும் அவற்றின் ஆசிரியர்களின் பெயர் களும் இருக்கின்றன. தாறுமாறாக இருக்கும் அவற்றைச் சரி செய்து பாருங்கள்:

1. மலரும் மாலையும் — ர. அய்யா சாமி




2. ஓலைக் கிளி — பெ. நா. அப்பு ஸ்வாமி,
3. தங்க நகரம் — மயிலை சிவமுத்து
4. சித்திரக் கதைப் பாடல்கள் — கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
5. பால ராமாயணம் — அகிலன்
6. முத்துப்பாடல்கள் — பெ. தூரன்

விடை: 1. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, 2. பெ. தூரன், 3. அகிலன், 4. பெ. நா. அப்புஸ்வாமி, 5. ர. அய்யா சாமி, 6. மயிலை சிவமுத்து.

— மா. நா. ஸ்ரீதர் (13,601), சென்னை — 106.

சில உண்மைகள்

* மீனின் செதில் பகுதியிலுள்ள வளையங்கள் அதன் வயதைக்குறிக் கின்றன.
* உலகில் அடிக்கடி பூகம்பம் ஏற் படும் நாடு ஜப்பான் அல்ல; 'மெக் ஸிகோ' என்ற நாடுதான்.



* நண்டுக்கு ஐந்து ஜோடிக் கால்கள் உண்டு. செவுள்களால்தான் அது மூச்சு விடும்.
* வெட்டுக்கிளிக்கு அதன் முன் கால்களில்தான் காதுகள் இருக் கின்றன.
* கஸ்தூரிமான் இனத்திற்குக்கொம் புகள் இல்லை.

— ரா க சௌ. கருணாகரன் (883), சேலம் — 1.

அறிவுரைகள்

* சஞ்சல புத்தி உடையவன் ஒரு பொழுதும் வாழ்க்கையில் வெற்றி பெற மாட்டான்.

— காந்திஜி

* கல்வியில் முழுமை பெற அறிவு

மட்டும் போதாது; அதிக நினைவாற்றலும் வேண்டும்.

— நேருஜி

* உடல்நலம் ஒரு வரப்பிரசாதம்; திருப்தி உயர்ந்த செல்வம்; உண்மை நண்பனே சிறந்த உறவினன்.

— புத்தர்



* நீ பெறுகின்ற தண்டனைக்கும், பாராட்டுதலுக்கும் உன்னுடைய நடவடிக்கையே அடிப்படை.

— நபிகள் நாயகம்


* உழைப்பின் மூலம் ஒரு ரூபாய் சம்பாதிப்பது பிறர் உழைப்பைச் சுரண்டிச் சேர்த்த லட்ச ரூபாயை விட மதிப்பில் அதிகமானதாகும்.

— ஹென்றி போர்டு

தொகுப்பு: இரா சங்கர் (4071), கடம்பூர்

மடங்கும் கம்பம்

கார் மற்றும் இதர ஊர்திகளில் பயணம் செய்பவர்களில் பலர் தெரு விளக்குக் கம்பங்களில் மோதி இறந்து விடுகின்றனர். அவர்கள் உயிரைக் காப்பாற்றவும், ஊர்திகள் சேதமடையாமல் இருக்கவும் தானாகவே மடங்கிக் கொள்ளும் கம்பங்களை இங்கிலாந்தில் உள்ள மிடில்பெரோ நகர பெட்டிஜீன் நிறுவனத்தினர் தயாரித்திருக்கிறார்கள். எஃகுத் தகட்டில் செய்யப்பட்ட இந்தத் தெருவிளக்குக் கம்பங்களின் மேல் ஊர்திகள் மோதினால், கம்பங்கள் தாமாகவே மடங்கி ஊர்திகளுக்கு வழிவிடுகின்றன.



யாரேனும் ஒருவர் தப்பித் தவறி விளக்குக் கம்பத்தில் மோதி இறந்து விட்டால், அவருடைய குடும்பத்திற்கு ரூபாய் 55,000/— காப்புத் தொகை வழங்குகிறது.

ஆதாரம்: 'கலைக்கதிர்.'

அனுப்பியவர்: ஆர். சுரேஷ் (4235), எம். களத்தூர்.

ஓர் எழுத்தை நீக்கினால்...?



1. தேர்தலில் போடுவது; நடுவில் உள்ள எழுத்தை நீக்கிவிட்டால் நீங்கள் நிற்கக் கூடாது.

2. இளைஞர்கள், ரசிகர்கள் அமைத்துக் கொள்வது. இரண்டாவது எழுத்தை நீக்கிவிட்டால் கிடைப்பது வீரம்.

3. கம்ப்யூட்டரைக் குறிக்கும் தமிழ்ச் சொல்; இரண்டாவது எழுத்தை நீக்கிவிட்டால் மணலைச் சலித்தால் வருமே, அது கிடைக்கும்.

4. சொத்துக்கு நியமிப்பதுண்டு, இரண்டாம் எழுத்தை நீக்கிவிட்டால், ஓர் ஆணின் பெயர்.


5. ஆந்திராவில் உள்ள இக்கோயிலில்தான் வருமானம் அதிகம். நான்காம் எழுத்தை நீக்கிவிட்டால், கிடைப்பது 'போதும்' என்ற மனம்.

விடை: 1. ஓடு, 2. மறம், 3. கப்பி 4. வாசு, 5. திருப்தி.


— என்சி (16,108), கோட்டாத்தூர்

எது அரிது?

ரா. பொன்ராசன்







ஆழக் கடலில் மூழ்கி நல்ல
முத் தெடுப்பதும் — அந்த
ஆகாயத்து நிலவில் ஏறி
மண் எடுப்பதும்
பாலையினைப் பண் படுத்திச்
சோலை செய்வதும் — எண்ணிப்
பார்த்தால் மிக அரியது தான்,
மறுக்கவே இல்லை.

கொடும் கொடிய விலங்கு களைப்
பணியச் செய்வதும் — நம்மைக்
கொல்லும் நச்சுக் கிருமி களை
அழியச் செய்வதும்
அரும் பெரிய சாதனை தான்
மறுக்கவே இல்லை — ஆனால்
அதற்கும் மேலே அரிய துண்டாம்
அறிந் திருப்பீரே.

பெரியவருள் எல்லாம் மிகப்
பெரியவர் தம்மை — நன்கு
பேணி நாமும் உறவு கொண்டு
பிரியம் கொள் வதே
அரிய வற்றுள் எல்லாம் மிக
அரிய தாம் என — நம்
ஆசான் திரு வள்ளு வனார்
அருளிச் செய்தி னார்!

குறள்: அரியவற்றுள் எல்லாம் அரிதே—பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.







கேளுங்கள்: சொல்லுகிறோம்

* பாரதியார் பாடல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளனவா?

— எஸ். அருணா, நாட்டரசன்கோட்டை.

மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 'Agni and other Poems' என்ற நூலில், பாரதியாரே தம்முடைய பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருப்பதைக் காணலாம். 'Voice of a Poet' என்ற நூலைக் கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கம் வெளியிட்டிருக்கிறது. அதில் ராஜாஜி, பெ. நா. அப்புஸ்வாமி, போன்ற தமிழறிஞர்கள் மொழி பெயர்த்த பாரதி பாடல்கள் அடங்கியுள்ளன. பாரதியாரின் ஏராளமான பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து டாக்டர் பிரேமா நந்த குமார் யுனெஸ்கோ சார்பில் வெளியிட்டிருக்கிறார். மேலும் பலர், பாரதி பாடல்களை ஆங்கிலத்தில் தந்திருக்கிறார்கள்.

* சென்னையில் பல தலைவர்கள் கலைஞர்கள் பெயரால் நினைவு மண்டபங்கள் இருக்கின்றன. ஆனால், பாரதியார் பெயரால் நினைவு மண்டபங்கள் உள்ளனவா?

— எம்.ஏ. சரவணன் கோபி.

பாரதி பெயரால் பொது மண்டபம் எதுவும் இல்லை. சென்னையில் உள்ள பாரதியார் சங்கம் பல ஆண்டுகளாகத் தமிழக அரசிடம் மண்டபம் கட்டுவதற்கான இடம் கேட்டு வந்தது. தமிழக அரசு சென்ற ஆண்டு வரை இடம் தராததால், இந்த ஆண்டு நடந்த பாரதி விழாவில், மத்திய அரசுக்குச் சொந்தமாகச் சென்னையிலுள்ள ஓர் இடத்தைத் தந்துதவுமாறு மத்திய அரசிடம் அச்சங்கத் தலைவர் வள்ளல் நா. மகாலிங்கம் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

* தெனாலிராமன், தெலுங்கிலே பல நூல்களை எழுதியிருக்கிறாராமே! உண்மையா?

— எம். பத்மநாபன், விழுப்புரம்.

உண்மைதான். அவர் வெறும் விகடகவி அல்ல. கிருஷ்ணதேவராயரின் சபையிலிருந்த சிறந்த கவிஞர்களில் ஒருவர்! அவர் எழுதிய நூல்கள்: கடிகாசல மான்மியம், இலிங்க புராணம், பாண்டுரங்கர் மகாத்மியம், முதலியன.

* சுடுகாடு என்கிறார்கள். இடுகாடு என்கிறார்கள். இரண்டிற்கும் என்ன வித்தியாசம்?

— பெ. ஏழுமலை, திருத்தணி.

இறந்தவர்களை எரிக்கும் இடம் சுடுகாடு; புதைக்கும் இடம் இடுகாடு.

* அமெரிக்கா என்ற பெயர் எப்படி வந்தது?

— சி. பொன்னுச்சாமி, குடியாத்தம்.



இந்தியாவைக் கண்டுபிடிக்க, கடல் வழியாகச் சில மாலுமிகளுடன் கொலம்பஸ் புறப்பட்டார். அட்லான்டிக் சமுத்திரத்திலுள்ள தீவுகளைக் கண்டுபிடித்த போது, அவற்றை இந்தியாவின் ஒரு பாகம் என்றும், அங்கு பார்த்த மக்களை இந்தியர்கள் என்றும் அவர் தவறாக நினைத்து விட்டார். ஆனால், அவருடன் வந்த ஒரு மாலுமி, "இது இந்தியாவல்ல; இது ஒரு புது உலகம்." என்று கூறினார். அந்த மாலுமியின் பெயர் அமெரிகோ வெஸ்பூச்சி. அந்தப் புது உலகத்திற்கு அந்த மாலுமியின் பெயரிலுள்ள முன் பகுதியையே வைத்து விட்டார்கள்.

* கோகுலத்தில் வெளிவந்த உலகப் புகழ் பெற்ற சிறுவர் கதைகள் புத்தகமாக வெளிவந்திருக்கின்றனவா? யார் வெளியிட்டிருக்கிறார்கள்?

— ஆர். சுரேஷ், பல்லடம்.

இதுவரை வரவில்லை. வருவதற்கான முயற்சி நடந்து கொண்டிருக்கிறது.

* நம் தேசம் சுதந்திரம் பெற உதவி செய்த அன்னி பெசன்ட் அம்மையார் எந்த நாட்டில் எந்த ஊரில் பிறந்தார்?

— ஆ. செந்தில், திருச்சி—5.



இங்கிலாந்து நாட்டில் லண்டன் நகரில்.

* படுத்துக் கொண்டே படிப்பது நல்லதா?

— என். அருள்பிரகாசம், நாகர்கோவில்.

கெடுதல் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனாலும், அப்படிப் படிப்பவர்களில் பலர் அதிக நேரம் படிப்பதில்லை. விரைவிலே தூக்க சாம்ராஜ்யத்துக்குள் புகுந்து விடுகின்றனர்!

* என் தம்பியின் வாயில் பல் சொத்தையாக இருக்கிறது. வாயிலோ அல்லது பல்லிலோ பூச்சி இருக்குமா? அவன் பல்லில் புழுவைப் போல் ஏதோ வெள்ளையாகக் காணப்படுகிறது. அது பூச்சிதானா, அல்லது வேறு ஏதேனுமா?

— த. இராஜராஜன், காங்கேய நகரம்.

உன் தம்பியின் பற்களை நேரில் பார்த்தால் கூட, இக்கேள்விக்குச் சரியான பதில் கூறுவது கடினம். உடனே உன் தம்பியை பல் டாக்டரிடம் அழைத்துச் சென்று காட்டுவதே நல்லது.

* சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதியவர் அடியார்க்கு நல்லார் என்று எழுதியிருப்பதைப் படித்திருக்கிறேன். அடியார்க்கு நல்லார் என்றால், அடிக்காதவர்களுக்கு நல்லவர் என்றுதானே பொருள்? அப்படியானால் அடிப்பவர்களுக்கு....?

— ந. தெய்வசிகாமணி, சென்னை—18.

என்ன தம்பி, இப்படித் தவறாக அர்த்தம் கூறுகிறாயே! அடியார்க்கு நல்லார் என்றால் அடியவர்களுக்கு நல்லவர் என்பதுதான் பொருள். திருஞான சம்பந்தர் பாடிய தேவாரத்தில், சிவபெருமானை 'அடியார்க்கு நல்லார்' என்று குறிப்பிடுகிறார். அந்தப் பெயரையே சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதியவரும் வைத்துக் கொண்டிருக்கிறார்.

* காந்திஜியை எப்பொழுதாவது பார்த்ததுண்டா?.

— பி. அண்ணாத்துரை, சுந்தரபாண்டியபுரம்.

உண்டு. காந்திஜியைப் பார்க்கும் அரிய வாய்ப்பு 1946—ல் கிடைத்தது. சென்னை தியாகராயநகரிலுள்ள இந்தி பிரசார சபையின் வெள்ளி விழாவுக்குத் தலைமை தாங்க வந்தபோது, முதல் நாள் மாலையில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் அவரைக் கண் குளிரக் காணும் பாக்கியம் கிடைத்தது. அதுதான் அவர் தமிழ்நாட்டுக்குக் கடைசியாக வந்தது.

* M.C.C. என்கிறோம். அதன் முழுப் பெயர் என்ன?

— ம. கனகராஜ், திருவண்ணாமலை.

இங்கிலாந்தில் MARYLEBONE CRICKET CLUB என்று ஒரு கிளப் இருக்கிறது. அதைத்தான் M.C.C. என்று சுருக்கமாகக் கூறுகிறார்கள். நம் சென்னையிலுள்ள Madras Cricket Club—ஐயும் நாம் M.C.C. என்றே கூறிவருகிறோம்.

* கறிவேப்பிலையில் உள்ள வைட்டமின் யாது? அதன் நன்மை என்ன?

— தி. கந்தசாமி, தென்காசி

கறிவேப்பிலையில் வைட்டமின் A,B,C மூன்றும் இருக்கின்றன. கறிவேப்பிலையை கறிகளில் மணத்துக்காகப் போடுகிறோம். துவையல் செய்தும், காரப் பொடி செய்தும் பயன்படுத்துகிறோம். இந்த இலை மட்டுமல்ல, பட்டை, வேர் முதலியனவும் மருந்துக்குப் பயன்படுகின்றன.

* வானொலியில் 'பள்ளி மாணவர்கள், மாணவிகள் விரும்பும் பாக்கு' என்று ஒரு பாக்கை விளம்பரம் செய்கிறார்கள். இது பல ஆயிரம் மாணவர், மாணவிகளைப் பாக்குப் போடத் தூண்டாதா?

— ஆர். லோகநாதன், அனுப்பம்பட்டு.



அப்படி விளம்பரம் செய்வது தவறுதான். நீயும் உன் நண்பர்களும் சேர்ந்து எந்த வானொலி நிலையம் இப்படி விளம்பரம் செய்கிறதோ, அந்த நிலைய இயக்குநருக்கு எழுதினால், நிச்சயம் பலன் கிடைக்கும்.

* பச்சை குத்திக் கொள்வது, நம் நாட்டில் மட்டும்தானா?

— ஆர். பூபதி, வந்தவாசி.

இல்லை. வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, பர்மா போன்ற நாடுகளில் உள்ள மக்களிலும், பலர் பச்சை குத்திக் கொள்ளுகிறார்கள்.

ஆசையை அடக்கிய ரவி

எம்.பி.ராஜசேகர்



கடற்கரையில் கூட்டம் அதிகமாக இருந்தது. மாலை நேரத்தில் காற்று வாங்கக் கடற்கரைக்கு வருவோர்கள் அதிகம். அதிலும் அடுத்த நாள் விடுமுறை நாளாக இருந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். அந்த சனிக்கிழமை வழக்கத்தைவிட கூட்டம் அதிகமாக இருந்தது.

ரவிசங்கரும் தன்னுடைய அப்பா, அம்மா, இரண்டு வயதுத் தங்கை உமாவுடன் கடற்கரைக்கு வந்திருந்தான். ரவிசங்கர் மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனுடைய அப்பாவுக்கு ஒரு மில்லில் கூலி வேலை. வருமானமோ மிகவும் குறைவு. அந்தக் குறைந்த வருமானத்திலும் தன்னுடைய பிள்ளையை நன்றாகப் படிக்க வைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார் அவர். தம் மகனை நல்லதொரு பள்ளிக்கூடத்தில் சேர்த்து, பணம் செலவு செய்து புத்தகங்கள், சீருடைகள் வாங்கிக் கொடுத்து கஷ்டப்பட்டுப் படிக்க வைத்தார். ரவிசங்கரும் படிப்பில் அதிக கவனம் செலுத்திப் படித்து வந்தான். படிப்பிலும் விளையாட்டிலும் முதல் மாணவனாகத் திகழ்ந்தான். பரிசுகள் பல பெற்றான். ஆசிரியர்கள் அனைவரது பாராட்டையும் பெற்ற அவன் இப்போது படிப்பது ஐந்தாம் வகுப்பில்.

ரவிசங்கரின் குடும்பம் ஏழ்மையில் வாழ்ந்து வந்ததால், சினிமா, டிராமா என்று காசு செலவழித்துப் பொழுதைப் போக்க அவர்களால் முடியவில்லை. பணச் செலவில்லாமல் பொழுதுபோக்க, ஏழைகளுக்காகவே கடற்கரையைக் கொடுத்திருக்கிறார் கடவுள். ஆகவே, அவர்கள் மாதத்திற்கு இரண்டு முறையாவது கடற்கரைக்குவருவார்கள். விளையாட்டைத் தவிர அது ஒன்றுதான் அவனது பொழுது போக்கு. ரவிசங்கரின் அப்பா படிக்காதவர் என்றாலும் நல்ல பண்புகள் நிறைந்தவர். தம்முடைய மகனின் படிப்பைப் பற்றி அடிக்கடி பள்ளி ஆசிரியர்களிடம் ஆர்வத்துடன் விசாரிப்பார். மகனின் தேவைகளுக்காக என்ன வேண்டுமானாலும் செய்வார்.

ரவிசங்கர் பெற்றோருடனும் தங்கையுடனும் கடற்கரை மணற்பரப்பில் அமர்ந்தான். அவர்களைச் சுற்றிலும் கூட்டம் அதிகமாக இருந்தது. கடலில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை கடல் நீரும், மணற்பரப்பில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மக்கள் கூட்டமும் இருந்தது. குதிரைச் சவாரி செய்பவர்களும், பலகாரங்களை உண்பவர்களும், டேப் ரிகார்டரில் பாட்டுக்

கேட்டுக் கொண்டிருந்தவர்களும் தத்தம் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். சுண்டல் விற்கும் சிறுவர்கள் கைகளில் பெரிய தகர டின்களைத் தூக்கிக் கொண்டு, ''சுண்டல், முறுக்கு, வடை'' என்று கூவி விற்றுக் கொண்டு இருந்தனர்.

ஆனால் ரவிசங்கர் கடல் அலைகளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனது மவுனத்தைக் கண்ட அவன் அப்பா, ''என்னப்பா ரவி, ஒரு மாதிரியாக இருக்கிறாய்? என்ன சிந்தனை? வழக்கமாகக் கடற்கரைக்கு வந்தால் மகிழ்ச்சியாக இருப்பாயே? இன்று என்ன ஆயிற்று உனக்கு?'' என்று கேட்டார்.

அதுவரை தன்னைச் சுற்றியிருந்தவர்கள் எழுப்பிய சத்தங்களையும், சுண்டல் முறுக்கு ஒலிகளையும் பற்றிக் கவலைப்படாமல், கடல் அலைகளையே உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்த ரவி, ''ஒன்றுமில்லை அப்பா, கடல் அலையை எப்படி அடக்குவது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்'' என்றான். 'கடல் அலைகளைக் கூட அணை போட்டுத் தடுத்து விடலாம். ஆனால், மனத்தை, மனத்தில் தோன்றும் ஆசைகளை, அடக்குவது கடினம்'' என்று அவன் பள்ளிக்குச் சமீபத்தில் வந்திருந்த பெரியவர் ஒருவர் கூறியது அவன் மனத்தில் ஒலித்துக் கொண்டேயிருந்தது. அவனது அப்பாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

''சார், பலூன், கலர் கலர் பலூன் இருக்கு சார், கையில கட்டுற வாட்ச் இருக்கு சார், தலையில வைக்கிற பூ இருக்கு சார்'' — என்று கூவியவாறே பலூன் வியாபாரி ஒருவன் அவர்கள் அருகில் வந்து நின்றான். ரவிசங்கருக்குத் திடீரென்று ஓர் ஆசை எழுந்தது. 'இதேபோல ஒரு வாட்சைத்தானே விஜய் கட்டிக் கொண்டு வந்து பள்ளியில் எல்லோரிடமும் காட்டிக் கொண்டிருந்தான். நாமும் ஒன்று வாங்கிக் கையில் கட்டிக் கொண்டால், எவ்வளவு நன்றாக இருக்கும்!' என்று நினைத்தான்.

தன் ஆசையை வாய் திறந்து தன் அப்பாவிடம் தெரிவிக்கப் பயந்தான். அதனால் தயங்கித் தயங்கி, ''அப்பா... அப்பா... அதோ அந்த பலூன்காரன் விற்கிறானே அந்த பிளாஸ்டிக் வாட்ச் ஒண்ணு வாங்கித் தாப்பா... எனக்கு ஆசையா இருக்கு...'' என்றான்.

''என்ன ரவி, இதெல்லாம் வாங்குவதற்கு நமக்கு வசதி கிடையாது என்று உனக்குத் தெரியாதா?'' என்றார் அவனது அம்மா. ஆனால் அப்பாவோ, ''பரவாயில்லை. ரொம்ப நாளைக்கு அப்புறம் இப்பத்தானே அவன் ஆசையாகக் கேட்கிறான், சரி, சரி, ரவி நீ மட்டும் வாங்கிக்கோ;.'' என்று கூறிவிட்டு ஐம்பது பைசா நாணயத்தையும் அவன் கையில் கொடுத்தார். ரவி மகிழ்ச்சியுடன் பலூன் காரனைத்திரும்பிப்பார்த்தான். பலூன் காரன் இப்போது சிறிது தூரம் தள்ளிப் போய் நின்று கொண்டு இருந்தான்.

ரவி அவனை நோக்கிச் செல்லும் போது, அவன் தங்கை உமா அழுதாள். கூடவே தானும் வருவேன் என்று பிடிவாதம் செய்தாள்.

''ரவி... தங்கச்சியையும்கூடகூட்டிக்கிட்டுப் போ... பத்திரமா பார்த்துப் போ'' என்று உமாவை அவன் கையில் கொடுத்தார் ரவியின் தாயார்.

பலநாட்களாகத்தன்னுடையமனத்தில் இருந்த ஆசை நிறைவேறப் போகும் மகிழ்ச்சியில் ரவி மிதந்தான். இனி வகுப்பில் தன் நண்பர்கள் எல்லோரிடமும் தன்னுடைய வாட்சைப்

என்ன தேடறாய்?



''சினிமா விட்டதும் அவசரமா ஓடிப் போய் தியேட்டருக்குப் பின்னாடி என்னடா தேடறே?''

''படத்தில் கடைசியா ஒரு ரெயில் போனதே அது எந்தப்பக்கம்போனதுன்னு பார்க்கறேன்!''

— கரடிகுளம் ஜெயபாரதிப்ரியா.



பெருமையாகக் காட்டி மகிழலாம் என்ற சந்தோஷத்தில் தன் தங்கையைத் தோளில் சுமந்து கொண்டு பலூன்காரனை நோக்கி ஓடினான் ரவி.

"இந்த வாட்ச் என்ன விலை?"

"ஐம்பது பைசா."

"ஒண்ணு கொடுங்க."

காசைக் கொடுத்து விட்டு வாட்சைப் பெற்றுக் கொண்டான் ரவி. ஆவலுடன் தன் கையில் கட்டிக் கொண்டான். பலூன்காரன் கையில் இருந்த வண்ண வண்ண பலூன்களைப் பார்த்து பற்கள் தெரியச் சிரித்தாள் உமா. இரு கைகளையும் நீட்டி பலூன்களைப் பிடிக்கத் தாவினாள். வாட்சுடன் தன் பெற்றோர்கள் இருந்த இடத்திற்கு நடக்கத் தொடங்கினான் ரவி. திடீரென்று உமா பலமாக அழ ஆரம்பித்துவிட்டாள். தனக்கு அந்த பலூன் வேண்டும் என்பது போல பலூனைக் காட்டி கையையும் காலையும் உதைத்துக் கொண்டு அழத் தொடங்கிவிட்டாள்.

ரவிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தன்னிடமோ வேறு காசில்லை. அப்பாவிடம் கேட்டுத் தொந்தரவு செய்யவும் அவனுக்கு விருப்பமில்லை. தன் தங்கை உமாவைப் பார்க்கப் பாவமாக இருந்தது அவனுக்கு. எனவே தயங்கித் தயங்கி மீண்டும் பலூன்காரனை நெருங்கினான் ரவி. தனது ஆசைகளை அடக்கிக் கொண்டான். "ஐயா, எனக்கு இப்போது வாட்ச் வேண்டாம், இந்த என் தங்கச்சிக்கு பலூன் வேணுமாம். ஐம்பது காசுக்கு பலூன் கொடுங்கள். நான் வாட்சைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்" என்று வாட்சை நீட்டினான்.

பலூன் காரனும் வாட்சைப் பெற்றுக் கொண்டு ஒரு பெரிய பலூனைக் கொடுத்தான். உமாவின் அழுகை நின்றது. பலூன் கிடைத்த மகிழ்ச்சியில் கன்னத்தில் குழி விழச் சிரித்தாள். தங்கையின் சிரிப்பைக் கண்டு மனத்தைத் தேற்றிக் கொண்டு தன் அப்பா, அம்மாவை நோக்கி நடந்தான் ரவி.

நடந்த நிகழ்ச்சியை அவர்களிடம் கூறினான். ரவியின் அப்பாவும் அம்மாவும் தங்கள் வறுமையை நினைத்து வருந்தினர். ஆனால் ரவி, "பரவாயில்லை அப்பா. நீங்கள் என்னைப் படிக்க வைப்பதே பெரிய விஷயம். எனக்கு எதற்கு வாட்ச் எல்லாம்?" என்று கூறிவிட்டு "அப்பா அப்பா... நான் அந்தக் கடல் அலைகளை மண் சுவர் எழுப்பித் தடுக்கட்டுமா?" என்று கேட்டான். அவனது அப்பாவும் அவனுடைய அந்த ஆசை

யையும் கெடுக்க மனமில்லாமல் 'சரி ரவி... ஆனால், ஜாக்கிரதையாக விளையாடணும்... என்ன...?'' என்று கூறி அனுப்பினார்.

தன் கைகள் நிறைய ஈரமான கடல் மண்ணை அள்ளி அள்ளித் தடுப்புச் சுவர் போல அலைகள் வரும் பகுதியில் கட்டினான் ரவி. ஆனால் ஒவ்வொரு முறையும் அலை வந்து அந்த மணலை அடித்துக் கலைத்துவிட்டுப் போனது. ரவிக்கு மிகவும் வருத்தம். 'கடல் அலையைக் கூட அணை கட்டித் தடுத்து விடலாம். ஆனால் மனத்தைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினம்' என்று பள்ளிக்கு வந்த பேச்சாளர் கூறினாரே! ஆனால், என்னால் கடல் அலைகளைக் கூடத் தடுக்க முடியவில்லையே!' என்று வருந்தினான்.

இதுவரை நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் ஆரம்பத்திலிருந்து கவனித்துக் கொண்டு சிறிது தூரத்தில் உட்கார்ந்திருந்த அவனது பள்ளிக் கணக்கு ஆசிரியர் பாண்டியன் அப்போது அவன் அருகில் வந்தார். ''என்ன ரவி, என்ன செய்கிறாய்?'' என்று கேட்டார்.

உடனே ரவி எழுந்து பள்ளிக்கு வந்த பேச்சாளர் கூறியதைச் சொல்லி, ''என்னால் இந்த அலைகளைக் கூடத் தடுக்க முடியவில்லையே!'' என்று வருத்தத்துடன் கூறினான்.

இதைக் கேட்ட ஆசிரியர் பாண்டியன், ''ரவி, உண்மையில் நீதான் அந்தப் பேச்சாளர் கூறியது போல நடந்து வருகிறாய். நீ ஆசையாய் வாங்க இருந்த வாட்சை உன் தங்கைக்காக விட்டுக் கொடுத்தாயே! உன் ஆசைகளை அடக்கிக் கொண்டாயே! அதுவே மனத்தை அடக்குவது ஆகும். மனத்தில் தோன்றும் ஆசைகளைக் குறைத்துக் கொண்டால் நிம்மதியாக வாழலாம். இந்தக் கடல் அலைகளை மட்டுமல்ல. இந்த உலகத்தையே அடக்கி ஆளக் கூடிய திறமை உனக்கிருக்கிறது., என்னுடன் வா, உனது பெருந்தன்மைக்குப் பரிசாக உனக்கு ஒரு வாட்ச் வாங்கித் தருகிறேன்...'' என்று கூறி, அவன் எவ்வளவோ மறுத்தும் பலூன் காரனை அழைத்து ஒரு வாட்சை வாங்கி ரவிக்குப் பரிசாக அளித்தார்.

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் தொகை 18000



கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினர் தொகை பதினெட்டாயிரத்தைத் தொட்டுவிட்டது! ஆயினும், இன்னும் பலர் உறுப்பினராகச் சேர வேண்டுமென்று விருப்பம் தெரிவித்து எழுதும் கடிதங்கள் தினமும் வந்து கொண்டேயிருக்கின்றன. அவர்களின் ஆர்வத்தைப் பாராட்டுகிறோம். அவர்களையும் விரைவில் உறுப்பினராக மகிழ்ச்சியுடன் சேர்த்துக் கொள்வோம்.

உறுப்பினராகச் சேர விரும்புவோர், கோகுலத்தில் வெளிவரும் அச்சிட்ட உறுப்பினர் மனுவைப் பூர்த்தி செய்து, முழுப் பக்கத்தையும் அப்படியே கத்தரித்து அனுப்ப வேண்டும். பூர்த்தி செய்த பாகத்தை மட்டும் அனுப்பினால், அதைச் சேர்த்து வைக்க எங்களுக்குச் சிரமமாயிருக்கிறது. சிறிய துண்டாக இருப்பதால் சில சமயங்களில் காணாமலும் போய்விடுகிறது!


கோகுலத்தின் அடுத்த இதழில் (மே மாதம்) அச்சிட்ட உறுப்பினர் மனுவை வெளியிடுவோம். உறுப்பினராகச் சேராத 15 வயதுக்கு உட்பட்டவர்கள் அதைப் பூர்த்தி செய்து அனுப்பலாம்.

— ஆசிரியர்

கடவுளைக் கண்டவர்கள்

திருநீறு கண்டார்; தியாகம் புரிந்தார்.

-தேவி-நாச்சியப்பன்



எயினனூர் ஓர் அழகான அமைதியான சிற்றூர். அந்த ஊரில் வாள் மோதும் ஒலியையும் ரத்தம் வெள்ளமாகப் பெருகும் காட்சியையும் மக்கள் பயந்து கொண்டு கூட்டமாக நின்று பார்த்தனர். 'அப்படியானால் எயினனூர் மக்கள் கோழைகளாக இருப்பார்களோ' என்று நீங்கள் நினைக்கலாம். அதுதான் இல்லை. அவர்கள் அனைவரும் வீரம் மிக்கவர்களே. அவர்கள் பயத்திற்கு என்ன காரணம்?

'வேற்று நாட்டவரை ஒன்று கூடி எதிர்க்கும் நம் ஊர்க்காரர்களே ஒருவருடன் ஒருவர் மோதிக் கொள்கிறார்களே! என்ன ஆகுமோ?' என்றுதான் அவர்கள் பயந்தனர். அவர்களுக்குள் எதற்காகப் போர் நடக்கிறது? அது ஓர் உரிமைப் போர். ஆம், வாள் பயிற்சி அளிக்கும் இரு பயிற்சியாளர்களுக்குள் நடக்கும் பலப் பரீட்சை தான் அது!

இந்த எயினனூர் சோழரின் ஆட்சிக்கு உட்பட்ட ஒரு சிறிய ஊர். அந்த ஊரில் வாழ்ந்து வந்த ஏனாதிநாதர் என்பவர் வாள் பயிற்சி அளிக்கும் தொழிலில் ஈடு இணையற்று விளங்கினார். சிறந்த வீரமும், அஞ்சா நெஞ்சமும்கொண்டவர். அதே சமயம் மிகுந்த சிவபக்தியுடையவர். அன்பும், பிறருக்கு உதவும் பெருங்குணமும் பெற்றவர். சோழ அரசர் படையில் சேனாதிபதியாக அவரது முன்னோர் இருந்தனர்.

எயினனூரில் வாட்படைப் பயிற்சிக் கூடம் அமைத்துக் காலையும், மாலையும் வாட்பயிற்சி அளித்து வந்தார். அதன் மூலம் வரும் வருவாயை சிவத்தொண்டர்களுக்காகவே செலவழித்தார்.

ஏனாதி நாதர் சிறந்த சிவபக்தராக விளங்கியதோடல்ல; சிவனை நினைத்து விபூதி பூசிய அடியவர்களையும் வணங்கும் தன்மை உடையவர். அதனால் அவருடைய பகைவர்கள் கூட அவரைப் பெரிதும் மதித்தனர். அப்படிப்பட்ட நல்லவருக்கும் கேடு செய்ய அவ்வூரிலேயே ஓர் எதிரி இருந்தான். அவன் தான் அதிசூரன்.

அதிசூரனும் வாட்படைப் பயிற்சி அளித்து வந்தான். சிறந்த வீரமும், நற்குணமும் நிறைந்த ஏனாதி நாதரிடம் பயிற்சி பெறவே பலரும் விரும்பினர். இதனால் அதிசூரனிடம் பயிற்சி பெறுபவர்களின் தொகை நாளுக்கு நாள்

குறையலானது. அதிசூரனுக்கு ஏனாதி நாதர் மேல் பொறாமை ஏற்பட்டது. நாளடைவில் அது பகையாக மாறியது. அவரிடமிருந்து வாள் பயிற்சி அளிக்கும் உரிமையைப் பறிக்க நினைத்தான்.

ஒருநாள், அதிசூரன் தன் உறவினர்கள், தன்னிடம் பயிற்சி பெற்ற மாணவர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு ஏனாதிநாதரிடம் சென்றான். ''வாட்பயிற்சி தருகின்ற தொழிலின் உரிமை இருவரிடம் இருக்கக் கூடாது. ஒருவரிடமே இருக்க வேண்டும். யாரிடம் இருப்பது என்பதை இன்று முடிவு செய்ய வேண்டும். எனவே, நாம் இருவரும் போர் செய்வோம். வெற்றி பெறுபவருக்கே அவ்வுரிமை'' என்று கூறினான். ஏனாதிநாதரும் அதற்கு உடன்பட்டார். இச்செய்தி அறிந்து ஏனாதிநாதரிடம் பயிற்சி பெற்றவரும், உறவினர்களும் ஓடோடி வந்தனர்.

ஒருபரந்த வெளியில் இருசாராரும் அணிவகுத்து நின்று போர் புரியத் தொடங்கிய ஒலி கடல் ஒலியையும் மிஞ்சுவதாக இருந்தது. வாள் வீரருடன் வாள் வீரரும், வில் வீரருடன் வில் வீரரும் வேல் வீரருடன் வேல் வீரரும் சண்டையிட்டனர். இரு கட்சியினருக்கும் கடுமையாகப் போர் நடந்தது. முடிவில், ஏனாதிநாதரின் படை வெற்றி பெற்றது. அதிசூரனின் படை தோற்றது. அதிசூரன் புறமுதுகு காட்டித் 'தப்பித்தோம், பிழைத்தோம்' என்று ஓடினான்.

புறமுதுகு காட்டி ஓடிய அதிசூரன் அவமானம் அடைந்தான். இரவு முழுவதும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. சிந்தனை செய்து பார்த்தான். 'வஞ்சனையால்தான் ஏனாதிநாதரை வெல்ல முடியும்' என்று முடிவு செய்தான்.

மறுநாள் காலை ஏனாதிநாதரிடம் ஓர் ஆளை அனுப்பி, ''நீரும், நானும் தனியிடத்தில் யாரும் அறியாதவாறு போர் செய்வோம். நமக்காக மற்றவர்கள் வீணாக அழிய வேண்டாம்'' என்று சொல்லச் சொன்னான்.

''உமக்கு அது முறை என்று தோன்றினால் அவ்வாறே செய்வோம்'' என்று கூறி அனுப்பினார் ஏனாதிநாதர்.

ஏனாதிநாதர், அதிசூரன் சொன்ன இடத்திற்கு வாளும், கேடயமும் ஏந்தி வந்து நின்றார். அதிசூரன் ஏனாதி நாதரின் வீரத்தை நன்கு அறிந்தவன். விபூதி அணிந்த நெற்றியுடன் இருப்பவருக்கு அவர் கனவிலும் கெடுதல் நினைக்கமாட்டார் என்பதையும் அவன் அறிந்திருந்தான். எனவே, ஒருநாளும் விபூதி பூசி அறியாத அதிசூரன் அன்று நெற்றி முழுவதும் விபூதி அணிந்து வந்தான்; ஏனாதிநாதருக்குத் தன் முகம் மாத்திரம் தெரியாமல் அதிசூரன் கையில் இருந்த கேடயத்தால் மறைத்துக் கொண்டான். ஏனாதிநாதர் அதிசூரனுடன் வீரமாகப் போரிட்டு, கடைசியில் ஓங்கிய வாளுடன் அவனைத் தாக்க வந்தார். அப்போது அதிசூரன் தன் முகம் நன்றாகத் தெரியும்படி கையிலிருந்த கேடயத்தைக் கீழே இறக்கினான். ஏனாதிநாதர் அப்போதுதான் அவன் நெற்றியில் இருந்த திருநீற்றைப் பார்த்தார். அப்படியே அசையாமல் நின்றுவிட்டார்!

விபூதி அணிந்த இவன் சிவபக்தனாகிவிட்டான். இனி, இவன் என் பகைவனில்லை; நண்பன். இவனை எதிர்ப்பது பாவம்' என்று எண்ணித் தம் கையில் இருந்த வாளையும் கேடயத்தையும் கீழே போட நினைத்தார். ஆனால் போடவில்லை. 'நிராயுதபாணியாக நின்றவனைக் கொன்ற பாவம் சிவபக்தனாக விளங்கும் இந்த அதிசூரனுக்கு வந்துவிடுமே!' என நினைத்து வாளையும், கேடயத்தையும் கையில் எடுத்துக் கொண்டு செயலற்று நின்றார். இதையே எதிர்பார்த்து வந்த அதிசூரன் தன் வாளை வீசி அவரைக் கொன்றுவிட்டான்!

சிவனடியார் போல் வேடம் போடுபவர்களிடம் கூட ஏனாதிநாதர் எப்படி மரியாதை காட்டித் தன் இனிய உயிரையும் துணிந்து கொடுத்தார் என்பதை அறிந்த சிவபெருமான், அவரது பக்தியை மெச்சி, உமாதேவியுடன் தோன்றி அவரைக் கைலாயத்திற்கு அழைத்துக் கொண்டார். அதிசூரனால், ஏனாதிநாதர் உடலைத்தான் அழிக்க முடிந்தது; அவரது புகழ் இன்றும் நின்று நிலவுகிறது.

இப்போது புரிகிறதா? யார் இந்த ஏனாதிநாதர் என்று? இவர்தான் பெரிய புராணம் போற்றும் ஏனாதி நாத நாயனார்!

பிருந்தாவனக் கவியரங்கம்

குருவிக் கூடு

அதோ, அங்கே பாருங்கள்,
அடுக்கு மாடிக் கூட்டினை!

சின்னஞ் சிறிய குருவிகள்
சேர்த்துக் கட்டிய கூடுதான்!



செங்கல் அதிலே இல்லையே!
சிமிட்டி எதுவும் இல்லையே!

அந்த மரத்துக் கிளையிலே
அந்த ரத்தில் தொங்குதே!

— வி. எம். அச்சுதன் (11,453),
விளாங்குப்பம்.

நான் வளர்க்கும் நாய்க்குட்டி

நல்ல நல்ல நாய்க் குட்டி!
நான் வளர்க்கும் நாய்க்குட்டி!
வெள்ளை வண்ண நாய்க்குட்டி!
வீட்டில் வளரும் நாய்க்குட்டி!

முட்டை மீனும் பாலுமே
மூக்கு முட்டத் தின்னுமே!



மேசை அடியில் தூங்குமே!
மெத்தை மேலும் தூங்குமே!

ஆசை கொண்டு எவருமே
அன்பாய் இதனைத் தூக்குவர்.
வாலி னாலே இதுவுமே
வணக்கம், நன்றி செலுத்துமே!

— வி. ரமேஷ் (16089), சென்னை—92.

அம்புலிக்குச் செல்வோம்



அம்புபோன்ற வாகனத்தில் ஏறுவோம்
ஆகாயத்தை ஊடுருவித் தாவுவோம்;
அம்புலிக்கு அருகினிலே இறங்குவோம்;
அதனழகை அருகிலிருந்து நோக்குவோம்!

காற்றுமழை இடிகளையும் வெல்லலாம்;
காலத்தையும் நாமறிந்து சொல்லலாம்;
ஆற்றல் தரும் அறிவியலின் மேன்மையால்,
அனைவருக்கும் இன்பத்தினைச் சேர்க்க
லாம்!

பலவும் கற்றுத் தேர்ந்திடவே எண்ணலாம்;
பக்குவமாய்ச் சோதனைகள் செய்யலாம்;
நிலவுதரும் அற்புதத்தால் மண்ணிலே
நிலவுகின்ற சிறுமைகளைப் போக்கலாம்!

— வே. இராமசாமி (13,494), காரைக்கால்



தக்காளி

சிவந்த நிறத் தக்காளி
செழித்து வளர்ந்த தக்காளி.

பளபளக்கும் தக்காளி
பளிங்கு போன்ற தக்காளி.

எனக்குப் பிடித்த தக்காளி
என்றும் அழகுத் தக்காளி.

தினமும் நாமே உண்பதால்
சிவந்த மேனி அடையலாம்.

— கே. வெங்கிடேசன் (ஜில்) (5114), ஓங்கூர்.

மாமரம்

மாமரமாம், மாமரம்!
மாங்காய் காய்க்கும் மாமரம்,
எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
இருக்கும் நல்ல மாமரம்.



அருமை யான பழங்களை
அதிலே நானும் கண்டேனே!
மரத்தின் மேலே ஏறியே,
மாம்பழத்தைப் பறித்தேனே!

கட்டி வெல்ல மாங்கனி
கடித்து, கடித்துத் தின்றேனே!
கொட்டையை நான் எடுத்தேனே;
கொல்லை யிலே நட்டேனே!

— பா. கணேசன் (16,234), விஜயமாநகரம்.

சிங்காரம் பாட்டு



செக்கச் சிவந்த சிங்காரம் — அவன்
சிவந்த மேனி அலங்காரம் — ஆனால்,

நெஞ்சில் மட்டும் அகங்காரம் — என்றும்
திமிர்ந்து பார்ப்பான் கடிகாரம்.

பாத்திரம் நிறையப் பலகாரம் — உடன்
பறந்து தின்பான் ஆகாரம்.

சுற்றுவான் கோயில் பிராகாரம் — அவன்
துளியும் செய்யான் உபகாரம்.

— எஸ். சீதா (10,518), அவினாசி.

விளையாட்டு! விளையாட்டு!

இருட்டிவிட்டது நன்றாய். விளக்கேற்றிவிட்டு மணியைப் பார்த்தாள். ஆறரை என்றது கடிகாரம். கவலையோடு திரும்ப வாசலுக்குப் போய் எட்டிப் பார்த்தாள். ம்ஹூம்! பிரகாஷைக் காணோம்!

'ஸ்கூல் நாலரைக்கே முடிந்து விடுமே! தினமும் உடனேயே வீட்டுக்கு வருகிறானா என்ன? இல்லையே! ஸ்கூல் முடிந்தவுடன் நேரே புத்தகப் பையுடனேயே விளையாட்டு மைதானத்திற்குப் போய்விட்டு வியர்க்க விறுவிறுக்க ஐந்தரைக்கு மேல்தான் ஓடி வருவான். இன்று இத்தனை நேரமாகி விட்டதே!' இருப்புக் கொள்ளாமல் தவித்தாள்.

நாள் பூராவும் கிரிக்கெட், கோலி, கிட்டிப்புள், என்றே விளையாடிக் காலத்தை ஓட்டும் இந்தப் பிள்ளையை எப்படித் திருத்துவது? லேசாகக் கண்கள் கலங்க, திரும்ப ஒருமுறை வாசல் வரை போக எத்தனித்தவள் அப்படியே நின்றாள்.

வியர்த்து, சட்டையெல்லாம் நனைய, தலை கலைந்து களைப்போடு நின்றான். "அம்மாடி!" என்று கூவியபடியே புத்தகப் பையை மூலையில் தூக்கி 'தொப்'பென்று போட்டான். "அம்மா! சாப்பாடு போடு! சாப்பாடு போடு!" — பறந்தபடியே சமையலறைக்குள் வந்து உட்கார்ந்தான்.

"ம்! இன்றைய வேலையெல்லாம் முடிஞ்சுதா?" என்ற அம்மாவைக் கேள்விக் குறியோடு நிமிர்ந்து பார்த்தான்.

"வேலையா! என்னம்மா சொல்றீங்க?"

"ஆமா! நீ செய்யற ஒரே வேலை — உன்னோட வேலை — விளையாட்டு, அது தான் முடிஞ்சுதான்னு கேட்டேன்."

பிரகாஷுக்குக் குஷி பிறந்தது. "போம்மா!" என்று சிணுங்கினான். "அம்மா! நான் இன்றைக்கு நாலு பவுண்டரி அடிச்சேன், தெரியுமா? இருபத்தொரு ரன் எடுத்தேன்."

"ம்! வீட்டுப் பாடம் எழுதி எத்தனை நாளாச்சு? ம்! நேற்றைக்கு உங்கள் டீச்சரைப் பார்த்தேன். படிப்புங்கறதே இல்லை உங்க பையனுக்குன்னு ரிபோர்ட் சொல்றாங்க!"

"போம்மா! ஸ்கூலிலேதான் நாள் பூரா படிக்கிறேன். போர் அடிக்காது, ஒரே வேலையையே திருப்பித் திருப்பிப் பண்ண? விளையாட்டுல உள்ள இன்ட்ரஸ்ட் எதிலேம்மா வரும்? விளையாட்டிலே இறங்கிட்டா நேரம் போறதே தெரியாது! அதுதான் இன்பம். அது தான் சொர்க்கம். உனக்கு அதெல்லாம் தெரியாதும்மா!" பட்டென்று கூறி விட்டு எழுந்து போனான். அம்மா சாப்பிட்டு வேலைகளை முடித்துவிட்டுப் போய்ப் பார்த்த போது ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்திருந்தான் பிரகாஷ்.

இரவு முழுவதும் தூக்கமின்றிப் புரண்டாள். 'இந்தப் பிள்ளையை எப்படித் திருத்துவது?' என்று யோசித்து யோசித்து ஒரு முடிவுக்கு வந்தவள் அப்படியே தூங்கிப் போனாள்.

மறுநாளும் வந்தது. வழக்கம்போல பிரகாஷ் ஸ்கூலுக்குக் கிளம்பினான். "அம்மா! எங்கே என்னோட டிபன் பாக்ஸ்? இன்னும் ரெடியாகலையா?" பரபரத்தவனைப் பார்த்துச் சிரித்தாள்.

உமா குமார்

''இன்னும் ஆகலே! நீ போ! யார் கிட்டயாவது ஒகொடுத்தனுப்பறேன்!'' பதிலைக் கேட்டு ஆச்சரியப்பட்டவன், ஒன்றும் பேசாமல் புறப்பட்டான்.

ஆனால், அம்மா சொன்னது போல மதியம் சாப்பாடு வரவே இல்லை. பட்டினியாகவே இருந்தவன் மாலை ஸ்கூல் முடிந்து வழக்கம் போல விளையாடி விட்டு ஆறு மணியளவில் வீட்டைநோக்கிப்புறப்பட்டான். நடையில் நிறையச் சோர்வு. நடக்கவே அலுப்பாக இருக்க மெள்ள... மெள்ள ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்தான்.

ஹால் மேஜையில் கேரம் போர்ட் மல்லாந்திருக்க அம்மா, பக்கத்து வீட்டுப் பெண்ணோடு சுவாரஸ்யமாக விளையாடிக் கொண்டிருந்தாள். இவன் வந்தது கூடத் தெரியவில்லை. ''அம்மா!'' தானகவே கூப்பிட்டான். பதிலில்லை. மூலையில் பதுங்கி நிற்கும் காயின் மேலேயே இருந்தது அவள் கவனம் முழுவதும். பொறுமையாகச் சில நிமிடங்களைக் கழித்தவனுக்கு இப்போது எரிச்சல் வந்தது.

''அம்மா! காப்பி!'' — கத்தியவன் குரலுக்குப் பதிலாகத் தலையை மட்டும் திருப்பினாள். ''நடுவிலே குறுக்கிடாதே, பிரகாஷ்! விளையாடறது தெரியல்லே? காஸ் மேலே இருக்கும் எடுத்துக் குடி!'' என்றாள். அவ்வளவுதான்! விளையாட்டில் திரும்பிவிட்டாள்.

அழுகை அடைத்துக் கொண்டு வர அப்படியே நின்றான் பிரகாஷ். 'என்ன இன்றைக்கு? மற்ற நாளாயிருந்தால் இப்படியா அம்மா இருப்பாள்? வாசலிலேயே நின்று கொண்டு உள்ளே வருவதற்கு முன் காப்பியோடு எதிரே வருவாளே! சாப்பாடும் கொடுத்தனுப்பவில்லை?' — விர்ரென்று உள்ளே போய்ப் பார்த்தான். காஸ் மேடையே காலியாக இருந்தது. சமையல் பண்ணவில்லையா? — திரும்ப ஹாலுக்கு வந்தான். ''அம்மா! சாப்பாடு போடும்மா!''

''யாரு சமைச்சிருக்கா?'' — அம்மாவின் குரல் கேட்டு அதிர்ந்தான்.

''இன்னைக்கி சமைக்கவேயில்லையா?'' என்றதும் அம்மா போர்டை விட்டு எழுந்து வந்தாள்.


''ம்ஹூம்! காலையிலே கேரம் விளையாட உட்கார்ந்ததுதான். நேரம்



எப்படிக் கண்டுபிடித்தான்?

சில பெரிய ஹோட்டல்களில் சர்க்கரை போடாமல் காப்பி தருவார்கள். மேஜை மேல் சர்க்கரைக் கிண்ணம் கரண்டியுடன் இருக்கும். தேவையான அளவு போட்டுக் கொள்ளலாம்!

இப்படிப்பட்ட ஒரு ஹோட்டலுக்கு கிட்டு ஒருநாள் போனான். காப்பிக்கு ஆர்டர் செய்தான். காப்பி வந்ததும் தேவையான அளவு சர்க்கரையைப் போட்டுக் கலக்கினான். அப்போது காப்பியில் ஒரு ஈ கிடப்பதைக் கண்டான். உடனே பரிமாறுபவரைப் பார்த்துக் கத்தினான். அவர் ஈ விழுந்த காப்பியை உள்ளே எடுத்துச் சென்றார். சிறிது நேரத்தில், ''இதோ வேறு காப்பி கொண்டு வந்திருக்கிறேன்'' என்று கூறி மேஜை மேல் வைத்துவிட்டுச் சென்றார். கிட்டு ஒரு வாய் சுவைக்க ஆரம்பித்ததும், ''என்னய்யா இது! அதே ஈ விழுந்த காப்பியையே கொண்டு வந்துவிட்டீரே, என்னை ஏமாற்றவா பார்க்கிறீர்?'' என்று ஹோட்டலே அதிரும்படி கத்தினான். பரிமாறுபவர் முகத்தில் அசடு வழிந்தது. கிட்டு எப்படி இதைக் கண்டுபிடித்தான்?



விடை: உண்மையிலே வேறு காப்பியா என்று கண்டுபிடிப்பதற்காக கிட்டு அந்தக் காப்பி வந்ததும் ஒரு வாய் சுவைத்தான். அதில் சர்க்கரை போட்டிருந்தது தெரிந்தது! அங்குதான் வழக்கமாக சர்க்கரை போட்ட காப்பியை சப்ளை செய்வதில்லையே! முன்புதான் சர்க்கரை போட்ட அதே காப்பிதான் அது என்பதைக் கிட்டு கண்டுபிடித்துவிட்டான்!

— வி. ரமேஷ் பாபு (8516),
சென்னை — 18.

போனதே தெரியலை போ! வெரி இன்ட்ரஸ்டிங்! எத்தனை கேம் விளையாடிட்டோம்! அப்பப்பா! நாலு கேம்லே நான்தான் செம்பியன் தெரியுமா?'' — அழுகை அடைத்துக் கொண்டு வர அம்மாவைப் பார்த்தான்.

''என்ன அப்படிப் பார்க்கறே? என்ன, சமைக்கவே இல்லையேன்னு...? தினமும் சமைச்சு, துணி துவைச்சு, பெருக்கி இப்படி ஒரே மாதிரிதானே செய்யறேன். போர் அடிக்காது எனக்கு? இன்னைக்கி அதான் விளையாட்டிலே இறங்கிட்டேன். ஆஹா! நேரம் போனதே தெரியலே. இதுதான் இன்பம், இதுதான் சொர்க்கம். உனக்குத்தான் தெரியுமே விளையாட ஆரம்பிச்சா எல்லாமே மறந்து போயிடும்னு!'' என்றாள்.

அம்மாவை மேலே பேசவிடாது ஓடிப் போய் வாயைப் பொத்துகிறான் பிரகாஷ்! அழுகையை அடக்க முடியாமல், வாய் விட்டுப் பெரிதாக அழுதவனை அணைத்துக் கொள்கிறாள்.

''இப்பப் புரியறதா? விளையாட்டு, விளையாடறதெல்லாம் கொஞ்ச நேரம் தான். முழுநேர வேலை இல்லை அது. அவங்கவங்க கடமையைச் சரியாப் பண்ணணும். உன் கடமை என்ன? படிக்கிறது. அதைச் சரியா முடிச்சதுக்கப்புறம்தான் மத்ததெல்லாம்! உன் வேலையை ஒழுங்காச் செய்யலேன்னு பின்னாலே உனக்குத்தானே கஷ்டம். ம்!''—தேம்பி அழுதவனை அணைத்துக் கொண்டாள் அம்மா.

''சாரிம்மா! இனிமேல் சாயங்காலம் அரை மணி விளையாடிட்டு ஒழுங்கா வீட்டுப் பாடமெல்லாம் செய்கிறேன். அன்றன்றைய பாடத்தை உடனே படிக்கிறேன் அம்மா ஒழுங்கா!''—திருந்திய மகனைப் பெருமையோடு பார்த்தாள், அம்மா.



கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல் (தொடர்ச்சி)


4338 பா. விஸ்வநாத், C 16, லேமஸ் கிளப் ரோடு, பிளாக் 9, நெய்வேலி—1.
4339 ஆர்.கே. புவனேஸ்வரி, D/o. வி. ராமகிருஷ்ணன், உதவி அக்கவுண்ட்ஸ் ஆபீசர், (T.N.E.B.) யூனியன் மில் ரோடு, திருப்பூர்—1.
4340 எஸ். பத்மநாபன், 58/2, பட்டாபிராமன் பிள்ளை தெரு, தென்னூர், திருச்சி—17.
4341 எஸ். ஜெயஸ்ரீ, 58/2, பட்டாபிராமன் பிள்ளை தெரு, தென்னூர், திருச்சி—17.
4342 க. கண்ணன், 3, சிவாஜி தெரு, ஆவடி, சென்னை—71.
4343 க. சௌமியாலக்ஷ்மி, டி 351, அண்ணாநகர், தென்னூர், திருச்சி—17.
4344 ஆர். கோபாலகிருஷ்ணன், 923/1, வடக்கு 2—வது தெரு, புதுக்கோட்டை.
4345 உமிதா பி. தவே, 83, கல்லுக்காரன் தெரு, சென்னை—4.
4346 எஸ். செந்தில் முருகன் S/o. சுப்பிரமணி, உமையாள்புரம்—636 119.
4347 பி. சங்கர், 1/79, தெற்கு வீதி, லக்காபுரம் அஞ்சல், ஈரோடு—2.
4348 க. முருகானந்தம் 132, கருணாவதி நகர், போஸ்டல் காலனி, தஞ்சை—6.
4349 சி. டென்னிஸ் சாம் ஷாஜி, 1A, பர்வதவர்த்தினி தெரு, நாகர்கோவில்—629001.
4350 ஆர். விசுவநாதன், சரபோஜி ராஜபுரம் தெரு, திருவெண்காடு.
4351 கே. சுந்தரம், S/o. என். கிருஷ்ணன், வேதை ரோடு, திருத்துறைப்பூண்டி—614713.
4352 எல். சுபாஷிணி, C/o. பி.எஸ். சுந்தரேச ஐயர், FG நடேச ஐயர் ஸ்டோர், மேல சிந்தாமணி, திருச்சி.
4353 கே. கண்ணன், S/o. வி. கிருஷ்ணமூர்த்தி, இருவேலிப்பட்டு கிராமம்—607 111.
4354 ஆர். கமலவல்லி, பேரூர்—608 701.
4355 வி.எம். சண்முகம், 4/58, அம்மன் கோயில் தெரு, வாரியங்காவல்—621 806.
4356 கே.எஸ். சாந்தி, D/o. கே.என். சுப்பிரமணியம், 1—07 கருமாயா வீதி—3, கோபிசெட்டிபாளையம்—638 452.
4357 க. ஷாஹுல் ஹமீது, 154, காந்தி ரோடு, பண்ருட்டி.
4358 என். மோகன், H—10, ஹவுசிங் யூனிட், ஏற்காடு ரோடு, சேலம்—8.
4359 இளங்கோவன், S/o. வேலுசாமி, V.K.S. மளிகை, நத்தக்கடையூர், பெரியார் மாவட்டம்.
4360 டி. சௌமியா 43A/13 F, LIC நகர், மூலப்பாளையம், ஈரோடு—2.
4361 க. கவிதா, 62, தேவாங்கர் கீழத் தெரு, மதுரை ரோடு, ஸ்ரீவில்லிபுத்தூர்.
4362 எஸ். கிருஷ்ணகுமார், C/o. கே. வெங்கடேஷ், நங்காளி, குன்னூர்—610 203.
4363 எஸ். இராதாகிருஷ்ணன், நொச்சிகுளம், கடம்பூர் அஞ்சல்.
4364 ப. சிவகுமார், காளாஞ்சிபட்டி, மதுரை-மாவட்டம்.
4365 ஆர். ராதாகிருஷ்ணன், 84, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம்.
4366 க. முருகானந்தம், தாழக்குடி, திட்டை—613 003.
4367 ஜி. மணிகண்டன், 34/13, தனலெட்சுமி ஸ்டோர், அரபிகுளத் தெரு, திருச்சி—2.
4368 எஸ். நாராயணன், 4/3, ஈ.வே.ரா. காலனி, மடிப்பாக்கம், சென்னை—91.
4369 சி. மகாலட்சுமி, டி 111, பெரியார் நகர், அகரம், சென்னை—82.
4370 த. செந்தில் குமார், 15, போலீஸ் லைன், அசோக் நகர், சென்னை—83.
4371 எஸ். நாகராஜன், 65, மாரியம்மன் கோவில் தெரு, கொசப்பேட்டை, வேலூர்—632 001.
4372 ஆர். வி. சிவானந்த பாலன், 118, பி.ஆர்.ஓ. காலனி, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை—28.
4373 மொ. கருணாகரன், கோபிநாதம்பட்டி மோட்டூர், சின்னாங்குப்பம்—636 903.
4374 நா. ராஜலட்சுமி, D/o. எல். நாகரத்தினம், கண்டர் அறநிலையம், வேலூர்—638182.
4375 எஸ். சௌந்திரப்ரபா, 9, மெரமெனை வீதி, எஸ். ஆர். கே. வி. போஸ்ட், கோவை—641 020.
4376 அ. தேன்மொழி, D/o. வே. அண்ணாப்பிள்ளை, ஆசிரியர், ஐங்குணம் கிராமம், காணலபாடி—606 611.
4377 பி. ராஜபாண்டியன், 93, சன்னதி தெரு, திருவண்ணாமலை.
4378 இ. குழலி, 5/3, பத்தாவது அவென்யூ, அசோக் நகர், சென்னை—83.

4379 என். பாலாஜி, C/o. சி. நாகராஜன், பிராஞ்ச் மானேஜர், ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, பூலாங்கிணர்—642 122.
4380 ச. சந்திரமோகன், 30, மூன்றாவது தெரு, ஜெகந்நாதபுரம், சேத்துப்பட்டு, சென்னை—31
4381 ஏ.எம். வெங்கடாசலபூபதி, S/o. முத்துசாமி, வெள்ளியங்காடு, அயிக்கவுண்டன், பாளையம், கணபதிபாளையம்—638 153.
4382 எஸ்.எஸ். இராஜ கோபாலன், S/o. சண்முகம், சேரிபாளையம்—642 120.
4383 கி. ஸ்ரீதர், 14/13, N.H. II, மறைமலை நகர், 603 209.
4384 T. அருண்குமார், 12, ஸ்ரீலட்சுமி, 2—ம் தெரு, A.S.G.L. காலனி, காஜா மலை, திருச்சி—23.
4385 ஆர். சிவகுமார், 33, சாமிநாதபுரம் வடக்கு, கரூர்—1.
4386 வித்யா கோபால், 83, சிவசுப்ரமணியம் தெரு, ஆர்.எஸ்.புரம், கோவை—2.
4387 வெ. சீதாராமபிரசாத், 42, தில்லை மேஸ்திரி தெரு, புதுச்சேரி—1.
4388 எஸ். செய்யது முகம்மது பஷீர், மெயின் ரோடு, நியூ மாளிகை, சிக்கவலம், புலியூர், நாகை தாலுகா.
4389 T. வீரராசன், 5, மீனாட்சி செட்டியார் தெரு, தெற்குத் தெரு, அருப்புக்கோட்டை—626 101.
4390 எஸ். அனிதா ஆனந்தி, 3, சின்னையா பள்ளிக்கூடத் தெரு, விருதுநகர்.
4391 எஸ். பத்மினி, 4/3, ஈ.வே.ரா. காலனி, மடிப்பாக்கம், சென்னை—91.
4392 வே. கோபு, 230, KVSS/T.N.E.B., நெத்திமேடு, சேலம்—2.
4393 கே. அருள்சிவா, W-10-S 3/D-28, முத்துசாமிக் கவுண்டர் தெரு, மேலக் கூடலூர்—626 518.
4394 ஆ. செல்வதுரை, 755, 2—வது தெரு, புதூர், அசோக் நகர், சென்னை—83.
4395 கே. ரவி, 70, திருநகர் காலனி, ஈரோடு—638 003.
4396 T.M.R.P. முத்துக்கிருஷ்ணன், முத்துவள்ளி ரைஸ் மில், புல்லாலகோட்டை ரோடு, விருதுநகர்—1.
4397 பி. பாலாஜி, 67, T.M.P. கிட்டங்கித் தெரு, விருதுநகர்—2.
4398 சு. ஜானகி, பிளாட் எண்: 77, இந்திரா காந்தி தெரு, சாலிகிராமம், சென்னை—93.
4399 **S. Sreenivasan, S/o. M. Shankaran, Line Inspector Office of the Addl. Asst. Engineer, Operation, Rural A.P.S.E.B. Maheshwaram-509 350.**
4400 ஜி. சுரேஷ், 35, G.S. தெற்குத் தெரு, மன்னார்குடி—614 012.
4401 **S. Mahalakshmi, 15/549, Kamala Nagar, Anantapur-515 001.**
4402 சொ. சுமதி, 56/F.N.R.T. ரோடு, தேனி.
4403 சி. உதயசங்கர், 56/F, N.R.T. ரோடு, தேனி.
4404 சி. இன்பவல்லி, 56/F, N.R.T. ரோடு, தேனி.
4405 சு. சிவானந்தவல்லி, C-28, CTC காலனி, பொள்ளாச்சி—642 006.
4406 பி. ராஜேஷ் மோகன், S/o. கே. பொன்னையா, வழக்கறிஞர், அசனபவனம், மார்த்தாண்டம்—629 165.
4407 கே. தாரிணி, L-20/C, LIG Flats, நவபாரத் காலனி, கே.கே. நகர், சென்னை—78.
4408 என். சரவணன், 46, ஐயனார் கோயில் தெரு, பெரமனூர், சேலம்—7.
4409 எஸ். கீதா, 54/D, ராஜகணபதி தெரு, அம்மாப்பேட்டை, சேலம்—3.
4410 பி. கிருஷ்ணமூர்த்தி, 54/B, ராஜகணபதி தெரு, அம்மாப்பேட்டை, சேலம்—3.
4411 எஸ். கணேஷ், 5, முத்துராம் முதலி தெரு, சென்னை—4.
4412 எஸ். தமிழரசி, 48, கோட்டை மைதானம், கம்பம், மதுரை மாவட்டம்.
4413 எஸ். சுந்தரேஸ்வர பாண்டியன், 23, ரெகுநாதபுரம், கிழக்குத் தெரு, தேவகோட்டை
4414 செ. குருநாதன், 68, பிள்ளையார் கோவில் தெரு, பனையூர்—627 761.
4415 ஆர். ஸ்ரீதர், G 19, பட்டினப்பாக்கம், சென்னை—28.
4416 வே. பிரேம்குமார், S/o. செ. வேல்முருகன், பள்ளிவாசல் தெரு, இராமேஸ்வரம்.
4417 எஸ். ராஜகோபால், 2, 4வது குறுக்குத் தெரு, கண்ணன் நகர், மடிப்பாக்கம், சென்னை—91.
4418 ம.பு. பாஸ்கர், 1/17, ராஜேஸ்வரி வேதாசலம் தெரு, செங்கற்பட்டு—1.
4419 கு. செந்தில்குமார், 119, திண்டுக்கல் ரோடு, கரூர்—1.
4420 எஸ். ராமசுப்ரமணி, 44 B, காமராசர் காலனி, சேலம்—14.
4421 எம்.பி. சாமிநாதன், 40, சங்கராலயம் ரோடு, சேலம்—1.
4422 ஆர். உதயகுமார், 103, சரோஜினி வீதி, ராம்நகர், கோவை—9.
4423 **P. Swaminathan, M.B. 207/2/, Railway Quarters, Dombivili, 421 202.**
4424 ஜி. விஸ்வநாதன், 81, கன்னி கோயில் தெரு, திருவண்ணாமலை.
4425 ஜி. பார்த்தசாரதி, 81, கன்னி கோயில் தெரு, திருவண்ணாமலை.
4426 ஹ. சுஜாதா, ஸ்ரீ ஹரிகேச நிலையம், ஆலவாய் நகர், மதுரை—18.
4427 ரா. சக்திகுமார், 13/D, தருமகோவில் தெரு, திருவாரூர்—2.

(இன்னும் வரும்)

புதையல் தீவு

டாக்டர் பூவண்ணன்



7. மணியோசை

பெருமாள் கோயில் வெளிக் கோபுரத்தின் உள்ளிடத்தில் ஒரு பழங் காலத்து மணி தொங்கியது. அதற்கு ஒலி எழுப்பும் நாக்கு இல்லை. அதனால் கோயிலின் மணி பல்லாண்டுகளாக ஒலிக்கவில்லை., செங்கோடன் மிக வேகமாக அந்த மணியை நோக்கி ஏறி, அந்த மணியை இணைத்த இரும்புத் தண்டை அடைந்தான். கோபுரத்தின் உள்ளிடத்தில் குறுக்கே சென்ற அந்த இரும்புத் தண்டின் மீதிருந்து நிமிர்ந்து பார்த்தான்.

அங்கே கோபுரம் சிதைந்து, வெற்றிடம் தெரிந்தது. அதன் வழியே ஒருவன் வெளியே போகலாம். செங்கோடன் அந்த வழியே வெளியே வந்து நின்றான். வெற்றிடத்தில் செங்கற்கள் சில தலை நீட்டி: "நாங்களும் விழுந்து விடுவோம்" என்று பயமுறுத்திக் கொண்டிருந்தன. செங்கோடன் குனிந்து அவற்றில் ஒரு செங்கல்லை இழுத்தான். அது அவன் கையோடு வந்துவிட்டது. அந்தக் கல்லைத் தலைக்கு மேலே ஓங்கி பின் கீழே உள்ள மணியின் மீது போட்டான். மறுநொடி 'டங்.....' என்ற வெண்கல ஓசை பிறந்தது. அது அவன் காதில் மிகத் தெளிவாகக் கேட்டது. வேனின் மேலும், வேனுக்கு அருகிலும் நின்றவர்கள் காதிலும் கேட்டது. ஆனால் அதே நேரத்தில் வாண வெடிகள் வெடித்ததால், அதைப் பார்த்த மக்கள் காதுகளில் விழவில்லை.

செங்கோடன் செங்கற்களைப் பறித்து ஒன்றன் பின் ஒன்றாக, மணியின் மீது எறிந்து கொண்டே இருந்தான்.

டங்......

டாங்,.....

டங்......

டாங்......

மணியோசை தொடர்ந்தது..

வாணங்களைக் கொளுத்துகிறவனுக்குச் சரியாகப் பன்னிரண்டு மணியிலிருந்து பத்து நிமிடம் விடாமல் வெடியோசை கேட்குமாறு வாணங்களை விட வேண்டும் என்பது உத்தரவு. கையில் உள்ள கனத்த ஊதுவத்தியின் நெருப்புமுனையைக்கொண்டுவாணங்களின் திரியைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தான். ஒரு வாணத்தைப் பற்ற வைக்கக் குனிந்தபோது, அந்த ஊதுவத்தி கையிலிருந்து தவறிக் கீழே விழுந்துவிட்டது. அதை அவன்

மேலும் குனிந்து எடுத்தான். ஊது வத்தியின் நெருப்பு முனை உடைந்து மண்ணிலே கிடக்க, கறுப்பு ஊது வத்தி மட்டும் அவன் கைக்கு வந்தது. மற்ற வெடிகளை வெடிக்க நெருப்பு வேண்டும். அதற்காக அவன் தனது சட்டைப் பையிலிருந்து தீப்பெட்டியை எடுத்து, ஊதுவத்தியைப் பற்ற வைக்கும் முயற்சியில் ஈடுபட்டான்,

அந்தச் சில விநாடிகள் வெடிச் சத்தம் ஓய்ந்து விட்டது. ஆனால் கோயில் மணியோசை தெளிவாகக் கேட்டது.

வானத்தையே இதுவரை அண்ணாந்து பார்த்து அகமகிழ்ந்து கொண்டிருந்த விஜயமங்கல மக்கள் அந்த நள்ளிரவு 'நேரத்தில் கோயில் மணியோசையைக் கேட்டதும், திடுக்கிட்டார்கள். அனைவர் பார்வையும் கோயில் இருந்த திசையில் திரும்பியது. 'டங்.... டாங்... டங்.....' என்று மணியோசை தொடர்ந்து கொண்டிருந்தது.

அதுவரை என்ன செய்வதென்று தெரியாது தவித்துக் கொண்டிருந்த சுமதி, உடனே உரக்கப் பேசினாள்.

''விஜயமங்கலத்து மக்களே! உங்கள் ஊரின் பழமையான பெருமாள் கோயிலை வெடி வைத்துத் தகர்க்கப் பார்க்கிறார்கள் சிலர். அதைத் தடுக்க முயல்கிறான் செங்கோடன். அவனுக்கு உதவி, கோயிலைக் காக்க ஓடி வாருங்கள்.''

சுமதி சொல்லிவிட்டு முன்னே ஓடினாள். அவள் சொன்னதைக் கேட்ட ஊர் மக்களில் சிலர், ''வாங்க, வாங்க!'' என்று கூறிக் கொண்டே அவள் பின்னே ஓடினார்கள். மற்றவர்கள் அவ்வாறே ஓடினார்கள். 'சுமதி என்ன சொன்னாள்?' என்பதைச் சரியாகக் கேட்காதவர்கள் கூட ஓடினார்கள். மக்கள் கூட்டம் மாபெரும் வெள்ளம் போல் கோயிலை நோக்கிப் பாய்ந்து சென்றது.

வாணவெடிக்காரன், ஊதுவத்தி




யைப் பற்ற வைத்திருந்தான். மக்கள் சென்ற வேகத்தில் வத்தி மீண்டும் கீழே விழுந்தது. அந்த வத்தியும் அவன் கொண்டு வந்திருந்த மற்ற வெடிகளும் மக்களின் காலடிகளில் நொறுங்கின. அவனுக்குக் கோயிலின் உள்ளே என்ன நடக்கிறது என்பது தெரியாது.

வாண வேடிக்கை நடந்த இடத்தில் சினிமாக்காரர்கள் தவிர மற்றவர்கள் யாரும் இல்லை. அனை வரும் கோயிலை நோக்கிச் சென்றனர். கோயில் மணியோசை தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தது.

வேனின் மீது நின்றிருந்த குறுந்தாடிக்காரன் கோயில் மணி ஒலிக்கத் தொடங்கியபோதே கேட்டான். 'அந்த நேரத்தில் மணியோசை எழுப்புவது யார்? அவன் செய்யப் போகும் செயலையறிந்த பெருமாளே மணியோசையை எழுப்புகிறாரோ?' என்று முதலில் அவன் மருண்டான். ஆனால், வெடியோசையில் மணியோசை மக்களை எட்டாது என்று நினைத்தான். அதற்குள் வெடியோசை நின்று மணியோசை மேலோங்கி அவன் செவிப் பறையைக் கிழித்தது. மேலும் சில விநாடிகளில் பெரும் ஆரவாரத்துடன் மக்கள் அலை அலையாகக் கோயிலை நோக்கி வருவதைப் பிறை நிலாவின் குறைந்தஒளியிலும் அவனால் பார்க்க முடிந்தது.

உடனே அவன் எரிந்து வரும் திரியைக் கவனித்தான். திரியின் நெருப்பு மதிலில் ஏறி, அதன் மறுபுறம் இறங்கிக் கொண்டிருந்தது. மக்கள் அங்கு வருவதற்குள் உறுதியாக அது வெடிகளை வெடிக்கச் செய்துவிடும். ஆனால், "அது கூடாது! மக்கள் வரும்போது பிராகாரம் வெடித்து அதனுள்ளே இருப்பது வெளிப்படக் கூடாது!" என்று நினைத்த அவன் வேனிலிருந்து மதிலுக்குத் தாவினான்; மதிலிலிருந்து உள்ளே குதித்தான். சுறுசுறுவென்று ஊர்ந்து கொண்டிருந்த தீப்பொறியைத் தன் பூட்ஸ் காலால் மிதித்துத்



தமிழக அரசின் பரிசு பெற்றோர்

1986 இல் வெளிவந்த குழந்தை நூல்களுக்கான முதல் பரிசு திரு. 'மலையமான்' எழுதிய 'அறிவியல் சிறுகதைகள்' என்ற புத்தகத்திற்கும், இரண்டாவது பரிசு திரு. 'சுப்ரபாலன்' எழுதிய 'மத்தாப்பு' என்ற கவிதைப் புத்தகத்திற்கும் கிடைத்துள்ளன. திருவள்ளுவர் திருநாளில், சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடந்த விழாவில் முதல் பரிசாக ரூபாய் இரண்டாயிரமும், இரண்டாம் பரிசாக ரூபாய் ஆயிரமும் நிதி அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் வழங்கப்பெற்றன.

தேய்த்து அணைத்தான். மீண்டும் அவன் மதில்மேல் ஏறி வேனில் தாவிக் கீழே குதித்தான்.

வேனில் அருகே நின்றிருந்த அவன் கூட்டாளியைப் பார்த்து, "ஆபத்து! சீக்கிரம் வண்டியில் ஏறு!" என்று கூறிக் கொண்டே வேனின் ஒருபுறக் கதவைத் திறந்து, ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்து அதைக் கிளப்பினான். அதற்குள் அவன் கூட்டாளி மறுபுறக் கதவைத் திறந்து கொண்டு வேனில் ஏறினான். குறுந்தாடிக்காரன் வேனை வேகமாகச் செலுத்திச் சென்றான்.

கோயில் மணியோசை தொடர்ந்து ஒலித்தது. செங்கற்களைப் பறித்துப் பறித்துக் களைத்துப் போன செங்கோடன் கொஞ்சம் ஓய்ந்த போது தான், மக்கள் ஆரவாரம் அவன் காதில் கேட்டது. அவன் திரும்பிப் பார்த்தான். மக்கள் கூட்டமாக வருவது தெரிந்தது. கோயிலுக்குள்ளே பார்த்தான். தீப்பொறி உணர்ந்துசெல்லவில்லை. மதிலுக்கு வெளியே வேன் இல்லை. கோபுரத்தில் நின்றபடியே பார்வையைச் சுழற்றினான். கோயிலின் மறுபுறத்தில், தூரத்தில் வெள்ளை வேன் செல்வது தெரிந்தது.

செங்கோடன் கோபுரத்திலிருந்து கீழே இறங்குவதற்கும் மக்கள் கூட்டத்துடன் சுமதி அங்கே வருவதற்கும் சரியாக இருந்தது.

மக்கள், "செங்கோடா, என்ன நடந்தது? இத்தனை ஆண்டுகளாக ஒலிக்காத கோயில் மணி எப்படி ஒலித்தது?" என்று கேட்டனர்.

சுமதிதான் மக்களை எவ்வாறு அழைத்து வர முடிந்தது என்பதைச் சொன்னாள்.

செங்கோடன் கூட்டத்தில் தன் தாயாரைப் பார்த்தான். "அம்மா, வீட்டிலிருக்கும் அரிக்கேன் விளக்கை எடுத்து வா" என்றான். சண்பகம் தன் வீட்டை நோக்கி ஓடினாள்.

சுமதி தன்னை வந்து எழுப்பியதிலிருந்து அதுவரை நடந்த அனைத்தையும் சொல்லி முடித்தான், செங்கோடன்.

"இப்போ இந்தக் கோயிலுக்குள்ளே வெடிங்க இருக்கா? வெடிங்க வெடிக்குமா?" என்று ஒருவர் கேட்டார்.

"வெடிகள் இருக்கு. ஆனால் வெடிக்காது. எப்படியோ அணைஞ்சிட்டுது" என்று சொல்லும்போதே, சண்பகம் அரிக்கேன் விளக்குடன் வந்தாள். செங்கோடன் அந்த விளக்குடன் பிராகாரத்துக்குள் சென்றான். அனுமார்

கோயிலுக்கு எதிரே ஆறு வெடிகள் புதைக்கப்பட்டிருப்பதையும் அவற்றை இணைத்த திரி ஒன்று மதிலுக்கு அருகே செல்வதையும் காட்டினான்.

"இதெல்லாம் நம்ம ஊருக்கு வந்திருக்கிற சினிமா தயாரிப்பாளர் பாபு வேலை. வாண வெடிச் சத்தத்திலே, கோயில் பிராகாரத்திலே வெடி வெச்சுத் தகர்க்கிறது தெரியாதுன்னு நினைச்சுட்டான் சினிமாக்காரன். அவன் திட்டத்தையே வெடி வைச்சுத் தகர்த்துட்டா சுமதி. நம்ம ஊர்க் கோயிலைக் காப்பாத்தினது நான் இல்லே, சுமதிதான்'' என்றான், செங்கோடன்.

சிலர் சுமதியைப் புகழ, பலர் அந்தச் சினிமாக்காரங்களை 'அடிக்க வேண்டும் — உதைக்க வேண்டும்' என்று கூறினர். ஆனால், பெரியவர் ஒருவர் 'அவர்களைப் பிடித்துப் போலீஸில் ஒப்படைக்கலாம்' என்று கூறினார். அக்கருத்தே ஏற்றுக் கொள்ளப்பட்டது. உடனே, சிலர் சினிமாக்காரர்களைத் தேடிச் சென்றனர். சிலர் கோயிலிலேயே விடியும் வரை தங்கினர்.

சினிமாக்காரர்களைப் பிடிக்கச் சென்றவர்கள் ஏமாந்தார்கள். சினிமாக்காரர்கள் தங்கியிருந்த வீட்டில் யாரும் இல்லை. கொஞ்சம் முன்னே வெள்ளை வேன் வந்தது என்றும், உடனே வீட்டிலிருந்த எல்லோரும் போய் விட்டனர் என்றும் எதிர் வீட்டுக்காரர் கூறினார்.

கோயிலிலிருந்து தப்பி ஓடிய பாபு மக்கள் கோயிலில் இருக்கும் போதே நெடுஞ்சாலைக்குச் சென்று, அந்த வழியே ஊருக்குள் வந்து தன் ஆட்களை அழைத்துக் கொண்டு ஓடி விட்டான் என்பது ஊர் மக்களுக்குப் புரிந்தது.

மறுநாள் காலை பதினொருமணிக்குச் சோமு தாத்தா ஊருக்கு வந்தார். கோயிலில் நடந்த நிகழ்ச்சியை அறிந்து திடுக்கிட்டார், போலீஸ்காரர்கள் ஒரு வழக்குப் பதிவு செய்ததுடன், வெடிகளைக் கைப்பற்றினர். அவர்கள் தாத்தாவிடம், "இந்தக் கோயிலுக்குள் வெடி வைப்பதால், அவர்களுக்கு என்ன லாபம்? கோயில் பிராகாரத்தில் புதையல் ஏதாவது இருக்கிறதா?'' என்றும் கேட்டனர்.

தாத்தா, "இல்லை. எனக்குத் தெரிந்த வரை கோயிலிலோ, என் வீட்டிலோ எந்தப் புதையலும் இல்லை. ஆனால், பல ஆண்டுகளாக என் வீட்டில் புதையல் இருப்பதாக ஊரார் கதை கட்டிவிட்டனர். அதைப் போலக் கோயிலில் புதையல் இருப்பதாக யாரேனும் கதை கட்டி விட்டிருக்கலாம். அதை நம்பி அவர்கள் வந்திருக்கலாம். அந்தச் சினிமாக்காரர்களைப் பிடித்தால் எல்லாம் தெரிந்துவிடும்'' என்றார்.

"முயற்சி செய்கிறோம். அவர்களைப்பிடித்தவுடன் சொல்லி அனுப்புகிறோம்'' என்றனர் போலீஸார்.

சோமு தாத்தா ஊர் திரும்பிய மூன்றாம் நாள் மாலை. மணி நான்கு இருக்கும். சோமு தாத்தா, செங்கோட

வீடும், வெளியும்

"வீட்டுக் கணக்கு போட்டுக்கிட்டு வரலேன்னு வாத்தியார் என்னை வெளியே நிக்க வெச்சுட்டார்!''

"வீட்டுக்குப் போகறதுதானே?''

"பள்ளிக்கூடம்போகல்லேன்னு எங்கப்பா என்னை வெளியிலே நிக்க வெச்சிடுவாரே!''

— கடலூர் கன்னியப்பன்.



னுடன் பெருமாள் கோயிலின் பிராகாரத்தில் உள்ள அனுமார் கோயிலின் படியில் உட்கார்ந்திருந்தார்.

''தாத்தா! படப்பிடிப்பு, வாண வேடிக்கை எல்லாம் செய்தது, கோயில் பிராகாரத்தை வெடி வைத்துப் பிளப்பதற்காகத்தான். அப்படியானால், இங்கே என்னமோ இருக்கு! அது என்ன தாத்தா? எனக்குச் சொல்லுங்க தாத்தா'' என்று மூன்று நாட்களுக்குள் மூவாயிரம் முறை கேட்டு விட்டான், செங்கோடன். அதைச் சொல்வதாக வாக்களித்து அவனை அழைத்து வந்திருந்தார். அதனால் செங்கோடன் தாத்தாவின் முகத்தையே ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

தாத்தா பேசினார்:

''செங்கோடா! நீயும் ஊராரும் சந்தேகப்பட்டது உண்மை. இந்தக் கோயிலில் ஒரு புதையல் இருக்கு. அதன் மதிப்பாக நீயும் ஊராரும் தனித் தனியே நினைக்கும் தொகையை ஒன்றாகக் கூட்டினாலும், உண்மையான மதிப்பில் ஒரு தூசாகத்தான் இருக்கும் செங்கோடா! நம்ம குடும்பத்தினர் வழிவழியாகக் காத்து வரும் புதையல் ரகசியத்தை இப்போது நான் உனக்குச் சொல்கிறேன்'' என்று கூறிய தாத்தா, அதைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார்.

(தொடரும்)

இருமொழிகளில் பழமொழிகள்
PARALLEL PROVERBS

தர்மம் தலைகாக்கும்.
Alms never make poor.


ஆள் பாதி ஆடை பாதி.
Apparel makes the man.

கலைஞன் எங்குமே வாழ்கிறான்.
An artist lives everywhere.

இரக்கம் நீதியை வென்றுவிடும்.
Mercy surpasses justice.

விடியற்காலை காணும் கனவு பலிக்கும்.
Morning dream comes true.

நெருப்பில்லாமல் புகையாது.
No smoke without fire



வாளைவிட பேனாவுக்கு வலிமை அதிகம்.
Pen is mightier than the Sword.

தனி மரம் தோப்பு ஆகாது.
One flower makes no garland.

கஷ்டப்பட்டுச் சம்பாதிப்பதே கடைசி வரை இருக்கும்.
Things hardly attained are longer retained.

மௌனம் சம்மதத்தின் அறிகுறி.
Silence means consent.



தினமும் ஓர் ஆப்பிள் சாப்பிட்டால் டாக்டருக்கு வேலையில்லை.
An apple a day keeps the doctor away.

கவிஞன் கவிஞனாகவே பிறக்கிறான். உருவாக்கப்படுவதில்லை.
A poet is born; not made.

தொகுப்பு: எஸ். ஜெயஸ்ரீ (1254),
திருச்சி — 14.

சித்திரப் புதிர்! 19

ஆழி




❶ இது எங்கே உள்ள கொடி?



❷ மிகவும் பிரசித்திப் பெற்ற இந்த மகேசர் சிற்பம் எங்கே இருக்கிறது?



❸ இந்த ஓவியம் எங்கே இருக்கிறது?



❹ தேசப்படத்தில் இந்த அடையாளம் இருந்தால், அந்த இடத்தில் என்ன கிடைக்கும்?



❺ இது அராபிய எண்குறிகளின் பழைய வடிவம். இதற்கு நேராக இப்போது நாம் எழுதும் எண்கள் என்ன?

விடை வேறு பக்கம்

விளையும் பயிர்

டேபிள் டென்னிஸ் சாம்பியன் சேதன்



படத்தில் இருக்கும் சேதன் பபூர் டேபிள் டென்னிஸில் இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரம் என்று கருதப் படுபவன்.

பன்னிரண்டு வயதாகும் சேதன் பபூர் தற்போது இந்தியாவின் சப் – ஜூனியர் நம்பர் – 1. சப் – ஜூனியர் பிரிவில் இன்னமும் இரண்டு ஆண்டு விளையாடும் வாய்ப்பு உள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக தமிழ்நாட்டின் சப் – ஜூனியர் சாம் பியனாக உள்ள சேதன்; சென்ற ஆண்டு மாநிலத்தில் நடைபெற்ற பத்துக்கும் மேற்பட்ட போட்டிகள் அனைத்திலும் வெற்றி பெற்றுத் தனிக் காட்டு ராஜா வாக விளங்குகிறான்.

சென்னை பத்மா சேஷாத்ரி பள்ளி யில் படிக்கும் சேதன், எட்டு வயதில் பொழுதுபோக்கிற்காக டேபிள் டென் னிஸ் விளையாடத் துவங்கிய போது இந்த அளவு வெற்றி பெறுவோம் என்று நினைக்கவில்லையாம். அவனு டைய திறமையை உணர்ந்த திரு. வி. ராமச்சந்திரன் அவனுக்குச் சிறந்த முறையில் பயிற்சி அளித்தார். இப் பொழுது திரு சீனிவாச ராவிடம் பயிற்சி பெறுகிறான்.

தன் வெற்றிக்கு, தன் பெற்றோரின் ஊக்கமும் பள்ளி அதிகாரிகளின் ஊக்கமும் முக்கிய காரணம் என் கிறான். அவன் ஒவ்வொரு முறை வெற்றி பெறும்போதும், பள்ளி மாண வர்களின் கூட்டத்தில் அதை அறி வித்து நல்ல முறையில் ஊக்கு விக்கின்றனராம்.

மாநிலத்தில் சப் – ஜூனியர் பிரி வில் அவனுக்கு ஈடுகொடுக்க யாரும் இல்லாத நிலையில் சேதன் ஜூனியர் பிரிவிலும், சீனியர் பிரிவிலும் பல முன்னணி வீரர்களை வென்றுள்ளான்.

சென்ற முறை மயிரிழையில் கோட்டை விட்ட தேசிய சாம்பியன் பட்டத்தை எப்படியும் இம்முறை பெற்று விடுவது என்ற உறுதியுடன் கடுமையாகப் பயிற்சி செய்து வரு கிறான் சேதன்.

அவன் வெற்றிபெற வாழ்த்து வோம்.

அட்டை வண்ணப்படம்: தகவல்:
ஏ. எஸ். திவாகர்

டாக்டர் பக்கம்

குடல் புழுக்கள்



டாக்டர் கு. கணேசன்

ராகவனைத் தெரியுமா உங்களுக்கு? எங்கள் தெருவின் கீழ்க்கோடியில்தான் அவன் வீடு இருக்கிறது. ராகவன் ஏழாம் வகுப்பில் படிக்கிறான். ஏழைப் பையன். என்றாலும் நன்றாகப் படிப்பான். பொது அறிவுப் போட்டிகளில் பல பரிசுகளைப் பெற்றிருக்கிறான்.

அந்த ராகவன் ஒரு நாள் என்னைச் சந்திக்க வந்தான். எங்கள் சந்திப்பை இங்கே தருகிறேன். உங்களுக்கும் அது உபயோகமாக இருக்கும் —

இதோ ராகவன் வருகிறான்.

ராகவன்: வணக்கம், டாக்டர்!

நான்: வணக்கம். வா, ராகவா! உட்கார்.

ராகவன்: நன்றி டாக்டர்!

நான்: சற்றுமுன்புதான் உன் அம்மாவும் தம்பியும் வந்துவிட்டுப் போனார்கள். உன் தம்பிக்கு ஊசி போட்டு மருந்து, மாத்திரை கொடுத்தனுப்பியிருக்கிறேன்...

ராகவன்: என் தம்பிக்கு என்ன வியாதி டாக்டர்? இரண்டு வாரமாக சரியாகச் சாப்பிடறதில்லை. தூங்கறதில்லை. அடிக்கடி வயிறு வலிக்கிறதென்று சொல்லி அழுகிறான். உடம்பு வேறே மெலிஞ்சுக்கிட்டே போகுது. அம்மாவும் ஏதேதோ வீட்டு வைத்தியம் செய்தாங்க. எதிலேயும் குணமாகலே. கடைசியிலே உங்ககிட்டே வந்திருக்காங்க...

நான்: சரிதான் ராகவன், நானும் உன் தம்பியை முழுமையாகப் பரிசோதிச்சு, வியாதியையும் கண்டுபிடிச்சுட்டேன்.

ராகவன்: அது என்ன வியாதி டாக்டர்? நான் தெரிஞ்சுக்கலாமா?

நான்: ஓ.எஸ்... தெரிஞ்சுக்கலாமே! உன் தம்பிக்கு வந்திருக்கிற வியாதிக்கு 'குடல் புழுத் தொந்தரவு' என்று பெயர். இதையே மருத்துவ ரீதியில் சொன்னால், 'worm infestation' என்று சொல்வோம்.

ராகவன்: என்ன டாக்டர், குடல்லே, புழுக்கள் இருக்குமா? ஆச்சரியமா இருக்கே!

நான்: ஆமாம் ராகவன். சாதாரணமாகவே பெரியவர்களிடத்திலும் சரி, குழந்தைகளிடத்திலும் சரி குடலில்

புழுக்கள் இருக்கும். அதிலேயும் இரண்டுவயசிலிருந்துபதினைந்துவயசு வரைக்கும் உள்ள குழந்தைகளுக்கு குடல் புழுக்கள் அதிகமாக இருக்கும்.

ராகவன்: அந்தக்குடல்புழுக்களைப் பற்றி கொஞ்சம் விளக்கமாய்ச் சொல்லுங்க டாக்டர். நான் தெரிஞ்சுக்கிறேன்.

நான்: சொல்கிறேன், கேள். குடல் புழுக்களில் பல வகை இருக்கு. அவற்றில் நாக்குப் புழு (Round worm), கொக்கிப் புழு (Hook worm), நூல் புழு (Threadworm) என்று சொல்லப்படுகிற மூன்று வகைப் புழுக்கள்தான் அதிகமான பாதிப்பை உண்டாக்கக் கூடியவை. இதில் நாக்குப் புழு ஓர் அடி நீளம் வரை இருக்கும். கொக்கிப் புழு 6 mm. நீளம் வரை வளரும். நூல் புழு அரை அங்குலம் இருக்கும். இந்த நூல் புழுவை நீ கூடப் பார்த்திருப்பாய்...

ராகவன்: எங்கே டாக்டர்?

நான்: நீ மலம் கழிக்கும்போது மலத்தின் மேல் வெள்ளை நிறத்தில் நூல் மாதிரி சின்னச் சின்னப் புழுக்கள் தெரியுமே!

ராகவன்: பார்த்திருக்கிறேன் டாக்டர்.

நான்: அப்புழுக்களுக்குப் பெயர் தான் நூல் புழுக்கள். இவை குடலிலிருந்து மலத்தோடு வெளியே வந்துவிட்ட புழுக்கள். இதே மாதிரி ஆயிரக் கணக்கில் குடலிலும் இருக்கும்.

ராகவன்: எப்படி டாக்டர் இப்புழுக்களெல்லாம் குடலுக்கு வந்தன?

நான்: அதைப் பற்றிக் கொஞ்சம் விரிவாகவே சொல்ல வேண்டும் ராகவன்...

ராகவன்: சொல்லுங்கள் டாக்டர்...

நான்: குடலுக்குள் புழுக்கள் இருக்கும் என்று சொன்னேன் அல்லவா? அப்புழுக்கள் முழு வளர்ச்சி அடைந்ததும் முட்டையிட ஆரம்பிக்கும். அம்முட்டைகள் மலத்துடன் வெளியேறி மண்ணுக்கு வந்துவிடும். குழந்தைகள் அம்மண்ணில் விளையாடும்போது அவர்களின் நகங்களில் முட்டைகள் ஒட்டிக் கொள்ளும். கைகளைச் சரியாகச் சுத்தம் செய்யாமல் சாப்பிடும்போதோ, விரல்களை வாயில் வைத்து சப்பும்போதோ, நகங்களில் சிக்கிக் கொண்ட முட்டைகள் உணவுப்பாதை வழியாக குடலுக்குப் போய்விடும். அங்கே முட்டையிலிருந்து 'லார்வா' எனப்படும் சிறு புழு வெளியாகி குடலின் இரத்த நாளங்கள் வழியாக கல்லீரல், இதயம், நுரையீரல் எல்லாம் பயணம் செய்துவிட்டு தொண்டை வரை வந்து மீண்டும் குடலுக்கு வந்துவிடும். அங்கே பெரிய புழுவாக வளர்ச்சியடையும். இதில் கொக்கிப் புழு லார்வாக்கள் நம் தோலைத் துளைத்துக் கொண்டு உடம்புக்குள் நுழைந்துவிடக் கூடிய திறமை பெற்றவை.

ராகவன்: இந்தக் குடல் புழுக்கள் நம் உடம்பில் இருப்பதனால் என்னென்ன கோளாறுகள் வரும் டாக்டர்?


நான்: அதையும் சொல்கிறேன், கேள். குடலில் வாழும் பெரிய புழுக்கள் நாம் சாப்பிடும் சத்தான உணவையெல்லாம் உறிஞ்சிவிடும். அதனால் நமக்கு, சத்துக் குறைந்து உடம்பு மெலியும்; சோர்வு உண்டாகும். கொக்கிப் புழுக்கள் குடல் சுவரிலிருந்து இரத்தத்தை உறிஞ்சி விடுவதால், நமக்கு இரத்தம் குறைந்து, 'இரத்தச் சோகை (Anaemia) என்ற நோய் வரும். பெரிய புழுக்கள் நூற்றுக் கணக்கில் இருந்தால், குடலை அடைத்துக் கொண்டு, 'குடல் அடைப்பு நோய்' வருவதற்கு வழி செய்து விடும்! இது போக, சாதாரணமாகவே குடற்

கெட்டிக்காரன்

"நாம் பதில் எழுதறதை வைத்தே.. அது காப்பியா, அல்லது படிச்சு எழுதினதான்னு கண்டுபிடிச்சு அந்த வாத்தியார் கொன்னுப்புடுவார்...."

"நல்ல வேளை! நான் காப்பி அடிச்சு எழுதின பரீட்சை பேப்பரில் என் பெயரை எழுதவே இல்லை!

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா



புழுக்கள் குடலை அரித்துக் கொண்டிருக்குமாதலால் குழந்தைகளுக்கு அடிக்கடி வயிற்று வலி, வயிற்றுப் போக்கு, சீதபேதி ஆகியவை உண்டாகும். லார்வா எனப்படும் சிறு புழுக்கள் உடல் உறுப்புகளில் பயணம் செய்யும்போது வாந்தி, இருமல், ஆஸ்துமா போன்ற நோய்கள் வரலாம். நூல் புழுக்கள் இரவு நேரங்களில் ஆசன வாய்க்கு வந்து முட்டையிடுமாதலால், குழந்தைகளுக்கு ஆசன வாயைச் சுற்றி அரிப்பு உண்டாகும். இதனால் குழந்தைகள் இரவு நேரங்களில் சரியாகத் தூங்க மாட்டார்கள்....

ராகவன்: அடேயப்பா... இத்தனை கோளாறுகளா? நான்கூட ஏதோ சாதாரணமாகத்தான் டாக்டர் முதலில் நினைத்தேன். குடற் புழுக்களால் இத்தனை தொந்தரவு வரும் என்று எதிர்பார்க்கவேயில்லை...! சரி, டாக்டர், குடற் புழுக்களை ஒழிக்க மருந்துகள் உண்டா?

நான்: பல மருந்துகள் இருக்கின்றன. அம்மருந்துகளால் நிச்சயம் குடற் புழுக்களை ஒழித்துவிட முடியும். நான் சொன்ன தொந்தரவுகளில் ஏதேனும் ஒன்று இருந்தால்கூடப் போதும். உடனே மருத்துவரை அணுகினால் தகுந்த மருத்துவம் அளிப்பார்.

ராகவன்: ஒருவருக்கு குடற் புழு இருக்கிறது என்பதை எப்படி டாக்டர் உறுதி செய்கிறீர்கள்?

நான்: சந்தேகப்படுபவரின் மலத்தை மைக்ராஸ்கோப் மூலம் பரிசோதித்துப் பார்ப்போம். மலத்தில் காணப்படும் குடற்புழு முட்டைகளைக் கொண்டு இந்த வகைப் புழுக்கள் இவருக்கு இருக்கின்றன என்பதை உறுதி செய்வோம்.

ராகவன்: நல்லது டாக்டர். இக் குடற்புழுக்கள் வராமல் தடுக்க ஏதாவது தடுப்பு ஊசி இருக்கிறதா?

நான்: இல்லை, ராகவன் குடற்புழுக்களுக்கு தடுப்பு ஊசி இல்லை. ஆனால் குடற்புழுக்கள் சுகாதாரக் கேட்டின் காரணமாக வருவதால், நான் சொல்லும் சுகாதார முறைகளைக் கையாண்டால் நிச்சயமாகக் குடற்புழுக்கள் வருவதைத் தடுத்துவிடலாம்.



ஏன் மறுத்தான்?

"அப்பா! என்னை ரிக்ஷாக்காரன் ஸ்கூலுக்கு அழைச்சுக்கிட்டு போக மாட்டானாம்!"

"ஏன்?"

"என்னோட புத்தகப் பைக்கும் சார்ஜ் வேணுமாம்!"

— மணியன் தர்மலிங்கம்.

ராகவன்: அப்படியென்றால் அந்தச் சுகாதார முறைகளை எனக்கும் சொல்லுங்கள் டாக்டர்!

நான்: அவசியம் சொல்கிறேன். கேள். முதலில் நம்மையும் நம் சுற்றுப்புறத்தையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக குழந்தைகளாகிய நீங்கள் காலையிலும் மாலையிலும் நன்றாக உடம்பைத் தேய்த்துக் குளிக்க வேண்டும். எப்போதும் சுத்தமான ஆடைகளை உடுத்த வேண்டும். ஒரு நாள் உபயோகித்த உள்ளாடைகளை (ஜட்டி, அண்டர்வேர்) மறுநாள் நன்றாக அலசிய பின்பே மீண்டும் உபயோகிக்க வேண்டும்.

நகங்களை ஒட்ட வெட்ட வேண்டும்.

சாப்பிடும் முன்பும் சாப்பிட்ட பின்பும் கைவிரல்களை நன்றாகக் கழுவ வேண்டும். அதே மாதிரி மலம் கழித்து கழிவறையிலிருந்து வந்த பின்பும், விரல்களை நன்கு கழுவ வேண்டும்.

சில குழந்தைகளுக்கு விரல்களை வாயில் வைத்துச் சப்பும் பழக்கம் இருக்கும். அந்தக் கெட்ட பழக்கத்தை மாற்ற வேண்டும். இன்னும் சில குழந்தைகளுக்கு மண் தின்னும் பழக்கம் இருக்கும். அப்பழக்கத்தையும் மாற்ற வேண்டும்.

சாப்பிடும் முன்பு பழங்களையும், காய்களையும் தண்ணீரில் நன்றாகக்

கழுவி, சுத்தம் செய்த பிறகே சாப்பிட வேண்டும்.

முடிந்தவரை தண்ணீரை வடிகட்டி காய்ச்சி ஆற வைத்த பின்னரே குடி நீராகப் பயன்படுத்த வேண்டும்.

ஈக்கள் மொய்த்த பண்டங்களை சாப்பிடவே கூடாது.

தெருக்களிலும், சாலையோரங்களிலும் மலம் கழிக்கக் கூடாது. சிறு வயதிலிருந்தே கழிவறையில் மலம் கழிக்கும் பழக்கத்தைக் கொண்டு வர வேண்டும்.

அசிங்கமான இடங்களிலும், பொதுமக்கள் மலம் கழிக்கும் பொது இடங்களிலும் குழந்தைகள் விளையாடக் கூடாது. மண்ணில் விளையாடினால் வீட்டிற்குள் வந்ததும் கைகளை சுத்தமாகக் கழுவ வேண்டும்.

சிறுவயதிலிருந்தேகாலில்செருப்புகள் அணிந்து நடக்க வேண்டும்.

ராகவன்: ஆக, குடற்புழுக்களை ஒழிக்க வேண்டுமென்றால் மருந்து, மாத்திரைகளை மட்டுமேநம்பியிராமல், சுத்தத்தையும், சுகாதார முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டியது ரொம்ப ரொம்ப அவசியம், இல்லையா டாக்டர்?

நான்: சரியாகச் சொன்னாய், ராகவா! அதுதான் உண்மை!

ராகவன்: நன்றி, டாக்டர்! உங்கள் பொன்னான நேரத்தில் சில நிமிடங்களை எனக்காகச் செலவழித்து குடற்புழுக்களைப் பற்றி விரிவாகச் சொன்னீர்கள்; அவற்றைத் தடுக்க வேண்டிய தன் அவசியத்தையும் புரிய வைத்தீர்கள். இதை என் நண்பர்களுக்கும் எடுத்துச் சொல்வேன், டாக்டர். மீண்டும் நன்றி.

(விடை பெறுகிறான்.)

சித்திரப் புதிர்–19

விடை:

1. ஐக்கிய நாடுகள் சபை
2. பம்பாய் நகரின் பக்கத்தில் உள்ள எலிபண்டா தீவில்
3. அஜந்தா
4. பெட்ரோலியம்
5. 58472



மாறுவேடம்

மாலை என் ஆறுமுகம்

பள்ளியின் ஆரம்ப மணி அடித்தது.—

மாணவர்கள் அவசர அவசரமாகப் பள்ளிக்குள் சென்று கொண்டிருந்தனர்.

பிச்சைமுத்து என்ற சிறுவன் மட்டும் அழுதுகொண்டு மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். 'சாப்பாட்டிற்கே வழியில்லாமல் பிச்சையெடுத்து வாழுகின்ற நாம், எவ்வாறு பள்ளிக்குச் சென்று படிக்க முடியும்?' என்ற எண்ணம்தான் அவனது அழுகைக்குக் காரணம்.

சிறிது நேரத்தில் மாணவர்கள் அனைவரும் பள்ளிக்குள் சென்று விட்டனர். பின் பிச்சைமுத்துவும் வழக்கம் போல் வயிற்றை வளர்க்கச் சென்று விட்டான்.

— இது அவனது வழக்கமாகவே இருந்து வந்தது.

பன்னீர் என்ற சிறுவன் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் படிப்பில் மட்டுமல்ல; விளையாட்டிலும் மற்றும் பள்ளியில் நடக்கும் கலைநிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு 'சிறந்த மாணவனாக'த் திகழ்ந்தான்.

அவ்வாண்டு நடக்கும் ஆண்டுவிழாவில், 'மாறுவேடப் போட்டி'யில் கலந்து கொண்டான்; பெரிய பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த அவன் 'பிச்சைக்காரன்' வேடத்தில்! இந்த விவரம் அவனுடைய பெற்றோருக்குத் தெரியாது.

ஆண்டுவிழா நாளன்று அவ்வேடத்தில் நடிப்பதற்காகக் 'கிழிந்த உடையும்', காய்ந்த — கலைந்த தலையும், கையில் ஒரு தகர டப்பாவும் — மொத்தத்தில் அசல் பிச்சைக்காரச் சிறுவனாகவே காட்சியளிக்கும்படி நன்கு வேடமிட்டுக் கொண்டான் பன்னீர்.

தத்ரூபமாக நடித்து முதல் பரிசையும் பெற்றான்!

அந்த ஆனந்தத்தில், "இந்த வேஷத்துடனே நான் என் பெற்றோரிடமும் செல்வேன். அவர்கள் என்னை ஒரு 'பிச்சைக்காரன்' என்று நினைக்கும்படி நடிப்பேன். பிறகு என் நடிப்பைக் கண்டு வியந்து பாராட்டும்படி செய்வேன்" என்று எண்ணினான். அதனால், அவ்வேடத்தைக் கலைக்காமல் அப்படியே பிச்சைக்காரனைப் போலவே

வீட்டுக்குச்செல்வதற்காகபஸ்ஸ்டாப் பில் வந்து நின்ருன்.

பஸ் இன்னும்வரவில்லை; காத்திருந் தான்.

அப்போது —

பிச்சைமுத்து அவ்விடத்திற்கு வந் தான். அங்கு நிற்கும் ஒவ்வொருவரிட மாகத் தட்டை ஏந்திப் பிச்சை கேட் டான்... ஒரு சிலர் ஐந்து காசு, பத்து காசு என்று போட்டதை வாங்கிக் கொண்டே வந்தவன், 'யாரது...! நம்மைப் போல் ஒருவன் ஓரமாக நிற் கிருனே...!' என்று அருகில் சென் ருன். பன்னீரையும், அவனது கையில் இருந்த தகர டப்பாவையும் உற்றுக் கவனித்த பிச்சைமுத்து ஒருகணம் யோசித்தான். பின் தனது தட்டில் இருந்த ஒரு 25 பைசா நாணயத்தை எடுத்துப்பன்னீரின் டப்பாவில்போட் டான்!

பன்னீருக்கு என்னவோ போல் ஆயிற்று.

''என்ன இது?'' என்று கேட்டான்.

அதற்குப் பிச்சைமுத்து, ''நீயும் என்னைப் போலப் பிச்சை எடுக்கும் சிறுவன்தானே, உனக்கு ஒருவரும் காசு போடவில்லை போலும். அதனுல் தான் உன் தட்டில் ஒரு காசைக் கூடக் காணவில்லை. எனக்கும் சில நாட் களில் காசு ஏதும் கிடைக்காது. அப் போது நான் மிகவும் வருத்தப்படு வேன். அதைப் போலத்தானே நீயும் வருத்தப்படுவே, அதனுல்தான் பாவம் என்று......''

—இவ்வாறுசொன்னதைக்கேட்ட




பண்பாட்டு விழாவில் பரிசு

சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள ஜவகர் பால பவனில் படிக்கும் சிறுமியர் கர்நாடக ஆதிவாசி நடனத்தை ஆடிக் காட்டி அனைவரது பாராட்டையும் கைதட்டலையும் பெற்றதோடு, முதல் பரிசையும் பெற்றனர். டில்லியில், சென்ற ஜனவரி மாதம் நடந்த பண்பாட்டு விழாவில் 14 மாநிலங் களைச் சேர்ந்த மாணவர், மாணவிகளுடன் இந்த பவனைச் சேர்ந்த 25 மாணவர், மாணவிகளும் கலந்து கொண்டனர்.

ஜவகர் பாலபவன மாணவர், மாணவிகள் ஒருமைப்பாட்டு நடனம் ஆடி இரண்டாம் பரிசுக்குரிய கேடயத்தைப் பெற்றனர். அத்துடன், அங்கு நடந்த நாடகப் போட்டியில் 'சமூக விழிப்புணர்ச்சி' என்ற நாடகத்தையும் நடித்துக் காட்டி மூன்ரும் பரிசு பெற்றுள்ளனர்.

படத்தில், தமிழக ஆளுநர், நிதி அமைச்சர், ஜவகர் பால பவன் இயக்குநர் தை. மரி ஸ்டெல்லா, பரிசு பெறும் குழந்தைகள் முதலியோரைக் காணலாம்.



பன்னீருக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. பின் சுதாரித்துக் கொண்டு, ''ரொம்ப நன்றி! உன் பெயரென்ன? எந்த ஊரு? அம்மா அப்பா இருக்காங்களா?'' என்று கேள்விகளை அடுக்கினான்.

அதற்குபிச்சைமுத்து, தனதுபெயரையும், பக்கத்திலுள்ள ஆண்டியூர் என்றகிராமந்தான் தனதுஊர்என்றும் சொன்னான். உடனே பன்னீர், ''எனக்கும் ஆண்டியூர் போகும் வழியில்தான் வீடு இருக்கிறது. வா, இரண்டு பேரும் பேசிக் கொண்டே போவோம்'' என்றான்.

இருவரும் நடந்தனர்...

''எனக்கு யாரும் இல்லை. நான் ஓர் அனாதை. அக்கிராமத்தில் உள்ள மடத்தில்தான் தங்கியிருக்கிறேன்'' என்று பிச்சைமுத்து மேலும் தொடர்ந்தான். ''எனக்கும்மற்றசிறுவர்களைப்போலப் பள்ளிக்குச் சென்று படிப்பதற்கு ரொம்பவும் ஆசை. ஆனால் முடியவில்லையே!'' என்றுபலவாறுபிச்சைமுத்து தன் ஆசைகளைப் பற்றிச் சொல்லும் போது அவனது கண்களிலிருந்து கண்ணீர் 'பொல—பொல'வென்று கொட்டியது.

அதற்குள் பன்னீரின் 'பங்களா' போன்ற வீடு வந்துவிட்டது.

— இந்நிகழ்ச்சியால் பன்னீர், பெற்றோர்களிடம் தனது நடிப்பைக் காட்டும் திட்டத்தைக் கைவிட்டான்.

''பிச்சைமுத்து நில்லு....'' — என்று சொல்லிவிட்டு வெளிக்கேட்டைத் திறந்து கொண்டு, ''உள்ளே வா'' என்று அழைத்தான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

வழக்கமான நேரத்திற்கு அதிகமானதால் அவனது வரவை எதிர்பார்த்திருந்த அவனது பெற்றோர்கள், இவர்கள் வருவதைக் கண்டனர்.

பன்னீர், ''அம்மா...'' என்று கூப்பிட்டுக் கொண்டு ஓடினான். அவனது குரலை வைத்து அடையாளம் கண்டு கொண்டனர்.

''என்ன இது வேஷம்! இது யாரு உன்னோடு படிக்கும் பையனா?'' என்றாள், அவனது அம்மா.

''இல்லையம்மா...!''

நடந்ததைச் சுருக்கமாகச் சொன்னான்.

அவர்கள் ''அப்படியா?'' என்று ஆச்சரியப்பட்டனர்.

''வாப்பா, பிச்சைமுத்து, வா!'' என்று அழைத்தனர். பிச்சைமுத்துவிற்குஉள்ளேபோகக்கால்கள் கூசின. பன்னீர் அவனது கைகளைப் பிடித்து இழுத்து வந்து உள்ளே உட்கார வைத்தான்.

பன்னீரின் அப்பா, ''தம்பி! இந்தச் சின்ன வயதிலே பிச்சையெடுத்து வறுமையோடு வாழுகின்ற இந்த நிலையிலும் கூட உனக்கு மற்றவர்களுக்கு உதவுகின்ற எவ்வளவு பெரிய மனசு இருக்கு! உனக்கு அப்பா அம்மா யாருமே இல்லையாமே... மேலும் படிப்பதற்கு ரொம்ப ஆசையாமே! பன்னீரோடு இன்னும் ஒரு பிள்ளையாய் நீயும் எங்களோடு இருந்திடு. உன் ஆசைப்படியே பள்ளிக்கூடத்தில் சேர்த்துப் படிக்கவும் வைக்கிறோம்! உன் விருப்பத்தைச் சொல்லுப்பா பிச்சைமுத்து'' என்று உள்ளம் உருகியவராகக் கேட்டார்.

பிச்சைமுத்துவிற்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி! அவனுக்குப் பேச்சு வரவில்லை — ஆனந்தக் கண்ணீர் பெருக அவர்களின் — அந்த மனித தெய்வங்களின் கால்களில் வீழ்ந்து வணங்கினான்.

இப்போது பன்னீரும் — பிச்சைமுத்துவும் அண்ணனும் தம்பியும் போலப் பள்ளிக்குச் சென்று கொண்டு இருக்கின்றனர்!

சார் தபால்!

தந்தையைப் போலப் பிள்ளை!

* திரு. தசாவதானி இராமையாவின் மகனார் 'அஷ்டாவதானி திரு. இரா. கனகசுப்புரத்தினம் அவர்கள் எங்கள் பள்ளிக்கு வந்து தந்தையாரைப்போலவே பல அற்புதங்களைச் செய்து காட்டினார். திருக்குறளில் எந்தக் குறள் கேட்டாலும் சொல்வது, மணியைப் பல முறை அடிக்கக் கடைசியில் எத்தனை முறை மணி அடித்தது என்று கூறுவது, வண்ணங்களை நினைவில் வைப்பது, பூ வைப்பது, போன்ற பல நிகழ்ச்சிகள். நாங்கள் அலை வரும் வியப்பில் ஆழ்ந்து விட்டோம்.

— எஸ். பலராமன், கரடிவாவி.

* பிரகலாதனின் சித்திரக் கதையைப் படித்து மகிழ்ந்தேன். இப்படி விஷ்ணுவின் பத்து அவதாரங்களையும் சுருக்கிச் சித்திரக் கதைகளாகத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

— கிருஷ்ணப்ரியன், மதுரை.

* ஆனந்தியின் 'நாராயண நரசிம்மர்' கதையை எங்களைப் போன்ற பெற்றோர்களும் உற்சாகத்தோடு படிக்கிறார்கள் என்பதை ஆசிரியருக்கு உணர்த்த விரும்புகிறோம்.

— கே. பிரபாலிங்கேஷ், மேலகிருஷ்ணன் புதூர்.

* நாடகச் செம்மல் எஸ். வி. சகஸ்ர நாமம் எழுதிய 'என் குழந்தைப் பருவம்' கட்டுரை படித்தேன். பள்ளிப் படிப்பை அவர் தொடராத போதிலும், நாடக உலகில் வெற்றிக் கொடி நாட்டிப் பலருக்குப் பாடம் போதித்திருக்கிறார்!

— வெ. குருசாமி, திருப்பத்தூர் (வ. ஆ.)

* 'கேளுங்கள்; சொல்லுகிறோம்' பகுதியைக் காணாததால், பெரும் ஏமாற்றமுற்றேன். இருப்பினும் அடுத்த இதழில் வரும் என்பதால் ஆறுதல் அடைந்தேன்.

— ஜி. லட்சுமணன் (12,858), சென்னை — 19.

* 'கேளுங்கள்; சொல்லுகிறோம்' பகுதி வரவில்லைஎன்றவுடன்மனம்வருந்திக்கண்ணில் நீர் வந்தது.

— தங்க கார்த்திகைராஜா, விருத்தாசலம்.

* அடியேன் விரும்பும் விஞ்ஞான விளையாட்டைச் சிறிது காலமாக வெளியிடவில்லையே! விரைவில் வெளியிடுங்கள்.

— மா. அன்பரசன் (13,149), கோவை — 9)

* பிப்ரவரி இதழில் 'வருங்கால நட்சத்திரங்களுக்கு ஒரு போட்டி' கட்டுரையைப் படித்தேன். என் போன்ற கிராமத்துச் சிறுவர்களுக்கும் கிரிக்கெட்டில் ஆர்வம்தான். நாங்கள் கிரிக்கெட்டைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள திரு. குண்டுமணி உதவுவாரா?

— பெ. கலைச்செல்வன், டி. பி. எஸ். புரம்.

* அட்டையில் ஷாலினியின் கையில உள்ள ஆங்கிலப் புத்தகம் தலைகீழாக உள்ளதே! ஒரு வேளை இதுவும் ஷாலினியின் குறும்புத்தனமா, அல்லது கோணங்கித்தனமா?

— ஒரு வாசகி, திருவாரூர்.

* 'மாமா நல்ல மாமா' நல்லதொரு கருத்தைச் சொல்லுகிறது. என் போன்ற சிறுவர்கள் விடுமுறை நாட்களை எப்படிக் கழிக்க வேண்டும் என்று உணர்த்துகிறது இந்தக் கதை.

— வெ. ரமேஷ் (13,780), சென்னை — 33.

* ஈசாப் கதைகளில்தான் எப்படிப்பட்ட கருத்துக்கள் உள்ளன! கோகுலத்தில், அந்தக் கதைகளைச் சொல்லுகிற முறையே புதுமையாகவும் சுவையாகவும் உள்ளது!

— பு. ராஜ்குமார், செஞ்சி.

* ''பணம் ஒரு சின்னம்தான். அதை எவ்வளவுக்கு எவ்வளவு நல்ல வழிகளில் உபயோகப்படுத்துகிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதற்கு மதிப்பு உண்டு; நமக்கும் மகிழ்ச்சி உண்டு'' என்று 'பணத்தின் மதிப்பு' கதையில் அரசர் சொல்வது முழுவதும் உண்மை; அருமையான கதை.

— எஸ். மணிமேகலை, மாங்காடு.

* கலைத்துறையில் ஓர் இளவரசனைக் கண்டு மகிழ்ந்தோம். இளவரசனுக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

— க. மணிவாசகம், க. அல்லிமலர், செங்கற்பட்டு.

* ஒரு பொய் எப்படி ஒன்பது பொய் சொல்லவைக்கிறது, எவ்வாறு குட்டு வெளிப்படுகிறது என்பதை விளக்குகிறது 'பொய்' என்ற கதை.

— த. சீனி, கருங்குழி.

பரதன் அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக, அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 4 3154 3, 4 34 157.

ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரிவட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 473389.

ஆண்டுச் சந்தா: ரூ 24/—; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ 100/—; விமானத் தபால்: ரூ 250/—.



வ.வெ.சு. ஐயர்

தோற்றம்: 2-4-1881 மறைவு: 3-6-1925

Registered as a Newspaper in Sri Lanka

ஹார்லிக்ஸ் பிஸ்கட் இருக்குது ஜாடியிலே
எண்ணிச் சொல்லுங்கள் நொடியிலே!





ஹார்லிக்ஸ்
பிஸ்கட்ஸ்

ஹார்லிக்ஸின் நலமிக்க கரகர மொறுமொறு பிஸ்கட்!

உங்கள் கடைக்காரரிட
இந்தக் கூப்பனைக் கொடுத்தா
80 அல்லது 160 கிராம் ஹார்லிக்ஸ் பிஸ்க
பாக்கெட் ஒன்று வாங்கும்போது, 50 பைச
தள்ளுபடி கிடைக்கு

உங்கள் பெயர் ____________________ வயது ______

விலாசம் ____________________

____________________ ☐☐☐☐☐☐